
www.padippakam.com



வாழ்த்துகள்!

# DR. K. VAITHIANATHAN. MBBS, CCFP

Family Physician குடும்ப வைத்தியர்

Special Interest in
Management of
Asthma, diabetes
Mellitus and male
Sexual dysfunction

விசேடமாக:
தொய்வு நோய்
சலரோகம்
(சர்க்கரை வியாதி)
ஆண்மைக் குறைபாடு

டாக்டர் வைத்தியநாதன்

2100, Ellesmere Road, Suite # 109,
Scarborough, Ontario,
M1H 3B7
(Markham & Ellesmere)

**Tel: (416) 438-2496**
**Fax: (416) 438-8290**

www.padippakam.com

# சமர்ப்பணம்

ஈழவிடுதலைப் போராட்டத்தில்
தம் இன்னுயிரைக் களப்பலிதந்த
அனைத்துப் போராளிகளுக்கும்
சகலவித அடக்குமுறைகளுக்கும்
இரையாகிய பொதுமக்களுக்கும்
இதய பூர்வமான
அஞ்சலியைத் தெரிவிப்பதோடு
இம் மலரை இவர்களுக்கே
சமர்ப்பணம் செய்கின்றோம்.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

குரும்பசிட்டி நலன்புரி சபை - கனடா

19 93

KURUMPASIDDY NALANPURI SABAI - CANADA

சன்மார்க்க தேசத்து
உதயதாரகைகள்
மண்பந்து மேனியெங்கும்
வளர்மதிகளாய் . . . .

படிப்பகம்



‘பெரிய வாத்தியார்’ பொன். பரமானந்தர் அவர்கள்

www.padippakam.com



# நுழைவாயில்...

உட்புகமுன் உங்களோடு ஒரு நிமிடம்.

எம் பொன்வயலான குரும்பசிட்டியின் ஒன்றரை நூற்றாண்டுகால வரலாற்றை ஒன்றரை வருடங்களாக முயன்று, இயன்றவரை பூரணமான தகவல்களோடு, இம் மலர்ஊடாக உங்கள் முன் வைத்திருக்கிறோம். எமது கிராமத்தின் புவியியல் பரிணாம வளர்ச்சிப்படிகள், ஏறத்தாழ நாற்பது ஆண்டு காலத்திற்கு மேலாக தொடர்ச்சியாக சமூக, இலக்கிய பணிகளில் ஈடுபட்ட பெரியோரது விபரங்களையும் நடுநிலை நின்று தந்திருக்கின்றோம்.

எம் கிராமத்தில் இன்று வரை இயல், இசை, நாடகத்துறைகளிலும், நுண்கலைகளிலும் தம்மை இணைத்துக் கொண்டுள்ள கலைஞர்களின் விபரக்கோவை ஒன்றினையும் முன் வைத்துள்ளோம். இவ் விபரக்கோவை முழுமையானதென எம்மால் உறிதி செய்ய முடியாதெனினும் இதனை ஓர் ஆரம்பப்படியாகக் கொண்டு, எதிர்வருங் காலங்களில் பெறப்படும் மேலதிக தகவல்களோடு, இக்கோவை சரிசெய்யப்பட்டு உங்கள் முன் வைக்கப்படும்.

மேலும், கனடா - குரும்பசிட்டி நலன்புரி சபையின் செயற்குழு உறுப்பினர் களின் விபரங்களும் சபையின் செயற்பாடுகளும் ஆரம்பகாலத்திலிருந்து தரப்பட்டுள்ளதோடு, எம் நெஞ்சைவிட்டு அகலாத சில கிராமத்து நினைவுகளையும் தொட்டுக் காட்டி இருக்கிறோம்.

இவ்வளவோடு நிறுத்திக்கொண்டு இம்மலரை நுகர்ந்து மகிழுமாறு வேண்டுகிறோம்.

www.padippakam.com



'பத்திராதிபர்' ஈழகேசரி நா. பொன்னையா அவர்கள்

படிப்பகம்

www.padippakam.com





# குரும்பசிட்டி நலன்புரிச் சபை - கனடா
# மன்ற கீதம்

வாழ்க எங்கள் கண்மணிக் கிராமம்
வான்புகழ் குரும்ப சிட்டி
வாழ்க வல்ல விநாயகர் அம்மன்
மகிழ்ந்தருள் கொழிக்கும் பட்டி. (வாழ்க எங்கள்...)

கல்வியில் சிறந்தோர் கலைகளில் வல்லோர்
கவினுற வளர்த்த பதி
செல்வங்கள் வணிகச் செம்மல்கள் உழைப்பால்
சேர்ந்திடச் செழித்த பதி.

சிறந்தநம் பதியைச் சிறுமதியாளர்
சீர்குலைத் தழித் திடவே
பிறந்தகம் நீங்கி சிதறிநம் இரத்தப்
பிறப்புகள் இடர்ப்படு வார்.

புலம்பெயர்ந் தவர்க்கு உதவிட வந்த
நலன்புரி சபை வாழ்க
நலமுற்று முன்போல் குரும்பைநன் னகரம்
நிலைபெற்று நிதம் வாழ்க! (புலம்பெயர்ந் தவர்க்கு...)

- கவிஞர் வி. கந்தவனம்

படிப்பகம்

www.padippakam.com





# தமிழ்த்தாய் வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்து மளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!

எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி யோங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே!

- சி. சுப்பிரமணிய பாரதியார்

படிப்பகம்

www.padippakam.com





## Canada's National Anthem

O' Canada
O' Canada! Our home and native land!
True patriot love in all thy sons command.
With glowing hearts we see thee rise,
The True North strong and free!
From far and wide, O' Canada,
We stand on guard for thee.
God keep our land glorious and free!
O' Canada, we stand on guard for thee.
O' Canada, we stand on guard for thee

## கனடா தேசிய கீதம்

ஓ கனடா! எங்கள் வீடும் நாடும் நீ!
உன்தன் மைந்தர்கள்
உண்மைத் தேச பக்தர்கள்!
நேரிய வடக்காய், வலுவாய், இயல்பாய்
நீ எழல் கண்டுவப்போம்!
எங்கும் உள்ள நாம், ஓ கனடா
நின்னைப் போற்றி அணிவகுத்தோம்!
எம்நிலப் புகழைச் சுதந்திரத்தை
என்றும் இறைவன் காத்திடுக!

ஓ கனடா, நாம் நின்னைப் போற்றி
அணிவகுத்தோம்!
ஓ கனடா, நாம் நின்னைப் போற்றி
அணிவகுத்தோம்!

மொழிபெயர்ப்பு
கவிஞர் வி. கந்தவனம்

www.padippakam.com



# தலைவரிடமிருந்து...

எம்மவர்க்கு என் இதயம் நிறைந்த வணக்கம்

கனடா - குரும்பசிட்டி நலன்புரிச் சபை ஆறு ஆண்டுகளைப் பூர்த்தி செய்து ஏழாவது ஆண்டில் கால் பதிக்கும் இவ்வேளையில், 'பொன்வயல்' கலைநிகழ்வினூடாக எம்மவர்கள் அனைவரையும் மீண்டும் சந்திக்கக்கிடைத்த வாய்ப்பை எண்ணி அகமிகமகிழ்கிறேன். மேலும், இத் தருணத்தில் சில விடயங்களை நம்மவர்களோடு பகிர்ந்து கொள்வது நன்மை பயக்குமென நம்புகின்றேன்.

1983ஆம் ஆண்டிலிருந்து கூர்மையடையத் தொடங்கிய ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு காவு கொடுக்கப்பட்ட முதற் கிராமமாய் குரும்பசிட்டியே விளங்குகின்றது. ஏறத்தாழ 750 குடும்பங்களைக் கொண்டதும் 1980களின் ஆரம்பத்தில் சீரோடும், சிறப்போடும் எழுந்து நின்றதுமான எமது கிராமம் 1986 இலிருந்து சிறுகச் சிறுக அழிக்கப்பட்டு இறுதியில் 1987 - 03 - 26 இல் முற்றாக அழிக்கப்பட்டது. 1987இன் இறுதிப்பகுதியில் மீண்டும் எம்மவர்கள் எம் கிராமத்திற்குச் செல்ல வழியேற்பட்டது. திரும்பவும் எம் கிராமத்தை பழைய நிலைமைக்கு கொண்டுவர எம் மக்கள் இரவு, பகலாய்ச் செயற்பட்டனர். இந்நேரத்தில் 1990 - 06 - 14 இல் மீண்டும் ஓர் இடப் பெயர்வு. . . ஷெல்அடி. . . குண்டுத்தாக்குதல். . .

இந்நிலையில் 1993 - 08 - 07 இல் எமது சபை தோற்றம் பெற்றது. எமது கிராமத்து நற்பணி மன்றங்களில் இருந்து உதவிகோரி வந்த கடிதங்களே இச்சபை தோன்றக் காரணமாயிற்று. முதலிரு ஆண்டுகள் கவிஞர் வி. கந்தவனம் அவர்களும், அடுத்த இரு ஆண்டுகளும் திருமதி. து. சத்தியபாமா அவர்களும் தலைமை தாங்கிச் சிறப்புற நடாத்திச் சென்றனர். ஆரம்பத்தில் ஈழத்து மண்ணிலே இடம்பெயர்ந்து வறுமையில் வாடுகின்ற எம்மவர்க்கு உதவுவதே ஒரே நோக்கமாக இருந்து வந்தது. ஆயினும் படிப்படியாக எமது சபையின் செயற்பாடுகள் விரிவடையத் தொடங்கின. வருடாந்த ஒன்று கூடல்களின் போது சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் கடந்த மூன்று வருடங்களாக நடாத்தப்பட்டு வருகின்றன. எமது கிராமத்தைச் சேர்ந்த, பொது வாழ்வில் ஈடுபட்டுள்ள பெரியவர்களை அவர்கள் கனடாவிற்கு வரும் வேளைகளில் எமது சபை வரவேற்றுக் கௌரவித்திருக்கின்றது. இவ்வாறு விரிந்து செல்கின்ற எமது செயற்பாடுகளில் ஒன்றாக 'பொன்வயல்' கலைநிகழ்வும் அமைந்திருக்கின்றது.

எமது மக்கள், எமது சொந்தங்கள் செல்வச்செழிப்போடு வாழ்ந்த காலங்கள்போய், சொந்த இருப்பிடங்களை இழந்து திக்கெட்டும் தட்டுத்தடுமாறி ஓடி, சோதனைகளையும் வேதனைகளையும் வாழ்க்கையாக்கிக் கொண்டு மனம் வெந்து கொண்டிருக்கும் நிலைமையில் இத்தகைய கலைநிகழ்வு தேவைதானா என்ற கேள்வி பலர் மனங்களில் வந்து போகலாம்.

எமது கிராமம் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டது. எமது சொந்தங்கள் திசைதடுமாறி ஓடுவதையே வாழ்க்கையாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். எமது கிராமத்துப் பெரியவர்களின் முகங்கள் மறைக்கப்பட்டுவிட்டன. அவர்களது சமூக, கலை, இலக்கியப் பணிகள் அழிக்கப்பட்டுவிட்டன.

www.padippakam.com





எமது வேர்கள் அறுக்கப்பட்டு வருகின்றன. நாம் யார் என்பது நமக்கே மறந்து போய்க் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் எமது பிள்ளைச் செல்வங்களுக்கு நாம் எங்கிருந்து வந்தோம், எத்தகைய கலை, இலக்கிய, பண்பாட்டு விழுமியங்களைக் கொண்ட மண்ணிலிருந்து வந்தோம், ஈழத்தின் சமூக, கலை, இலக்கிய, பொருளாதார வளர்ச்சியில் எமது பங்கு என்ன என்பவற்றைச் சொல்லிக்காட்ட வேண்டிய வரலாற்றுக் கட்டாயம் ஒன்று ஏற்பட்டிருக்கின்றது. இதனைச் செய்யத் தவறுவோமேயானால் எமது பிள்ளைச் செல்வங்களுக்கு அவர்களது பரம்பரையின் அருமை பெருமைகளை மறைத்த பாவிகள் என்ற பழிச் சொல்லுக்கு ஆளாவோம் என்ற எண்ணமே 'பொன்வயல்' என்ற கலை நிகழ்வும் அத்தோடு இம் 'மலரும்' தோற்றம் பெற்றதற்கான காரணமாகும்.

எமது கிராமத்திற்கு கல்வி புகட்டி, விழிப்புணர்வூட்டி, ஒழுக்கம் புகட்டி ஒரு கல்விகற்ற பரம்பரையை உருவாக்கிய பிதாமகர் "பெரியவாத்தியார்" பொன் பரமானந்தர் அவர்களையும் அவரின் அடியொற்றி பல சமூக, கலை, இலக்கிய பெருமக்களை உருவாக்கி எமது கிராமத்தின் பெருமையை நிலைநிறுத்திய பத்திராதிபர் "ஈழகேசரி" நா. பொன்னையா அவர்களையும் மனதில் இருத்தி இந் நிகழ்வினுக்கு 'பொன்வயல்' என்ற பெயரைச் சூட்டியுள்ளோம்.

விழாமலர் - ஓர் பகீரதப் பிரயத்தனம் - ஏறத்தாழ ஓராண்டு கால முயற்சி ஆனாலும் முற்றுப்பெறவில்லை. காரணங்கள் பல. கடிதத் தொடர்புகள் ஒழுங்கின்மை, தொடர்ச்சியான இடப்பெயர்வுகள், ஒட்டுமொத்தமான அழிவுகள். நூற்றைம்பது வருடத் தகவல்களைக் கூட எம்மால் பெறமுடியாமல் இருக்கின்றது. இயன்றவரை முயன்றிருக்கின்றோம். எமது கிராமத்தின் வரலாறு "காய்தல் உவத்தலின்றி" தரப்பட்டிருக்கின்றது. கிராமத்துப் பெரியவர்கள் வரிசையில் எமக்குக் கிடைக்கப் பெற்ற கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.சில கட்டுரைகள் மலர்க் குழுவினரால் வரையப்பட்டுள்ளன. இன்று புலம்பெயர்ந்த நாடுகளில் பலவிதமான சமூக, கலை, இலக்கியப் பணிகளில் நம்மவர்கள் ஈடுபட்டுள்ள போதிலும் சரியான பூரணமான தகவல்களைத் திரட்டுவதில் சில சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளோம்.

எமது கிராமத்தின் மிகப் பழைய விபரங்களை மிக விரைவாக அச்சாக்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. இல்லாவிடின் இப்போ உள்ளவற்றையும் இழந்து விடுவோமென அஞ்ச வேண்டியுள்ளது. இந்த அடிப்படையில் மேலும் இடம்பெற வேண்டிய பிற பெரியார்களைப் பற்றியும், இளந் தலைமுறையினர் பற்றியும் தொடர்ந்து வரும் மலர்களில் வெளியிடமுயற்சி செய்வோம் எனக்கூறிக் கொண்டு, எமது கலை நிகழ்வினையும் இம்மலரையும் நுகர்ந்து மகிழுமாறு எம்மவர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டி அமையும்,

*குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரன்.*
தலைவர்

www.padippakam.com





# செயலாளரிடமிருந்து...

குரும்பசிட்டி நலன்புரிசபை-கனடா 1993ல் ஆரம்பிக்கப்பட்டு இன்று வளர்ந்து வருவதை நோக்கும்பொழுது புளகாங்கிதம் அடைகின்றோம். எவ்வாறாயினும் இது ஒரு முதற்படியே. இயந்திர வாழ்க்கைபோன்ற இன்றைய காலகட்டத்தில் இவ்வாறான அமைப்புக்களின் வளர்ச்சிக்குக் காரணம், மக்களது தியாக சிந்தையும், வளர்ந்துவரும் இளம் சிறார்களின் பண்பாட்டுக்கோலங்களில் ஓரளவேனும் எங்களது பண்பாடும், கலாச்சாரங்களும் ஒட்டிப்பிடிக்காதா என்ற ஏக்கமும்தான் என்றால் தவறில்லை.

நாங்கள் இச் சங்கத்தை ஆரம்பித்த பொழுது எங்கள் மனத்தில் தோன்றிய ஒரே நோக்கம் ஈழத்தில் வாழும் குரும்பசிட்டி மக்களின் நலனே. அதன் பொருட்டு எம்மாலான பணிவினை செய்வதற்கு இச்சபை இச்சபை என்றும் பின்னிக்காது. எதிர்காலத்திலும் எமது சபை இதிலிருந்து வழுவாதென உறுதியாக நம்புகிறோம். வளர்ந்து வரும் இச் சபை இத்துடன் நிறுத்தாது பரந்துபட்ட அளவில் பல நோக்கங்களை நிறைவேற்றலாம் என சிந்தித்தோம், செயலாற்றினோம். பிள்ளைகளின் மனத்தில் எழும் எண்ண அலைகளைப்பற்றி எங்களில் அனேகர் சிந்திப்பதே இல்லை. அதிக அளவில் எங்கள் பிள்ளைச் செல்வங்களை எல்லாம் இக்கலை விழாவில் ஈடுபடுத்தி, அவர்களுக்கும் ஒரு பாரம்பரியம் உண்டு என்பதையும், அவர்கள் யார் என்பதையும் ஓரளவுக்கு அறிவுறுத்தலே இக்கலை விழாவின் நோக்கமாகும். இதன் வெற்றிக்கு அனைவரினதும் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும். எல்லோருக்கும் தங்களின் ஆற்றலை வெளிப்படுத்தக்கூடியளவுக்கு சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. அதற்கும் இதுபோன்ற நிகழ்ச்சிகள் ஒரு சிறந்த சந்தர்ப்பம் அளிக்கும் என்றால் அது மிகையாகாது. மேலும் புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் நம் சிறார்கள் எங்களைப் போன்ற மனநிலை - அதாவது நாம் வாழ்ந்த வாழ்க்கை ஈழத்தில் வாழும் மக்களின் நிலைபற்றிய உணர்வு குறைந்தவர்களாகவே காணப்படுகிறார்கள். எனவே எங்களுடன் இச்சபையின் நோக்கங்களும் வளர்ச்சியும் நின்று விடாது, மேலும் பல்லாண்டு வளர்ந்து ஆலவிருட்சமாக படரவேண்டுமென்றால் இளம் பராயத்தினரை ஊக்குவிக்கவேண்டும். இவ்வாறாக, இது போன்ற நிகழ்ச்சிகளில் சிறுவர்களை ஈடுபடுத்தும் பொழுதுதான், அவர்கள் மனோநிலையில் மாற்றம் ஏற்படுவதுடன், இச்சபையின் முக்கியத்துவத்தையும் உணர்ந்து, இதனைக் கட்டி எழுப்ப முன்வருவார்கள்.

www.padippakam.com



கனடாவில் புலம் பெயர்ந்த நம்மவர்கள், பொருத்தமற்ற தொழில்களோடு இருப்பதோடு மட்டுமன்றி பொருளாதார நெருக்கடிக்குள்ளும் சிக்குண்டு அல்லற்படுகிறார்கள். ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்பதற்கமைய எல்லா அங்கத்தவர்களின் ஒத்துழைப்பினால் இன்று இச்சங்கம் எங்கள் சிறார்களின் பாரம்பரியத்தை ஓரளவுக்குக் கட்டி வளர்ப்பதற்கும், இதில் கிடைக்கும் ஒரு தொகையை தமிழ் ஈழத்தில் வாழத்துடிக்கும் எமது உடன் பிறப்புக்களின் புனர்வாழ்வுக்கு உதவும் முகமாகவும் ஒரு கலைவிழாவை நடத்துகிறது. கலை கலாச்சாரம் மட்டுமன்றி நம்மவர்களின் கல்வி, தொழில், விளையாட்டு போன்றவற்றின் வளர்ச்சியிலும் இச்சபை ஈடுபடவேண்டும். இது போன்ற பல அமைப்புக்கள் இன்று இயங்கிவருவதனால் தான் எங்கள் வாழ்க்கை உயிர்த்துடிப்பாக அமைகிறது. சில சமயங்களில் சில தவறுகள் இந்நிறுவனங்களில் ஏற்படுவதும் உண்மை. அத்தகைய தவறுகளைக் களைய முற்படவேண்டுமே அல்லாமல் அம் முயற்சிகளைக் குழப்பவோ அல்லது தூர விலகி ஓடிவிடவோ கூடாது. மேலும் ஆரோக்கியமான விமர்சனங்கள் சபையின் வளர்ச்சிக்கு மிக முக்கியமானதும் அவசியமானதுமாகும். இச்சபையின் ஊடாக பல விடயங்களைச் சாதிக்கமுடியுமாகையால் இதனைக் கட்டி வளர்க்க எம்மாலான பங்கை மனமுவர்ந்து அளித்து மேன்மேலும் ஓங்கி வளர வழியமைப்போமாக.

## த. சிவலிங்கம்

செயலாளர்.

www.padippakam.com





PRIME MINISTER · PREMIER MINISTRE

*I am delighted to extend my warmest greetings to the readers of Ponvayal as you gather in celebration.*

*Kurumpasiddy Nalanpuri Sabai - Canada plays an important role not only in ensuring that newcomers to Canada feel welcome in their adopted home, but also in preserving and promoting vital cultural links from generation to generation. It is my hope that you will continue to foster such warm fellowship, while at the same time contributing to a strong and harmonious Canada.*

*Please accept my best wishes for every success in meeting the challenges of the future.*

*OTTAWA*
*1999*

www.padippakam.com





# வாழ்த்துச் செய்தி

*கவிமணி* வி. கந்தவனம்
முன்னைநாள் தலைவர் (1993 - 1995)

குரும்பசிட்டி மக்கள் இரும்பையும் கரும்பாக்க வல்லவர்கள் துரும்பையும் இரும்பாக்க வல்லவர்கள். அந்த வல்லமை ஊரை எல்லோரும் ஏத்தும் எழில் நகரமாக்கியது. அந்த எழில் சிங்களப் படைகளின் விழிகளை உறுத்தியது. நகரம் முற்றுக்கையிடப்பட்டது முற்றாகக் குடிபெயர்க்கப்பட்டது. வெடித்தும் இடித்தும் வீழ்த்தப்பட்டது.

பிறந்த பதியை துறந்து சொந்த நாட்டிலேயே அகதிகளாய் மக்கள் அவதியுற்றனர். அவர்களுக்கு உதவுவதற்கென்று கனடாவில் 1993ல் குரும்பசிட்டி நலன்புரி சபை அமைக்கப்பட்டது. மிக அடக்கமாக அங்கு அல்லற்படும் எமது ஊர் மக்களுக்கு உதவிவந்த நலன்புரி சபை இவ்வாண்டு கலைவிழா ஒன்றை முதன்முதலாக 'பொன்வயல்' என்ற பெயரில் நடத்த முன்வந்திருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது.

எமது ஊருக்குப் பெருமை சேர்க்கும் கலைஞர்களை ஒன்றுபடுத்தவும் இளம் கலைஞர்களை ஊக்குவிக்கவும் எமது பாரம்பரியக் கலாச்சார விழுமியங்களை இங்கு வளர்க்கவும் இக் கலைவிழா உதவும் என்பது எனது நம்பிக்கை.

அத்துடன் குரும்பசிட்டியின் வரலாற்றையும் பெருமையையும் எடுத்துக்கூறும் மலர் ஒன்றை வெளியிடும் முயற்சியிலும் செயற்குழு ஈடுபட்டிருப்பதை அறிந்தும் உள்ளம் உவகை அடைகின்றது. இங்குள்ள எமது இளந் தலைமுறையினருக்குத் தமது ஊரைப்பற்றி நன்கு அறிந்துகொள்ள இந்த மலர் நிச்சயம் உதவும். தேவையான ஒரு பணி.

மலர் வேலைகள் செம்மையாக நிறைவேறவும் விழா சிறப்புற நடைபெறவும் எல்லாம் வல்ல குரும்பசிட்டி சித்திவிநாயகப் பெருமானையும் கருணைமிகு முத்துமாரி அம்பாளையும் வணங்கி வாழ்த்துகின்றேன்.

www.padippakam.com





# வாழ்த்துச் செய்தி

திருமதி. து. சத்தியபாமா
முன்னைநாள் தலைவி (1995 - 1997)

கனடாவிலுள்ள குரும்பசிட்டி மக்கள் ஒன்று சேர்ந்து அமைத்த நலன்புரிச் சபை நடத்தும் கலைவிழாவின் போது முதன்முதலாக வெளிவரும் மலருக்கு வாழ்த்துச் செய்தி கொடுப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமையிட்டு பெருமகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன். 1993இல் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கத்தின் வளர்ச்சிக்கு உதவிய குரும்பசிட்டி மக்களுக்கும், நிர்வாக சபையினருக்கும் நன்றி கூற வேண்டும்.

அடுத்துவரும், அதாவது 'மிலேனியம்' பிறக்கும் போது முன்னோடியாக இந்த மலரும், கலைவிழாவும் அமைந்துள்ளன. குரும்பசிட்டி மக்கள் எல்லோரும் ஒற்றுமையுடனும், உணர்வுடனும் தொடர்புவைத்து சபையின் செயற்பாடுகளை வலுவடையச் செய்ய வேண்டுமென்று எனது நல்லாசிகளைக் கூறி வாழ்த்துகின்றேன்.

படிப்பகம்

www.padippakam.com



# குரும்பசிட்டி

## - எம் கிராமத்தின் கதை

திருவும் கல்வியும் சீரும் தழைத்த
அருமருந்தன்னவெம் பிறந்தகத்தாளே
குரும்பசிட்டிப் பெயருடையாளே
சிறுமதியாளருனைச் சீண்டியதாலே
சீர்குலைந்து நீ நிற்கின்றபோழ்தும் உன்
சிறப்பைச் சொல்லச் சிந்தை கொண்டேன்
பெருமைக்குரிய என் தாயே
அருகிருந்தென்னை ஆதரிப்பாயே.

அல்லலுறும் மனங்களுக்கு
ஆறுதலைத் தருகின்ற
எல்லையிலா அருள் சுரக்கும்
எங்கள் முத்து மாரியம்மா
உன்னுடைய இருப்பிடமே
உருத்தெரியா தழிந்த பின்னர்
என்னுடைய ஊர்மக்கள்
எங்குபோய் நீதி கேட்பர்

அரக்கர்கள் வந்தார்கள்
ஆலயம் அழிந்துபோனது
வல்லூறுகள் வந்தன
வாழ்விடங்கள் ஒளிந்து போயின
நாங்கள் இன்னும் வாழ்கின்றோம்
நம்பிக்கை இருப்பதனால்
நாளை எங்கள் பொழுது விடியும்
நம்மவள் விடுவிக்கப்படுவாள்
நந்தமிழீழம் மீண்டும் செழிக்கும்
நம்மவர் மனம் குளிருமென்ற
நம்பிக்கையோடு அழைக்கின்றேன்
என்னோடு வாருங்கள் என்பிறந்தகத்திற்கு

எங்கள் பொற்பதி - குரும்பசிட்டி பற்றி எழுத விழைந்த இப் போழ்தில் - எங்கள் கிராமத்தில் இலங்கை - இந்திய இராணுவ அட்டூழியங்களினாலும், அராஜகங்களினாலும், ஏனைய அனர்த்தங்களினாலும் உயிரிழந்த, உடைமைகளையிழந்த, உறவுகளைப்பறிகொடுத்த அனைத்துச் சீவராசிகளையும் சிலகணமேனும் நினைவில் இருத்திக் கொள்ள வேண்டியது நமது கடமையாகும்.

www.padippakam.com





முத்தமிழின் சந்தத்தில் நித்தமும் தோய்ந்தவர்கள் நிறைந்திருக்கும் கிராமம் குரும்பசிட்டி. "பெரிய உபாத்தியாயர்" பொன். பரமானந்தர், "சட்டம்பியார்" ந. சின்னத்தம்பி, பத்திராதிபர் 'ஈழகேசரி' நா.பொன்னையா, இரசிகமணி கனக செந்திநாதன், கவிமணி வி. கந்தவனம், பண்டிதர் வ. நடராஜன், கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை, கலாகேசரி ஆ. தம்பித்துரை, கலைஞானி அ. செல்வரத்தினம், ஆவணஞானி இரா. கனகரத்தினம் போன்ற பெரியார்கள் பிறந்த - வாழ்ந்த பொன்வயல் குரும்பசிட்டி.

புவியியல் விபரங்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைந்துள்ள சிறிய கிராமம் குரும்பசிட்டி. யாழ்ப்பாண நகரிலிருந்து ஏறத்தாழ 10 மைல் தொலைவில் வடக்கே அமைந்துள்ள எமது கிராமம் 1987 இல் சுமார் 730 குடும்பங்களைக் கொண்டிருந்தது. கல்வியில் மேலோர், கலைவல்லாளர், கமத்தொழில் செல்வர். கைத்தொழில் வித்தகர் பலரும் வாழ்ந்து வந்த எமது கிராமம் இவர்கள் தம் கடின உழைப்பினால் உயர்ந்து சுயமாகவே ஒரு எழில் மிகு நகரமாக வளர்ந்து வந்தது.

ஏறத்தாழ 1.4 சதுரமைல் நிலப்பரப்புக்கொண்ட செம்பாட்டு மண் எமது கிராமம். எமது கிராமத்து பிரதான சந்தி நாற்புற எல்லைகளிலிருந்தும் ஏறத்தாழ சமதூரத்திலே உள்ளது. வடக்கே அச்சுவேலி - தெல்லிப்பளை வீதியிலிருந்தும், கிழக்கே யாழ்ப்பாணம் - பலாலி வீதியிலிருந்தும் தெற்கே குப்பிளான் சந்தியில் இருந்தும் மேற்கே மல்லாகம் - கட்டுவன் வீதியில் இருந்தும் ஏறக்குறைய ஒரு மைல் தூரத்திலேயே பிரதான சந்தி இருக்கிறது.

எமது கிராமத்தின் வட எல்லையில் பலாலி விமான நிலையமும் பலாலி இராணுவத்தளமும், கிழக்கே வயாவிளான் மத்திய மகா வித்தியாலயமும், அமைந்துள்ளன. எமது கிராமத்தை கிழக்கு - மேற்காக ஊடறுத்து நிற்கும் பிரதான வீதி ஈழகேசரி பொன்னையா வீதி. இது யாழ் - பலாலி வீதியையும் மல்லாகம் - கட்டுவன் வீதியையும் இணைக்கிறது. பிரதான சந்தியிலிருந்து தெற்குப்புறமாயுள்ள வீதி குப்பிளான் சந்தியைத் தொட்டு நிற்கிறது. ஈழகேசரி பொன்னையா வீதியிலிருந்து வடக்கு நோக்கி அமைந்துள்ள இரு வீதிகளில் ஒன்று மாயெழு வீதி மற்றையது வவுணத்தம்பை வீதி இவ்விரு வீதிகளும் தெல்லிப்பளை அச்சுவேலி வீதியை இணைக்கின்றன. ஏனைய பல வீதிகளும் உள்ளன. இவற்றை இந்நூலில் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் பார்க்கலாம்.

1850 - 1900 சில விபரங்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்திய காலப்பகுதியில் 'பிரக்கிராசி' சின்னக்குட்டி, முதலித்தம்பி, சிறாப்பர் கனகசபாபதி, கச்சேரி லிகிதர் மேவின் முருகேசு என்பவர்கள் ஆங்கில கல்வியறிவுள்ளவர்களாகவும், பொது விடயங்களில் ஆர்வம் மிகுந்தவர்களாகவும் விளங்கிவந்தனர். திரு. முதலித்தம்பி என்பவருக்குரிய ஒரு காணியின் பெயரே குரும்பசிட்டி என்பதாகும். பின்னாளில் இவருக்குரிய காணி பல சிறு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டுவிட்டது. 'குறும்பர்' என்ற ஒரு படைப்பிரிவினர் முன்னைய நாட்களில் எமது கிராமத்தினூடாகச் செல்லும் வேளையில் அங்கு பாளையம் அமைத்து தங்கியிருந்து சென்றதாகவும், இதற்கு ஆதாரமாக, படைத்தலைவர்கள் அமர்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட பிறைவடிவான 'சந்திரவட்டக்கற்கள்' சித்தி வினாயகர் ஆலயத்தின் தென் கிழக்கு மூலையில் உள்ள திரு. முதலித்தம்பி அவர்களுக்கு சொந்தமாயிருந்த காணித்துண்டொன்றில் இருந்து கண்டெடுக்கப்பட்டதாகவும், தற்போது தமிழீழத்தில் வாழ்ந்து வருபவரான கலைஞானி அ. செல்வரத்தினம் (தியாகன்) இவற்றைச்சேகரித்து வைத்திருந்ததாகவும் அறியக்கூடியதாக இருக்கிறது.

அன்றைய நாட்களில் விவசாயமே எமது கிராமத்தின் முக்கிய தொழிலாக இருந்து வந்தது. 1869 இல் இலங்கைத்தீவில் அரச கல்வி முறை அறிமுகம் செய்யப்படுவதற்கு முன்னர் திண்ணைப் பள்ளிகளிலேயே மாணவர்கள் கல்வி கற்று வந்திருக்கிறார்கள். இத் திண்ணைப்பள்ளிகளில் வாசுதேவ முதலியாரின் புதல்வரான பரமானந்தச் சட்டம்பியார், சட்டம்பி பூதத்தம்பி என்போர் மாணாக்கர்களுக்கு கல்வி புகட்டியிருக்கிறார்கள். அன்றைய காலகட்டத்திற் கூடச் சிறார்கள்

படிப்பகம்

www.padippakam.com



பள்ளிகளுக்கு செல்லாது, பெற்றோர்களால் வேலைக்கு அனுப்பப்பட்ட போது கிராமத்தலைவர் அல்லது கிராமக்கோடு மூலம் பெற்றோர்கள் எச்சரிக்கப்பட்டு அல்லது அபராதம் விதிக்கப்பட்டு பிள்ளைகளின் கல்வி தடையில்லாமல் தொடர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

எமது கிராமத்தில், சித்தி விநாயகர் ஆலயம் அமைந்துள்ள இடத்திற்கு தென்கிழக்கு மூலையாக உள்ள ஒரு நிலப்பரப்பு அன்றைய காலகட்டத்தில் ஒரு திறந்த வெளியாக இருந்ததோடு இலும்பையடி என அழைக்கப்பட்டு வந்திருக்கிறது. இந்த இடத்தில் அன்றைய காலப்பகுதியில் பெரிய அளவில் நாட்டுக் கூத்துக்கள் நிகழ்த்தப்பட்டதாகவும் அயற் கிராமங்களில் இருந்தும் மக்கள் வந்து பங்கு பற்றியதாகவும் அறியக்கூடியதாயிருந்தது.

எமது கிராமத்தில் 'Mary's School' என்று ஓர் பள்ளிக்கூடம் 19 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதிகளில் இருந்திருக்கிறது. இப் பள்ளிக்கூடம் மிஷனரிமார்களாலேயே ஆரம்பிக்கப்பட்டு நடத்தப் பட்டிருக்கிறது. இப் பள்ளிக்கூடத்தில் எமது கிராமத்தவர் மட்டுமன்றி அயற் கிராமத்தவர்களும் கல்வி கற்றிருக்கிறார்கள். இங்கு படித்த ஓரிருவர் (எமது கிராமத்தவர்கள்) எம்மிடையே எண்பதுகளில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இவர்களுடன் உரையாடும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்திருக்கிறது. இது இடையன்புலம் என்று அழைக்கப்படும் இடத்தில் அம்பாள் ஆலயத்தின் பின் புறத்திலேயே இருந்ததாகச் சொல்லப்படுகிறது. எமது கிராமத்தில் இரண்டு பெரிய ஆலயங்களும் பல சிறிய ஆலயங்களும் அமைந்திருந்தன. இரு பெரிய ஆலயங்களில் ஒன்று சித்தி விநாயகர் ஆலயம், மற்றையது அம்பாள் ஆலயம். எமது கிராமத்தில் வாழ்ந்த சட்டம்பி ந. சின்னத்தம்பி என்ற பெரியார் தமது சொந்தப்பொருட்செலவில் இச் சித்தி விநாயகர் ஆலயத்தை புதுப்பித்து அதன் மூல விக்கிரகமான சித்தி விநாயகர் சொரூபத்தை இந்தியாவிலிருந்து வருவித்து பிரதிஷ்டை செய்வித்து கிராம மக்களுக்கு ஒரு வழிபாட்டுத் தலத்தை ஏற்படுத்திக் கொடுத்த பெருந்தகையாளர்.

அம்பாள் ஆலயம் தோன்றிய விதம் மிகவும் விந்தையானது. எமது அயலூரவரான குப்பிளானைச் சேர்ந்த விவசாயப் பெருமக்கள் மன்னார் மாந்தைப் பகுதியில் நெல் அறுவடை செய்து நெற்கதிர்களை மாட்டு வண்டியில் ஏற்றி கொண்டு வரும் போதே இம்மூலவிக்கிரகமான மாரி அம்மன் சொரூபமும் வந்து சேர்ந்தது. இது அங்கு நிலத்தில் புதையுண்டிருந்ததாக ஒரு சாராரும், மாதோட்டத்தில் ஆலயங்கள் வேற்று மதத்தினரால் அழிக்கப்பட்டபோது ஆலய அர்ச்சகர்களால் மரப் பொந்துகளில் மறைத்து வைக்கப்பட்டு பின்னர் கைவிடப்பட்டிருந்த வேளையில் கண்டெடுக்கப்பட்டதாக இன்னொரு சாராரும் கருதுகின்றனர். அம்பாள் ஆலயம் பொதுமக்கள் பலருடைய பங்களிப்போடு வெகுவாக வளர்ந்திருந்தது. முதலில் திருவாளர்கள் கதிரேசு, சரவணை, விதானையார் செல்லத்துரை ஆகியோர் முகாமையிலும் பின்னர் பொதுமக்களால் தெரிவுசெய்யப்பட்ட நிர்வாகக்குழுவினாலும் பரிபாலிக்கப்பட்டுவந்தது.

பிரித்தானிய காலனி ஆதிக்கம் தலையெடுத்திருந்த வேளையில் மிஷனரி நடவடிக்கைகளுக்கு எதிராக பரவலாக எழுந்த தேசியவாதச் சிந்தனைகள் வடபகுதியில் ஆறுமுக நாவலருடைய சமயரீதியான புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு ஒரு விறுவிறுப்பை ஏற்படுத்தியிருந்தன. பெரியவாத்தியார் திரு பொன். பரமானந்தர் அவர்கள் ஆறுமுகநாவலரின் சைவ மறு மலர்ச்சி இயக்கத்தின் பிரதிநிதியாக எமது கிராமத்திற் செயற்பட்டார். எமது கிராமத்திலும், அயற் கிராமங்களிலும் உள்ள சிறுவர்கள் மதமாற்றங்களுக்கு உட்படாமல், ஒழுங்கான முறையில் கல்வி கற்பதற்கு வசதியாக தானே ஒரு பள்ளிக்கூடத்தை நிறுவி மகாதேவ வித்தியாசாலை எனப் பெயரிட்டு 1900 ஆம் ஆண்டில் இருந்து நடாத்தி வந்துள்ளார். இத்தோடுமாத்திரமன்றி எமது கிராமத்தில் 'மயிலிட்டி தெற்கு இந்து வாலிபர் சங்கம்' என்ற பெயருடன் ஒரு சங்கமும் வேறு சில முற்போக்கான இளைஞர்களுடன் சேர்ந்து இவரால் உருவாக்கப்பட்டது. எமது கிராமத்தில் இதுவே எல்லாச் சங்கங்களுக்கும் முதன்மையானதுமாகும். எழுத்து அறிவித்தவன் இறைவனாதலால், இப்பெருமகனும் ஒரு இறைமகனே. இப்புண்ணியவானின் செழுமிய செயலால் எமது கிராமம் விழித்துக் கொள்ள ஆரம்பித்தது.

1901 - 1950

மகாதேவ வித்தியாசாலை தோற்றம் பெற்ற பின்னால் மக்களின் சிந்தனைப் போக்கில் மாறுதல்கள் ஏற்பட்டிருந்தன என்று நிச்சயமாகச் சொல்ல முடியும். எமது கிராமத்தில் ஆசிரியத் தொழில் அபரிமிதமான வளர்ச்சி கண்டது. வர்த்தகத்திலும் பலர் ஈடுபடத் தொடங்கியிருந்தனர்.

www.padippakam.com





சுருட்டுத் தொழிற்சாலைகளும் தோற்றம் பெற்று வளரத் தொடங்கின. கிராமத்து விவசாயப் பெருமக்கள் 'கூட்டிறைப்பு' முறையில் தண்ணீர் பாய்ச்சி விவசாயம் செய்யத்தொடங்கினர். கள் இறக்கும் தொழிலாளர்களும் அதிகரித்தனர். பொருளாதார ரீதியாக உயர் நிலையில் இருந்தவர்களின் பிள்ளைகள் தங்கள் கல்வியை வெவ்வேறிடங்களில் தொடர்ந்த வண்ணம் இருந்தனர்.

1920 ஆம் ஆண்டுவரை மயிலிட்டி தெற்கு இந்து வாலிபர் சங்கம் செயற்பட்டுவந்தது. இச் சங்கத்தின் பின்னர் 'சைவ வாலிபர் சங்கம்', 'நன்மை விருத்திச் சங்கம்', 'சனோபகார சபை' எனக் காலத்துக்குக் காலம் வெவ்வேறு சங்கங்கள் இயங்கிவந்திருக்கின்றன. 1934. 10. 17 அன்று 'சனோபகார சபை' 'சன்மார்க்க சபை' எனப் புதிய பெயரிடப்பட்டு செயலாற்றத் தொடங்கியது. தென்மயிலைச் சன்மார்க்க சபை என்று ஆரம்பகாலத்தில் வழங்கப்பட்டு பின்பு குரும்பசிட்டி சன்மார்க்க சபை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

திரு. பொன். பரமானந்தர் அவர்கள் தாமே உருவாக்கிய கயிற்றுக் கோலாட்டம் என்ற புதுக் கலையை, அதற்கு ஏற்றவாறு தாமே இயற்றிப் பாடல்களோடு தமது மாணாக்கர்களுக்கு பயிற்றுவித்தார். இக் கயிற்றுக் கோலாட்டத்தை பின்னாளில் நான் இரண்டாம், மூன்றாம் வகுப்பு படிக்கும் வேளையில் பார்த்திருக்கிறேன். இவர் நாடகத்துறையிலும் மிகுந்த கவனம் செலுத்தினார். கிராமத்தில் இவர் நிறுவிய 'இந்து வாலிபர் சங்கம்' மாதந்தோறும் சைவப் பிரசங்கங்கள் நிகழ்த்தி சமயத்துறையிலும் இளைஞர்களை ஈடுபாடு கொள்ளச் செய்தது.

திரு. பொன். பரமானந்தர் தொடங்கி வைத்த பணியை அவருக்குப் பின்னால் தொடர்வதற்காக இன்னொரு பெருமகனை இயற்கை அன்னை எங்கள் கிராமத்திற்கு தந்தாள். அப் பெரியவர் தான் ஈழகேசரி. நா. பொன்னையா அவர்கள். இலங்கையின் மூத்த தமிழ்ப்பத்திரிகைகளில் ஒன்றான 'ஈழகேசரி' ஆசிரியராகவிருந்து அதனைப் பதிப்பித்து வெளியீடு செய்த துணிச்சல்காரர். 1930 இல் இப்பத்திரிகையை இப்பெருமகன் ஆரம்பித்தார். எமது கிராமத்திலும், முழு இலங்கையிலுமே பல தமிழ் எழுத்தாளர்களை உருவாக்கிய பெருமை இவருக்குரியது. மதிப்பிற்குரிய அ.ந.கந்தசாமி, மகாகவி, நாவற்குழியூர் நடராசன், சு.வே., கனக. செந்திநாதன், முருகையன், எஸ். பொன்னுத்துரை, டானியல், நீலாவணன் போன்றோர் அவருடைய பத்திரிகையில் எழுதி வந்தனர்.

திரு. நா. பொன்னையா அவர்கள் 1934 இல் எமது கிராமத்தில் சன்மார்க்கசபை என்ற ஸ்தாபனத்தை நிறுவினார். சன்மார்க்கசபை குரும்பசிட்டியின் வளர்ச்சியில் ஏற்படுத்திய தாக்கங்கள் போற்றத்தக்கன. சன்மார்க்கசபையின் நூலகப் பிரிவில் அவ்வப்போது வெளிவந்த சகல பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் கிராம மக்களின் தேவைக்காக வைக்கப்பட்டிருக்கும் அன்றைய காலகட்டத்தில் மக்களிடையே வாசித்தற் பழக்கத்தினை மக்களிடையே தூண்டியதில் சன்மார்க்கசபையின் பணி குறிப்பிடத்தக்கது. இத்தோடு நில்லாது இலக்கியக் கருத்துப் பரிமாறல்களுக்கும், சமய விழாக்களுக்கும் இச்சபையே அன்று தளமாகவிருந்தது. சன்மார்க்கசபையினால் அம்பாள் ஆலயத்தில் வருடந்தோறும் நிகழ்த்தப்பட்டு வந்த சமயப் பிரசங்கங்கள் மிகவும் குறிப்பிடத்தக்கவை.

சன்மார்க்கசபையின் நூலகத்தில் பல அருமையான நூல்கள் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன. வடபகுதியின் பல்வேறு இடங்களைச் சேர்ந்தவர்களும் இங்குள்ள நூல்களைத்தேடி வந்து பயன் பெறுவதை நான் கண்டிருக்கிறேன். எமது கிராமத்தின் பெயர் தெரியாத பலருக்குக் கூட சன்மார்க்கசபை பற்றி தெரிந்திருந்தது என்றால் சன்மார்க்கசபையின் பெருமையினை இதற்கு மேல் எவ்வாறு விதந்துரைக்க முடியும். ஈழகேசரி பொன்னையா அவர்கள் 1926 இல் ஆரம்பித்த தனலக்குமி புத்தகசாலையும் 1929 இல் தொடங்கிய திருமகள் அழுத்தகமும் சன்மார்க்கசபை பல நூல்களைப் பதிப்பித்து வெளியிட பெரும் உதவியாக இருந்தன. மதிப்பிற்குரிய இ. நாகராசன், கனக.செந்திநாதன், சு.வே., குறமகள் வள்ளிநாயகி இராமலிங்கம், எஸ். பொன்னுத்துரை என்போர் எழுதிய 'மத்தாப்பு' குறுநாவல் தொடங்கி கவிஞர் வி. கந்தவனம் அவர்கள் எழுதிய 'இலக்கிய உலகம்' உள்ளிட்டு பல்வகை நூல்களை வெளியிட்டு இச்சபை பெரும் பங்காற்றியுள்ளது. திரு. பொன்னையா அவர்கள் மயிலிட்டிக்கிராம சபையின் தலைவராகவும் இருந்து சேவையாற்றியுள்ளார். இவரால் ஆரம்பிக்கப்பட்டதும், பொன்னையா பள்ளிக்கூடம் என்று அழைக்கப்பட்டு வந்ததுமான உயர் வகுப்புவரையுள்ள, 100 பரப்பு காணி யில் அமைக்கப்பட்ட வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் என்றும் இவரை ஞாபகமூட்டிக்

படிப்பகம்

www.padippakam.com



கொண்டிருக்கும்.

எமது கிராமத்திற்கென ஒரு விளையாட்டு மைதானம் இல்லாத குறையினை நிவர்த்தி செய்யும் பொருட்டு மதிப்பிற்குரிய காசிப்பிள்ளை தம்பிஜயா அவர்களது உதவியோடு ஒரு விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான பணியில் சன்மார்க்கசபைஈடுபட்டது. இம் மைதானம் பின்னாளில் பொது மைதானமாக நாற்பது பரப்புக் காணியில் மின்னொளி பொருத்தப்பட்டு பூரண பொலிவுடன் விளங்கியது. எமது கிராமத்து மயானம், அதில் அமைந்திருக்கும் மண்டபம், கிணறு ஆகியவற்றை அமைத்துக் கொடுத்த மதிப்பிற்குரிய வேலுப்பிள்ளை தம்பிநாதர் அவர்களையும் நாம் நினைவுகொள்ளவேண்டும்.

1958 எங்கள் கிராமத்து இளைஞர்கள் பலரின் சிந்தனைப்போக்கில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. வெறுமனே மாற்றம் என்று சிறிய வார்த்தையில் சொல்லிவிடமுடியாது. மிகுந்த நெஞ்சுரத்தோடும், திடமான நம்பிக்கையோடும் வெறும் 24 மணிநேர அவகாசத்தில் பனைகளும், பற்றைகளும், இலந்தை மரங்களும் நிறைந்த ஒரு நிலப்பரப்பை மொத்தமாய்க் கூட்டித் துடைத்து ஒரு விளையாட்டு மைதானமாக்கி அதிலே உதைபந்தாட்டம் நிகழ்த்திச் சாதனை படைத்த அஞ்சாநெஞ்சங்கள் அன்றைய இளைஞர்கூட்டம். இந்த இளைஞர்களால் 1958.06.13 இல் ஆரம்பிக்கப்பட்டதே உதயதாரகை மன்றமும் குரும்பசிட்டி கிராம முன்னேற்றச்சங்கமும் ஆகும்.

உதயதாரகை விளையாட்டுக்கழகம் அப்போது நடாத்திய விளையாட்டுப்போட்டிகளும், உதைப்பந்தாட்டப்போட்டிகளும் மிகவும் பிரபலமானவை. வசதியற்ற மாணவர்களுக்கு இலவசமாக கல்வியறிவூட்டியும் வந்தார்கள். இதே காலப் பகுதியில் சன்மார்க்கசபையால் வசதி குறைந்தவர்களுக்கென இலவசமாக பால் காய்ச்சி வழங்கப்பட்டது. உதயதாரகை மன்றமும் ஒரு நூலகத்தை நடாத்தி வந்தது. 1960 களில் இவர்களது சமூகப்பணிகள் போற்றக்கூடியவை. 'சிரமதான வேலைத்திட்டங்கள்' பல மேற்கொண்டார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக இளைய சந்ததியை சிந்திக்க வைத்தார்கள். செக்கோ சிலவேக்கிய, கியூப, ரஷ்ய நாட்டு தூதரக வான்கள் எங்கள் வீதிகளில் துள்ளிக் குதித்து விளையாடின. வாரமொரு தடவை, மாதமொருதடவையென யாருமொரு வெளிநாட்டுத்தூதரகத்தைச் சேர்ந்தவர் 'Projector' உடன் வந்து இறங்கி இரண்டு, மூன்று மணித்தியாலங்கள் எங்களைச் சொக்கவைத்துவிடுவார்கள். இடதுசாரி அல்லது முற்போக்குச் சிந்தனைகள் எங்கள் கிராமத்து இளைஞர்களிடையே மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. அதில் உதயதாரகையின் பங்கு அளவிடமுடியாதது.

1967இல் இளைஞர்கள் மத்தியில் மீண்டும் புதியதோர் சிந்தனை எழுச்சி காணப்பட்டது. காலத்துக்குக் காலம் எமது கிராமத்து இளைஞர்கள் சுயமாகச் சிந்தித்து, சிந்தனையின் வெளிப்பாடுகளுக்கு செயலுருவம் கொடுத்து வந்தார்கள். சிந்திப்பது சுலபமானது. அந்தச் சிந்தனைகளின் வெளிப்பாடுகள் ஆக்கரீதியாகப் செயலுருப் பெறும்போது தான் அந்தச் சிந்தனையின் நோக்கம் நிறைவேறுகிறது. யாரையும் திருப்திப்படுத்துவதற்காக அன்றி பொது நல நேயத்திற்கான சிந்தனைகள், செயலுருப்பெறுவதென்பது மிகமிகச் சிரமமானது. ஆனால் எமது கிராமத்தில் காலத்துக்குக் காலம் இளைஞர்கள் இதனை சாதித்து வந்திருக்கிறார்கள். இவ்வாறு தோன்றியதே சன்மார்க்க இளைஞர் மன்றம். பின்னர் இதனோடிணைந்து வளர்மதி சனசமூக நிலையமும் உருப்பெற்றது. 1967.10.12 அன்று சித்திவிநாயகர் ஆலயத்தி பின்புறமுள்ள தனியார் காணியில் எழுந்துநின்ற கட்டடத்தில் இது செயற்படத் தொடங்கியது. சன்மார்க்க இளைஞர் மன்றத்தினரின் நூலகமும், புத்தகங்கள் இரவல் கொடுக்கும் பிரிவும் இக்கிராமத்து மக்களால் பெரிதும் பயன்படுத்தப்பட்டு வந்தன. சன்மார்க்க இளைஞர் மன்றத்தினரின் சமயப் பிரசங்கங்கள், அரசியற் கருத்தரங்குகள், சிரமதான முயற்சிகள் என்பனவும் வளர்மதி சனசமூகநிலையத்தின் நாடகப் போட்டிகளும் மிகவும் பிரபலமானவை. இதே காலப் பகுதியிலோ அல்லது சிறிது பிந்திய காலப்பகுதியிலோ அண்ணமார் கோவிலுக்கு முன்பாக பாரதி சனசமூக நிலையமும், ஈழகேசரி பொன்னையா வீதியின் கிழக்குப் புறமாக கலைவாணி நாடக மன்றமும் அமைத்து நடாத்தப்பட்டு வந்திருக்கிறது. ஏறத்தாழ 700 குடும்பங்களைக் கொண்ட கிராமத்திற்கு ஒரு காலகட்டத்தில் ஐந்து வாசிகசாலைகள் இருந்திருக்கின்றன.

எமது கிராமத்தில் வேம்படி என்று அழைக்கப்பட்ட இடத்தில் (கணபதிப்பிள்ளை ஆசிரியர் அல்லது அரியரத்தினம் ஆசிரியர் வீட்டிற்கு வடகிழக்கு மூலையாக) முன்னைய சந்தை இருந்திருக்கிறது. இது பின்னாளில் கைவிடப்பட்டு குப்பிளான் வீதியில் ஒன்றும் ஈழகேசரி

www.padippakam.com





இருந்திருக்கிறது. இது பின்னாளில் கைவிடப்பட்டு குப்பிளான் வீதியில் ஒன்றும் ஈழகேசரி பொன்னையா வீதியின் மேற்குப் புறத்தில் ஒன்றுமாக இரு சந்தைகள் அமைக்கப்பட்டிருந்தன. கேணியடி என அழைக்கப்படும் பகுதியில் (இப்போது கேணி கிணறாக மாற்றப்பட்டுள்ளது. ) முன்னர் ஆடு, மாடுகள், தண்ணீர் குடிப்பதற்காக வீதியோரத்திலிருந்து சாய்வாக வெட்டப்பட்டு, ஒருபுறம், உள்ளே இறங்கிச் செல்ல வசதியாக செய்யப்பட்டிருந்தது. அத்தோடு தண்ணீர்த்தாகம் தீர்ந்து வரும் கால் நடைகள் தமது உடலைத் தேய்த்துக் கொள்ள வசதியாக 4 அல்லது 5 அடி நீளமான சாய்வான கல் ஒன்றும் (ஆவுரோஞ்சு கல்) நடப்பட்டிருந்தது. 1970களில் இக்கல் அகற்றப்பட்டுவிட்டது.

எமது கிராமத்தில் அமைந்துள்ள பேய்க்கிணறு என அழைக்கப்படும் வற்றாதகிணறு ஓர் 'அதிசயக் கிணறு'. இக் கிணற்றை நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் ஆய்வு செய்த போது (ஏறத்தாழ பன்னிரண்டு பாரிய நீரிறைக்கும் இயந்திரங்கள் வரை பாவித்து) 6 அங்குல நீர் மட்டமே பதிவதனையும் இந்நீர்மட்டப் பதிவு அருகிலுள்ள எல்லாத் தனியார் கிணறுகளிலும் ஏற்படுவதையும் கருத்திற்கெடுத்து ஆய்வை இடைநிறுத்தி விட்டனர். 6 அங்குலப்பதிவின் பின்னுள்ள நீரின் உவர்த்தன்மை, கடல் நீர்ப்படுக்கைகளுடன் இதற்குத் தொடர்பிருக்கலாமென நம்பப்பட்டாலும் உறுதியான முடிவுகளேதும் எடுக்கப்படவில்லை.

எமது கிராமத்தில் ஐக்கிய நாணய சங்கம், மாதர் சங்கம் போன்றவையும், எண்பதுகளின் ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்து வாலிபர் சங்கமும் செயல்பட்டு வந்தன. விவசாயப் பெருமக்களின் நலன்கருதி வெங்காயச் சங்கமும் கைத்தொழிலை ஊக்குவிக்கவென கைத்தறி நெசவு நிலையமும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. ஆரம்ப காலங்களில் வெங்காயம் போடுவதும் பெருமளவில் நடைபெற்று வந்த போதும் பின்னாளில் வெங்காயச்சங்கத்தின் நடவடிக்கைகள் குறைந்ததினால் இக் கட்டிடம் குரும்பசிட்டி கிராம முன்னேற்ற சங்கத்தினரால் பெறப்பட்டு, கிராம முன்னேற்றச் சங்கம் செவ்வனே செயற்பட்டு வந்தது. இதில் பாலர் பாடசாலை நடத்தப்பட்டு வந்தது.

1950 ற்குப்பின்னுள்ள காலப் பகுதியில் எமது கிராமத்தில் முன்னேற்றமான பல பணிகள் நிறைவேறின. குண்டும் குழியுமாக மக்கி வீதியாக இருந்த அப்போதய பிரதான வீதி செப்பனிடப்பட்டு தார் வீதியாக்கப்பட்டு ஈழகேசரி பொன்னையா வீதி ஆகியது. திரு. பூ. சு. நடராஜா அவர்கள் மயிலிட்டி கிராம சபையின் தலைவராக சேவையாற்றிய காலப்பகுதியில் எமது கிராமம் மின்னொளி பெற்றது. திரு. கே. திருநாவுக்கரசு அவர்கள் குரும்பசிட்டி கிராம முன்னேற்றச் சங்கத்தின் தலைவராக இருந்த வேளையில் எமது கிராமத்திற்கான முதற் பேருந்துச்சேவை ஆரம்பிக்கப்பட்டது. திரு. பொன். பரமானந்தர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட மகாதேவா வித்தியாசாலை, பொன். பரமானந்தர் வித்தியாலயம் எனப் பெயர் மாற்றம் பெற்று புதிய கட்டடங்களோடு பொலிவுற விளங்கியது. திரு. வி கிருஷ்ணசாமி அவர்கள் மயிலிட்டிக் கிராமசபைத்தலைவராக இருந்த வேளையில் பல சிறிய வீதிகள் புதிதாக அமைக்கப்பட்டும், ஏலவே இருந்த வீதிகள் செப்பனிடப்பட்டும் வந்தன. 1960 களுக்குப் பின்னர் எமது கிராமத்தில் வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் சமூகசேவையாளரான அதிபர் திரு. சி. நடராஜா அவர்களின் பங்களிப்பு மிகவும் காத்திரமானது. இக்காலப்பகுதியிலே அம்பாள் ஆலயத்தில் சித்திரத்தேர் ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது. வடபகுதி ஆலயங்களில் மிகவும் அரிதான சித்திரத் தேர்களில் இது பெயர் பெற்றிருந்தது.

இவை மட்டுமின்றி எமது அம்பாள் ஆலயத்தில் நவராத்திரி இறுதிநாளன்று நிகழும் சூரசம்ஹாரத்தில், பயன்படுத்தப்படும் சூரன், எனக்குத் தெரிந்தவகையில் வடபகுதியிலே தானாக தலை, கைகள் அசைக்கக்கூடிய விதத்தில் முதன் முறையாக உருவமைக்கப்பட்டது இதுவாகத்தான் இருக்கமுடியும். மதிப்பிற்குரிய திரு. பொன்னம்பலம் என்ற கலைஞரால் உருவமைக்கப்பட்ட சூரன் நாற்புறமும் சுழலக்கூடிய முறையில் செய்யப்பட்டிருந்தது.

1965 - 1975 காலப்பகுதியில் அண்ணமார் கோவில், ஆறாத்தை வைரவர் கோவில் ஆகியவற்றில் வேள்விகள் நடைபெற்று வந்தன. இந்தக் காலங்களில் கள் இறக்கும் தொழிலாளர்கள் மிகப் பெரிய அளவில் வளர்த்த கடாய் (ஆடுகளை) மாலைகள் அணிவித்து வீதிவழியாக ஊர்வலமாக மேள, தாளங்களுடன் அழைத்துச் செல்வதை நான் சிறுவனாய் இருந்த வேளைகளில் பார்த்திருக்கிறேன். பின்னாளில் இவை கைவிடப்பட்டு இவ்வால யங்களில் பொங்கல்கள் நிகழ்த்தப்பட்டன. ஏனைய ஆலயங்களான காளிகோவில், வைரவர், முருகன் போரியென

www.padippakam.com





வைரவர், மாயெழு வைரவர் உட்பட எல்லா ஆலயங்களிலும் பொங்கல் பூசைகள் நடைபெறும்.

எமது கிராமத்தில் எண்பதுகளில் 27 அதேயளவு சிறியதும் பெரியதுமான ஆலயங்கள் அமைந்திருந்தன. மார்கழித் திருவெம்பாவை பத்துத் தினங்களும் அம்பாள் ஆலயத்தில் வருடாந்த உற்சவம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படும். நவராத்திரி, சிவராத்திரி தினங்களும் பிரபலமானவை. விஜயதசமி அன்று அம்பாள் ஆலயத்திலிருந்து அம்பாள் குதிரை மீது புளியடி வைரவர் கோவிலுக்கு செல்வதும் அங்கு பன்னீர் வாழை வெட்டுதலும் மிகவும் உற்சாகம் தரும் நிகழ்ச்சிகளாகும். சித்தி வினாயகர் ஆலயத்திலும் வைகாசி மாதத்தில் விசாக நட்சத்திரத்திற்கு முன்னும் பின்னுமான பத்து தினங்கள் வருடாந்த உற்சவம் நடைபெறும். இரு ஆலயங்களிலும் வருடாந்த உற்சவ காலங்களின் போது தினமும் சமயப் பிரசங்கங்கள் நடைபெறும்.

கிராம முன்னேற்றச் சங்கத்தின் முன்றலில் அமைக்கப்பட்டிருந்த சிறுவர் பூங்கா மிகவும் சிறப்பானது. 1986 - 1987 பகுதியில் அமைக்கப்பட்டிருந்த இப்பூங்காவில் Mary - go - round உட்பட பல சிறுவர்களுக்கான விளையாட்டுக்கருவிகள் பொருத்தப்பட்டிருந்தன. இங்கு ஓர் நினைவுத்தூபியும் அமைக்க ப்பட்டிருந்தது. ஆனால் இது முற்றுப்பெற முன்னால் இந்திய இராணுவத்தினரின் தாக்குதல்கள் ஆரம்பித்து விட்டன. இது இயக்கங்களினதும், இராணுவங்களினதும் அராஜகங்களுக்குப் பலியாகியவர்களை நினைவு கூரும் முகமாக அமைக்கப்பட்டிருந்தது. பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கிளை இரு மாடிகளைக் கொண்ட கட்டிடமாக எழுந்திருந்தது.

1986இல் எமது கிராமம் 730 குடும்பங்களையும், 710 வீடுகளையும் கொண்டிருந்தது. எமது மண்ணில் இந்திய இராணுவம் புகுவதற்கு முன்னால் எழுந்துநின்ற தொழிலகங்களும் பொதுநிறுவனங்களினதும் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | பாடசாலை | 01 |
| 2. | பொதுச்சேவை நிறுவனங்கள் | 10 |
| 3. | பொதுச்சந்தை | 01 |
| 4. | பொதுமயானம் | 01 |
| 5. | பொதுமைதானம் | 01 |
| 6. | உப தபாற்கந்தோர் | 01 |
| 7. | பல நோக்கு கூட்டுறவுச் சங்ககிளைகள் | 02 |
| 8. | மின்தறி நிலையம் | 01 |
| 9. | கல் உடைக்கும் ஆலைகள் | 04 |
| 10. | அச்சகம் | 01 |
| 11. | வெல்டிங் தொழிலகம் | 01 |
| 12. | பேக்கறி | 01 |
| 13. | தனியார் மருத்துவநிலையம் | 01 |
| 14. | அரிசி ஆலை | 01 |
| 15. | அரைக்கும் ஆலை | 01 |
| 16. | சுருட்டுத் தொழிற்சாலை | 07 |
| 17. | நீர் இறைக்கும் இயந்திர 'பம்'வார்க்கும் ஆலை | 01 |
| 18. | கடைச்சல் ஆலை | 01 |
| 19. | சிற்பத்தொழில் கூடம் | 02 |
| 20. | மரம் அரிவு, கடைச்சல் ஆலைகள் | 02 |
| 21. | இரும்புத் தொழிலகம் | 01 |
| 22. | புத்தகம் கட்டும் நிலையம் | 01 |
| 23. | சிறுகைத்தொழில் நிலையங்கள் | 04 |
| 24. | தனியார் வர்த்தக நியையங்கள் | 10 |
| 25. | சிகையலங்கரிப்பு நிலையங்கள் | 02 |
| 26. | சலவைத் தொழிலகம் | 01 |
| 27. | விவசாய கால்நடை வளர்ப்பு நிலையம் | 01 |
| 28. | சைக்கிள் திருத்தும் நிலையங்கள் | 03 |
| 29. | தனியார் கல்வி நிலையங்கள் | 02 |

படிப்பகம்

www.padippakam.com





| | | |
|---|---|---|
| 30. | விவசாய பயிர்ச் செய்கை நிலங்கள் | 120 ஏக்கர் |
| 31. | ஆரம்ப சுகாதார நிலையம் | 01 |
| 32. | ஆலயங்கள் | 10 |
| 33. | அரும்பொருட்காட்சி களஞ்சியங்கள் | 02 |
| 34. | கைத்தறி நிலையம் | 01 |
| 35. | பொதுவைத்திய நிலையம் | 01 |
| 36. | சோதிட நிலையம் | 01 |

1981 இல் எமது கிராமத்தில் அடைவு கடையொன்றில் நடந்த கொள்ளையின் போது எமது கிராமத்தை சேர்ந்த ஏறத்தாழ 30 பேர்வரை இதனை தடுக்கும் நோக்குடன் செயற்பட்டார்கள். இதன் விளைவாக 3 பேர் காயமடைந்தார்கள். இருவர் கொல்லப்பட்டனர்.

1987 இல் எமது கிராமத்திற் புகுந்த இந்திய இராணுவம் இரு பெண்களை பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய போது, ஏறத்தாழ ஐம்பதுபேர் பாலியல்வல்லுறவுக்குள்ளான பெண்களையும் காவிக்கொண்டு இராணுவ முகாமிற்கு சென்று நீதி கேட்டிருக்கிறார்கள்.

1986.01.17இல் இராணுவம் ஏழாலைப் படையெடுப்பை மேற்கொண்ட வேளை எமது கிராமத்தவர்கள் வே. குமாரவேலு, கு இரத்தினம், து. சிவகுமார் ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

1986.01.23இல் தெல்லிப்பழைப் படையெடுப்பின் போது த. அரியலிங்கம் மரணித்தார்.

1986 ஜனவரியில் விமான நிலையம் தெற்கு நோக்கி விரிவாக்கப் படுவதாகக் கூறிக்கொண்டு, எம் கிராமத்தின் 90 குடும்பத்திரை இராணுவம் ஒரே நாளில் ஹெலிகொப்ரர் தாக்குதல் மூலம் துரத்தியடித்தது.

1986 மார்ச்சில் விமான நிலையத்தின் 'பாதுகாப்பு வலயம்' எனக் கூறி 1000மீற்றர் சுற்றாடலை கையகப்படுத்துவவதற்காக எமது கிராமத்தின் பிரதான வீதிவரையிருந்த மக்களை இராணுவம் மீண்டும் தாக்கித் துரத்தி அந்தப்பகுதியை சுவீகரித்தது.

1986.05.17இல் இராணுவம் மீண்டும் எம் கிராமத்தினூடாக வயாவிளான் மத்திய மகா வித்தியாலையத்தை நோக்கி முன்னேறி அங்கு இராணுவமுகாமொன்றை நிறுவிக்கொண்டது. இதற்கு மறுதினம் பாடசாலையின் அருகிலிருந்த நூற்றுக்கணக்கான குடிசைகள் நாசமாக்கப்படன. 70%ஆன மக்கள் இச்சம்பவத்தையடுத்து எம் கிராமத்தை விட்டு வெளியேறினர்.

1987.03.26இல் குரும்பசிட்டியை முழுமையாக இராணுவம் கைப்பற்றி சுமார் 35 வீடுகளிலும், சித்திவிநாயகர் ஆலயம், பொன். பரமானந்தர் வித்தியாலயம், நூல்நிலையங்கள் என்பவற்றில் சிறு முகாம்களை அமைத்துக்கொண்டது. அன்றுமாத்திரம் எமது உடன் பிறப்புக்கள் ஆறுபேர் கொல்லப்பட்டனர்.

1987 மார்ச் வரை 22 மக்கள் கொல்லப்பட்டனர். ஏனைய சில பகுதிகளுடன் ஒப்பிடுகையில் எமது கிராமத்தில் ஏற்பட்ட உயிர்ச்சேதங்கள் குறைவானவைதான். 1983 இலிருந்து எமது கிராம மக்கள் பகுதி பகுதியாக வெளியேறிக்கொண்டிருந்ததால் பெருமளவு உயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. ஆனாலும் எமது கிராமத்திற்கு ஏற்பட்ட உடைமைச் சேதங்கள் அளவிடமுடியாதவை.

1987.08.10ல் எம்மண்கண்ட அனர்த்தங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | மண்ணோடு மண்ணாக அழிக்கப்பட்ட குடிசைகள் | 276 |
| 2. | தரைமட்டமாக்கப்பட்ட பெரிய வீடுகள் | 77 |
| 3. | பாரிய சேதத்துக்குட்பட்ட வீடுகள் | 240 |
| 4. | சிறு சேதங்களுடன் காட்சியளித்த வீடுகள் | 117 |
| 5. | பற்றைகளால் சூழப்பட்டிருந்த பயிர்செய் நிலங்கள் | 120 |
| 6. | அழகிய சித்திரத்தேரோடு தரைமட்டமாக்கப்பட்ட ஆலயம் | 01 |

படிப்பகம்

www.padippakam.com





| | | |
|---|---|---|
| 7. | சேதமாக்கப்பட்டிருந்த ஆலயங்கள் | 09 |
| 8. | கூரைகள் அகற்றப்பட்டு இருந்த பாடசாலை | 01 |
| 9. | சேதமாக்கப்பட்ட பல நோக்கு கூட்டுறவு சங்கக் கிளைகள் | 02 |
| 10. | மின்தறி நிலையம் | 01 |
| 11. | கல்லுடைக்கும் ஆலைகள் | 04 |
| 12. | அச்சகம் | 01 |
| 13. | வெல்டிங் தொழிலகம் | 01 |
| 14. | பேக்கறி | 01 |
| 15. | தனியார் மருந்தகங்கள் | 02 |
| 16. | அரிசி ஆலை | 01 |
| 17. | அரைக்கும் ஆலை | 01 |
| 18. | சுருட்டுத் தொழிற்சாலைகள் | 07 |
| 19. | நீர் இறைக்கும் பம் வார்க்கும் ஆலை | 01 |
| 20. | கடைச்சல் ஆலை | 01 |
| 21. | சிற்பத்தொழில் கூடம் | 02 |
| 22. | மரம் அரிவுகடைசல் ஆலை | 01 |
| 23. | இரும்புத்தொழிலகம் | 01 |
| 24. | புத்தகம் கட்டும் நிலையம் | 01 |
| 25. | சிறுகைத்தொழில் நிலையங்கள் | 04 |
| 26. | தனியார் வர்த்தக நிலையங்கள் | 10 |
| 27. | சிகை அலங்கரிப்பு நிலையங்கள் | 02 |
| 28. | விவசாய கால்நடை வளர்ப்பு நிலையங்கள் | 01 |
| 29. | சைக்கிள் திருத்தும் நிலையங்கள் | 03 |
| 30. | தனியார் கல்வி நிலையங்கள் | 02 |
| 31. | சலைவைத்தொழிற்சாலைகள் | 01 |
| 32. | ஆரம்ப சுகாதார நிலையம் | 01 |
| 33. | அரும்பொருட்காட்சி களஞ்சியங்கள் | 02 |
| 34. | கைத்தறி நிலையம் | 01 |
| 35. | பொது வைத்திய நிலையம் | 01 |
| 36. | சோதிட நிலையம் | 01 |

இரண்டாவது தடவை இடம்பெயர்ந்தபின் இன்றுவரை உள்ள சேதங்களைக் கணக்கெடுக்க முடியாவிட்டாலும் இன்றுவரை:

| | | |
|---|---|---|
| 1. | கொல்லப்பட்ட எமது உடன்பிறப்புக்கள் | 30 பேர் |
| 2. | ஊனமடைந்தவர்கள் | 06 பேர் |

எமது மக்களும், கிராமமும் இழந்துள்ள சொத்துக்களின் பெறுமதியைக் கணிப்பீடு செய்வது சுலபமான காரியமன்று. காலாகாலமாகத் தேடிய அத்தனை செல்வங்களும் இழக்கப்பட்டுவிட்டன. எமது மக்களுக்கு எத்தனை சோதனை? எததுணை கொடுமை? பத்து ஆண்டுகள் நடந்த போரில் நாசமாகிய நமது பூமிக்கு விடிவு எப்போது? கொடையிற் சிறந்த ஊரெனப் பெயர்பெற்றது குரும்பசிட்டி. யுத்தக்கொடுமையால் அகதிகளாக எமது மக்கள் விரட்டியடிக்கப்பட்டு பிறர் கோடியில் வாழ்ந்து, அரசு வழங்கிய நிவாரண உணவைக் கையேந்தி வாங்கி உண்ணும் நிலை ஏற்பட்டபோதுங்கூடத் தமது வள்ளல் தன்மையை மறக்கவில்லை. வடமராட்சி மக்கள் ஒப்பரேசன் லிபரேசன் மூலம் கொன்று குவிக்கப்பட்ட போது தமக்கு வழங்கப்பட்ட நிவாரண உணவையே அர்ப்பணித்துச் சுமார் 31,250.00 ரூபாவுக்கு உணவுப் பொருட்களை அங்கு உடனனுப்பி வைத்தவர் எமது கிராம மக்கள். முல்லைத்தீவு நெடுங்கேணிப் பகுதிகளில் ஆடையின்றி வெய்யிலில் வாடிய மக்கள் நிலை அறிந்ததும் ஈராயிரம் ஆடைகளை உடனங்கு அனுப்பியவர் எமது மக்கள். அதே மக்கள் இன்று வீடு வாசல்கள் சொத்துச் சுகங்கள் அத்தனையையும் இழந்து நடுத்தெருவில் நிற்கின்றனர். 1990.06.14இல் இரண்டாவது தடவையாக எமது மக்கள் எம்மண்ணை விட்டு ஓடினார்கள் இன்னமும் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். வேதனை தாங்காது ஏங்கும் முகங்கள் எதிர்காலம் என்னவென்று தெரியாது துடிக்கும் நெஞ்சங்கள்.

படிப்பகம்

சீர்குலைக்கப்பட்டுள்ள எமது கிராமம் மீண்டும் செழிக்கும் செழிக்க வேண்டும் என்ற எதிர்பார்புக்களோடு எல்லாம் வல்ல இறையருளை வேண்டிக்கொண்டு நிறைவு செய்கிறேன்.

ஊரிலேன் காணியில்லை
 உறவு மற்றொருவரில்லை
வேரினை அறுத்துக்கொண்டு
 வெறுமையில் வாழுகின்றேன்
பாரினில் நம்மைப்போல
 பாவிகள் மேலும்வேண்டாம்
'போர்' எங்கும் ஒழியவேண்டும்
 புதுயுகம் பிறக்கவேண்டும்

குறிப்பு:-

குரும்பசிட்டி, என்பது குறும்பர்+இட்டி, குரும்பரிட்டி, குரும்பசிட்டி என மருவி வந்தது எனக் கூறப்படுகிறது. உறுதிகளிலும் தோம்புகளிலும் குரும்பசிட்டி என்று குறிப்பிடப்படுகிறது. பல ஆண்டுகள் குரும்பசிட்டி என்ற பெயர் அரசின் பதிவுக்குள் இடம் பெற்றிருக்கவில்லை. "தென் மயிலை", "மயிலிட்டி தெற்கு" என்றே குறிப்பிடப்பட்டு வந்துள்ளன. மேலும் குரும்பசிட்டியில் அடங்கும் காணிகளின் உறுதிகளிலும் தோம்புகளிலும் வழங்கும் பெயர் வழக்குகள் சிலவும் இங்கே தரப்பட்டுள்ளன். "தெவிசுகிரி", "சத்தியாகலட்டி", "ஒறுளாய்" "தேவரியன்புலம்", "வேளம்புலம்", "நிற்சையிட்டி", "வவுணத்தம்பை", "பலட்டன்", "நெரிஞ்சி புலம்", "பரத்தைப்புலம்", "நெத்தையன் தறை" ஆகியன.

தகவல்கள் பெறப்பட்ட நூல்களின் பட்டியல்:


'குரும்பசிட்டியின் இலக்கிய பாரம்பரியம்'
'குரும்பசிட்டியின் எச்சங்கள்'
'சன்மார்க்க சபை 30வது ஆண்டுமலர்'
'வளர்மதி வெள்ளிவிழா மலர்'
இரசிகமணி கனக. செந்திநாதனின் என்கதை"

குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரன்.

www.padippakam.com







www.padippakam.com





# உயர் திரு பொன். பரமானந்தர் அவர்கள்

- பேராசிரியர் அம்பலவாணர் சிவராசா

"பெரிய உபாத்தியாயர்" பொன். பரமானந்தர் அவர்கள் குரும்பசிட்டி ஊருக்கு ஆற்றிய பணிகள் காலத்தால் அழியாதவை, அழிக்க முடியாதவை. அவர் வாழ்ந்த காலம் இலங்கையில் ஒரு மத்தியதர வர்க்கம் எழுச்சியடைந்து பிரித்தானிய காலனியாட்சிக்கு எதிர்ப்புத்தெரிவித்த ஒரு காலப் பகுதியாகும். இலங்கையின் பல பாகங்களிலும் அரசியற் சீர்திருத்தங் கோரிப் பல இயக்கங்களும் ஆரம்பிக்கப்பட்ட காலமாகும். ஆசியாவின் மற்றைய பகுதிகளைப் போலவே

இலங்கையிலும் நவீன தேசிய வாதத்தின் தோற்றப்பாட்டினை மிசனறி நடவடிக்கைகளுக்கெதிரான மதப் புனருத்தாரண நடவடிக்கையிலேயே காணக்கூடியதாக இருந்தது. தெற்கிலே பௌத்த புனருத்தாரண இயக்கமும், கலால் இயக்கமுமே இலங்கையர் தேசிய வாதத்தின் முன்னோடி இயக்கங்களாக இருந்தன. வடக்கில் ஆறுமுக நாவலரும் அவரது இந்து சமய மறுமலர்ச்சி நடவடிக்கைகளுமே இத்தகைய தேசிய உணர்வினையும் விடுதலை வேட்கையினையும் ஊட்டின. ஆறுமுக நாவலர் ஆரம்பித்த சைவ மறுமலர்ச்சி இயக்கத்தின் பிரதிநிதியாக, குரும்பசிட்டியிற் செயற்பட்டவர் திரு.பொன். பரமானந்தர் ஆவார். இவர் குரும்பசிட்டிக்கு ஆற்றிய பணிகளுள் மிகவும் முக்கியமானது இவ்வூரில் ஒரு கல்வி கற்ற ( சமயச் சூழல் பிறழாது) பரம்பரையினை உருவாக்கி யமையேயாகும். பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் சமய கலாச்சார மாற்றங்கள் திணிக்கப்பட்டிருந்த கால கட்டத்தில் (1900 ஆம் ஆண்டில்) ஒரு சைவப் பாடசாலையைக் கட்டி அதற்கு மகாதேவ வித்தியாசாலை எனப் பெயரிட்டு, சைவசமயச்சூழ்நிலையிற் கல்வி புகட்டியமை இவ்வூரில் தேசிய உணர்வும் விடுதலை வேட்கையும் கொண்ட விழிப்புணர்ச்சிமிக்க ஒரு படித்த தலைமுறை எழ வழி வகுத்தது. இவரின் பணிகளை இவரது மாணாக்கருள் ஒருவரான இரசிகமணி. கனக. செந்திநாதன் அவர்கள் பின் வருமாறு பாடியுள்ளார்.

சைவமெனும் பயிர் தழைக்கத் தமிழ்ப்
பள்ளிக்கூடம் தானேயாக்கி
செவ்வியதாய் மாணவரைத் திறம்படவே
பயிற்றிநன்கு சிறக்கச்செய்தோன்
பவ்வியநற் பெயர்கொள் பரமானந்தர்
எனும் பெரியார் பாதம் தன்னில்
நல்லிதயத் தாமரையாம் நறுமலரால்
அர்ச்சித்து நாம் உய்வோம்!

ஆசிரியர் பரமானந்தர் அவர்கள் கல்வி புகட்டுவதோடு மாத்திரங் கட்டுண்டு இருக்கவில்லை. அவர் இளம் பிள்ளைகளுக்குக் கோலாட்டத்தினை ஒரு கலையாகப் பழக்குவித்தார்.அதற்கு ஏற்றதான பாடல்களையும் அவரே இயற்றினார். கயிற்றுக் கோலாட்டம் என்ற புதுமையான கலையொன்றைப் பரமானந்தர் அவர்களே கண்டுபிடித்துப் பழக்கினார். புராணத்துக்குப் பயன் சொல்லும் வழக்கத்தைக் குரும்பசிட்டியில் ஆரம்பித்தவரும் அவரே. இவ்வூரிலுள்ள அம்பாள் ஆலயத்தில் ஆண்டுதோறும் திருவாதவூரடிகள் புராணத்துக்குப் பயன் சொன்னதோடு அதற்கென மாணவர் பரம்பரையையும் அவர் உருவாக்கினார். இவ்வூரில் ஒரு இந்து வாலிபர் சங்கத்தினை நிறுவி மாதந்தோறும் சமயப் பெரியோர்களை அழைப்பித்துச் சைவப் பிரசங்கங்களையும் நடத்துவித்தார்.

ஆசிரியர் பரமானந்தர் அவர்கள் கவிதைபாடும் ஆற்றல் பெற்றவர். அக்காலத்திற் பெரு வழக்குப் பெற்றிருந்த பல 'சரமகவி' களை அவர் பாடியுள்ளதோடு, கதிர்காமவேலன் மீது ஒரு பதிகமும் பாடியுள்ளார். மகாதேவ வித்தியா சாலையில் வருடா வருடம் மாணவர்சங்க வருடாந்தவிழாவை ஒழுங்காக நடத்தினார். அந்த வருடாந்தக்கூட்டங்களில் அவர் "தருமிக்குப் பொற்கிழி அளித்தமை" 'குமணன்', 'பிரகலாதன்' முதலிய இலக்கிய நாடகங்களை உதவி ஆசிரியர்களைக் கொண்டு பழக்குவித்து மாணவர்களின் திறனை வளர்த்தார்.

ஆக, பொன். பரமானந்தர் அவர்கள் கல்வி கற்ற ஒரு இளைஞர் பரம்பரையினை உருவாக்கியதோடு மாத்திர மல்லாமல் சைவ சமயம், கலை, இலக்கியம் பற்றிய பிரக்ஞையையும் இவ்வூரில் ஏற்படுத்தியமையாலேயே அவரைக் குரும்பசிட்டிக்கிராமத்தின் தந்தையெனக் கொள்ள வேண்டியவராக உள்ளோம்.

www.padippakam.com





# உயர் திரு. ந. சின்னத்தம்பி அவர்கள்

(சின்னர்ச் சட்டம்பி)

- 'ஈழகேசரி' நா. பொன்னையா

அற்பகநிறைந்த அருந்தனவான்கள் பொற்புறவமைந்த நற்பெரும் பதியெனத்திகழ்வதூஉம், நன்னயம்படைத்த மின்னனை யார்கள் சொன்னயம்பயிலும் மன்னியசிறப்பின் தென்மயிலைப்பதி தொன்னெறிவழாது மன்னுகவென்றே, பன்னருந்தவத்தான் சோமநாத முதலியார் வழிவருஉ நன்னித்தம்பியும் தெய்வானையம்மையும் பன்னிய தவத் தால் துன்மதி ஆண்டு ஆவணித் திங்கள் உத்தரட்டாதி யில் மன்னிய சறப்பின் சின்னத்தம்பியார் மாண் புறவுதித்தனர்.

இவர் மாப்பாணர், கனகர், தாமோதரம், சீனிக்குட்டியார் என்னும் நால்வரையும் சகோதரர்களாகவும், ஆசைப் பிள்ளை என்பவரைச் சகோதரியாகவும் பெற்றுள்ளார். தக்க வயதிலே கல்விபயிற்றப்பெற்று பிறதேச சஞ்சாரி யாய்ப் பலதுறைகளிலு மநுபவம் பெற்று, இயற்கையறிவிற் சிறந்தவராய்ச் சிறிதுபாரம் ஓர் தமிழாசிரியராய் விளங்கினர்.

ஆண்டு இருபத்தைந்தாயதும், இவரது குலத்திற்கும் நலத்திற்கும் ஒப்பவாய்ந்த நாவற்குழி சங்கரப்பிள்ளை யென்பவரின் திருமகளார் தெய்வானைப்பிள்ளை யென்பவரை மணந்து, இல்லறம் நடாத்துவான் தமது சொந்த ஊராகும் குரும்பசிட்டியிலமர்ந்து வியாபாரத் துறையிற் புகந்து பெரும்பொருள் திரட்டலாயினர்.

இவர் சமய பக்தி, தேசபக்தி முதலியவற்றிற் சிறந்து அறநெறிவழுவாது ஒழுகியமையாற், கிராமவாசிகளாலும் ஏனையோராலும் நன்கு மதிக்கப்பெற்ற வராய்க் கிராமவாசிகளுக்கு வேண்டிய காலங்களிற் பெரும் பொருள் கொடுத்து வாங்கியும், மக்களிடையே யுண்டாகும் பிணக்கு முதலியவற்றை நீதிவழுவாது நடுவுரைத்தும் கிராமத் தலைவராய் விளங்கினதுமன்றி, கிராமசங்கந் தோன்றிய காலம் முதல் சங்க அங்கத்தவராயும் விளங்கினர்.

இவர், சமயபக்தி மேலீட்டினாலே தலயாத்திரை செய்வான் விரும்பி, தமது வாழ்க்கைத்துணைவியாரையு முடன் கொண்டு, சேதி முதற் காசி யீறாகவுள்ள பல தலங்களை யும் தரிசித்த பின், இந்தியாவிலே சிறந்த தலமாகிய வேதாரணியமென்னும் திருமறைக் காட்டிலே ஓர் சத்திரமமைத்து அன்னதானம் முதலியவற்றிற்காக மூல தனம் உதவியுள்ளார். வேதவன ஆதீனத்திலிருந்து ஓர் சைவாசாரியரை வருவித்துத் தமது கிராமத்திலே சகல வரிசைகளுடன் பரம்பரையாக இன்றளவும் நிலைபெறச் செய்தனர்.

மாவையம்பதியிலே கோயில் கொண்டெழுந்தருளியி ருக்கும் கலியுகவரதனாம் தந்தக்கடவுளி னாலயத் திருமுடியைப் பசும்பொன்னாலாக்கி அளித்து அற்றைத் தினப் பூசைக்கும் மூலதனமீந்துள்ளார். குரும்பசிட்டி யில் புராதனமாயமைந்து சீரற்று விளங்கிய விநாயகரால யத்தைத் தமது ரொந்தப்போருள்பொண்டு நவமாயியற்று வித்துப் பதினையாயிரம் ரூபாய்கள் பெறக்கூடிய தமது ஆஸ்திகளையும் நித்திய நைமித்திகத்தின் பொருட்டு விநா யகப் பெருமானுக்கு அருப்பணஞ் செய்துள்ளார். வருங்காலத்தில் ஆலயம் நடைபெறுவதற்காக ஓர் பஞ்சா யத்தையும் நியமித்து வேண்டிய ஒழுங்குகளும் முன்னரே செய்து வைத்துள்ளார்.

இவர் தேசபக்தி முதிர்ச்சியால், குரும்பசிட்டியிற் பிரபலமுற்று விளங்கும் மகாதேவ வித்தியாசாலைக் காரிய கருத்தாவாகவும், சைவவாலிபசங்கத்தின் போஷகராகவும் பல்லாண்டுகளாகத் தொண்டாற்றி, ஆசிரியர்களும், மாணவர்களும், பெற்றோரும், மற்றோரும் களிக்குமாறு செய்தனர். இவரது சமய பக்தியும், தேசபக்தியும், சீவகாருண்ணியமும், பரோபகாரமும் எத்துணையென்பது நாம் கூறாதே போதரும். இவர் புத்திரப்பேறில்லாதி ருந்தும், சுற்றத்திற்கழகு சூழவிருத்தல் என்னும் முதுரைக்கிணங்கத் தமது சகோதரக்களின் புதல்வர்களை யும், உடன் வைத்துப் போஷித்தும், கல்வியூட்டியும், ஏற்றகாலத்தில் மணவினை முதலியன ஆற்றுவித்தும், தமது செல்வத்தின் பெரும்பாகத்தை, செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல் என்னும் முன்னோர் மொழிப்படி, இன்னாரின்னார்க்கேயுரியதாகுக வெனச் சாதனஞ் செய்தும் உள்ளார்.

இவ்வாறாய செயற்கருஞ் செயல்களினால் தேசமக்களின் உள்ளத்திற் பிணிப்புண்டு, எல்லோராலும் நன்கு பாராட்டப் பெற்ற திருவாளர் சின்னத்தம்பி, தமது எழுபதாம் வயதில்பிரசோற்பத்தி ஆண்டு கன்னித்திங்கள் இருபா னொன்பதிற் குருவாரத்திற் சதுர்த்தசித்திதியும் அனுஷ நட்சத்திரமும் கூடிய சுபவேளையில், உற்றார், உறவினர், உறுதுணையாளர் உளமிகந்துரகப் பற்றொன்றில்லாப் பரம்பொருளிணையடி பெற்றனனினிதே! பெற்றனனினிதே.

www.padippakam.com





# உயர்திரு. S.R. முத்துக்குமாரு அவர்கள்

- நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்

முதலியார் ஸ்ரீ எஸ். ஆர். முத்துக்குமாரு அவர்கள் காலஞ்சென்றதினால் யாழ்ப்பாணத்துக் கற்ற மனுஷருடைய தொகுதிக்கு ஒரு பரிகரிக்கக் கூடாத நட்டம் நேர்ந்திருக்கிறது என்றதை அநேகர் அறிய மாட்டார்கள். அவருடைய கல்வியோ பல திறப்பட்டது. சென்னைச் சர்வகலாசாலையார் வெளிப்படுத்திய பெரிய தமிழ் அகராதி ஆசிரியர்களுக்கு ஒரு துணையாளாய் இருந்தார் என்றபடியால் அவரது தமிழ்க் கல்வியைப்பற்றிப்பலரும் கேள்விப்பட்டிருப் பார்கள். தமிழ்ப்பாஷை ஒன்றில் அல்ல, இந்திய இலங்கைச் சரித்திரம், வான சாத்திரம், கணிதம், சங்கீதம் முதலிய வேறு பல துறைகளிலும் அவருக்கிருந்த அறிவு எவ்வளவு ஆழமானது என்பதை அவரோடு ஊடாடிப் பழகியவர்கள் மட்டுமே அறிவார்கள். இதுபோலவே, பகிரங்கத்தில் வரவிரும்பாமல் என்றும் அடக்கமாய் வாழ்ந்துவந்த அவரது நற்குண நற்செய்கைகளும் இட்டமித்திரரான ஒரு சிலருக்கே நன்றாய்த் தெரிந்திருக்கும்.

ஸ்ரீ முத்துக்குமாருவோடு நான் அறிமுகமாகி இன்றைக்கு ஐம்பத்தைந்து வருஷத்துக்கு மேலிருக்கும். அவரும் அவர் தம்பியார் ஸ்ரீ வீ. எம். முத்துக்குமாருவும் சம்பத்திரிசியார் கல்லூரியில் நான்காம் வகுப்பிற் படித்துக் கொண்டிருக்கும் போது, நான் மானிப்பாய் பேச்சுச் சட்டம்பியாருடைய பள்ளிக்கூடத்திலிருந்து வந்து அந்த வகுப்பிலேயே சேர்ந்தேன். அக் காலம் எனக்குக் கணக்கு நன்றாய்ப் போகுமானாலும், தமிழை முந்திப் படித்திருந்தமையால் இங்கிலிஷ் அதிகம் ஓடாது. இங்கிலிஷ் உச்சரிப்பிலே என்னை நாட்டுப் பள்ளிக்கூடத்திலிருந்து வந்த ஒரு பையன் என்று வெளிப்படையாய்க் காட்டிக்கொண்டேன். முத்துக்குமாரு சகோதரர் இருவருமோ இங்கிலிஷில் மட்டுமல்ல, இலத்தினிலும் வெகு திறம். இருவரும் பிந்திவந்த என்னை விட்டு இரண்டொரு மாதத்துக்குள் மேல்வகுப்புக்குப் போய் விட்டார்கள். ஆயினும் அவர்கள் அடுத்த ஊரான ஆனைக்கோட்டையிலிருந்து வருகிறவர்கள் என்றதினால், மானிப்பாயிலிருந்து போன எனக்கும் அவர்களுக்கும் நட்புண்டாகி நெடுநாள் நிலைத்து வந்தது. சகோதரர் இருவரும் படிப்பிலே காட்டிய முன்மாதிரியான ஊக்கம் இன்றைக்கும் என் மனதில் அழியாமற் பதிந்திருக்கிறது. பிறகிட்டு இருவரும் உட்பள்ளிக்கூடத்திலே சேர்ந்து, அந்தந்த வகுப்பிலே முதலிடங்களில் நின்று அநேகம் பரிசில்களையும் வாங்குவார்கள். ஒரு பரிசளிப்பன்றோ வேறொரு பெருங் கூட்டத்திலோ இருவரும், எனக்கு அக்காலம் விநோதமாய்த் தோன்றிய இரண்டு வாத்தியக்கருவிகளை வாசித்து, தமிழ்க் கீர்த்தனங்களைப் பாடியது ஐரொப்பிய குருமாருக்கு ஆனந்தத்தை விளைத்தமை என் ஞாபகத்திலிருக்கிறது. பின்னொரு காலம் ஐரொப்பிய பத்திராசிரியர், 'கத்தோலிக்க பாதுகாவலன்' இங்கிலிஷ் பதிப்பிலே தமிழ்ச் சங்கீதத்தில் ஏதோ குறைபிடித்து எழுதியபோது, அந்நாளில் பள்ளிக்கூடம் விட்டு உத்தியோகத்தில் அமர்ந்திருந்த எஸ். ஆர். முத்துக்குமாரு அதற்கு எதிராய் நல்ல ஒரு மறுப்பெழுத அதைக்கண்ட மேற்படி பத்திராசிரியர் இவருடைய நியாயத்தை ஒத்துக் கொண்டு: "முத்துக்குமாரு சொல்வதென்றால் மறுக்க முடியாது, அவருக்குக் காரியம் நனறாய்விளங்கும்" என்று நான் கேட்கச் சொல்லுகிறவரானார்.

ஸ்ரீ முத்துக்குமாரு உத்தியோகத்தில் அமர்ந்து பிறவி டங்களுக்குப் போனபின் அவரோடு உறவாட எனக்குச் சந்தர்ப்பம் ஏற்படாமற் போய்விட்டது. இன்றைக்கு ஒரு பதினைந்து ஆண்டுகளுக்கு முன்தான் "இந்துசாதன" இங்கிலிஷ் பத்திரிகையிலே தமிழ் மக்களுடைய பழஞ் சரித்திரத்துறை ஒன்றைப்பற்றி வரையப்பட்ட ஒரு விஷயத்தின் பேரிற் குறிப்பு எழுதும் படி அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் என்னைக் கேட்டவிடத்தில் நான் எழுதிய ஒரு ஆட்சேபத்தைக் கொண்டு என்னுடைய பழைய நண்பரைப் புதிதாய் அறிமுகப் படுத்திக்கொள்ளக் கிடைத்தது. ஆந்த ஆட்சேபத்துக் குச் சமாதானம் சொல்லுகையில் எனது குறிப்புரைக்கு இலக்கான விஷயத்தை எழுதியவர் ஸ்ரீ முத்துக்குமாருவே என்று வெளிப்பட்டது. அன்று தொட்டு எங்களுக்கிடை யில் கடிதப்போக்கு வரவும் இடையிடையே நேரிற்கண்டு கல்வி விஷயங்களைப்பற்றிக் கலந்து பேசும் பாக்கியமும் ஏற்பட்டன.

நம்முள் அநேகருடைய தமிழ் அபிமானம் "உறவுறவென்றாலும் பறியிலே கைபோடாதே" என்ற படியிருக்கும். "தமிழ் வளர்ச்சி, தமிழ் வளர்ச்சி" என்று உரக்கப்பேசுவோர் பலர். அதற்காக ஒரு துளி வெயர்வை தானும் சிந்தார்கள் ஒரு வெள்ளைச்

www.padippakam.com



சல்லிதானும் எடுத்துச்செலவழியார்கள். ஸ்ரீ முத்துக்குமாரு இந்த மனப்பாங்குக்கு வெகு தூரப்பட்டவர் என்றதை அவர் தமிழர்களுடைய முன்னேற்றத்திற்காக ஓயாமல் உழைத்ததோடு தமது நடுத்தரமான வருவாயிலிருந்து பெருந்தொகைக்கு நூல்களை வாங்கி ஆராய்ந்து கொண்டு வந்ததினாலும் காணலாம். தம்முடைய ஆராய்ச்சிக்காக மட்டுமல்ல பிறருடைய ஆராய்ச்சிக்காகவும் பொருள் செலவிடப்பின்னிடார். ஒரு முறை நான் உரும்பிராயில் ஒருசிறு கொட்டிலிற்தங்கி இருந்து எனது சொற்பிறப்பு ஒப்பியல் அகராதியை எழுத ஆரம்பித்துக் கொண்டிருக்க என்னைக் காண அங்கு வந்தவர், நான் எழுதி முடித்திருந்த சில ஒற்றைகளைப் பார்த்தவுடனே, இந்த ஆராய்ச்சி தமிழுக்கு அவசியம் வேண்டும், உங்களுடைய கிளார்க்குக் கொடுக்கவும் சன்னியாசியான உங்களிடம் பொருள் இராது. எனது அற்ப பென்சன் காசிலிருந்து மாதம் மாதம் ஐவைந்து ரூபா அனுப்புகிறேன்" என்று சொல்லி, அன்று முதல் நாலு வருஷம் கொடுத்த வாக்கின்படியே செய்து கொண்டு வந்தார். பின்பு அவருடைய உள்ள நிலைபரத்தை நான் அறியவந்து, அப்பால் அனுப்பவேண்டாமென்று கேட்டுக்கொண்டேன். இதற்கிடையில் ஒருநாள் நான் அவரைக் காணும்படி குரும்பசிட்டிக்குப் போனபோது என்னுடைய கொட்டிலுக்கு இணையான ஒருசிறு அறையிலேயே என் நண்பர் வசிக்கக் கண்டேன். பின்புற வீடு விசாலமாய் இருந்தாலும் அவர் வேலை செய்துகொண்டும் உறங்கியும் வந்த முன் அறை சன்னியாசிகளுக்குரிய கொட்டில் போலவே இருந்தது.

ஒறுப்பான சீவியமும் பிறர் நன்மைக்காகப் பண்ணும் உழைப்பும் என்றதே அவருடைய குறிக்கோளாயிருந்தது என்று சொல்லலாம். தம்முடைய சின்ன மகனை வண்ணார்பண்ணையிற் படிப்புக்கும்படி நீராவியடியிலும், பின் கலாநிலையத்துக்கு அணித்தாயும் சில காலம் வந்திருந்தார். அந்நாட்களில் நாங்கள் ஒருவரை யொருவர் பலமுறை கண்டுகொள்ளச் சமயம் வாய்த்தது. முந்தியவிடத்தில் இருக்கையில் ஒருநாள் நான் அவரைக் காணப்போன போது தாம் தேடி வைத்திருந்த ஒரு விலையேறப்பெற்ற பொருளை எனக்கு ஒப்படைத்தார். அதாவது "கடதாசி நோட்டுக்கள்" கட்டி வைத்தது போல சொற்றுண்டுகள் கட்டிக் கட்டி அடுக்கியிருந்த ஒரு பெட்டி. என் நண்பர் பல வருஷங்களாய் முயன்று எத்தனையோ நூல்களை ஆராய்ந்து, தற்காலச் சாஸ்திரங்கள் எல்லாவற்றிலும் வருகின்ற இங்கிலிஷ் பரிபாஷைச் சொற்களுள் இருபத்து மூவாயிரத்திக்கு ஏற்ற தமிழ்ச்சொற்களைப் பொறுக்கியெடுத்து ஒவ்வொரு துண்டில் எழுதிச்சேர்த்து மாணாக்கர், உவாத்திமார், குருமார் பிரசங்கிமார், நீதிமன்றத்தவர்கள், தத்துவசாஸ்திரிகள், வேதசாஸ்திரிகள், விஞ்ஞான நூலாசிரியர்கள் சகலருக்கும் பயன்படுத்தத்தக்க ஒருபெரிய இங்கிலிஷ்-தமிழ் அகராதி செய்து விஞ்ஞானம் முதலிய எல்லாச் சாத்திரங்களையும் தமிழிலே கற்பிப்பதற்கும் இங்கிலிஷில் உள்ள பற்பல துறை நூல்களைப் போலத் தமிழிலும் எழுதுவதற்கும் தமிழுலகிற்கு உதவி செய்ய வேண்டும் என்றது அவரது கருத்து. தமக்கு சுகத்தாழ்வாயிருப்பதினாலும் நான் சொற்களோடு ஊடாடும் தொழிலில் ஏற்பட்டிருப்பதினாலும் நானே அந்த வேலையை நிறைவேற்ற வேண்டு மென்று அவர் கேட்டுக்கொள்ள, நானும் சம்மதித்து இன்றைக்கு இரண்டு வருஷமாய் அந்த வேலை என் கண்காணிப்பில் நடந்து வருகிறது. தன் நயங்கருதாமல் பிறர்க்கென வாழுகிற தன்மைக்கு ஸ்ரீ முத்துக்குமாரு ஒரு நல்ல எடுத்துக்காட்டு. அவருக்கும் எத்தனையோ அருமையான கைச்சரவை நூல்களைப் பிறருக்குக்காட்டாமற்கூட வைத்திருந்து, தாங்கள் இறந்தபின் செல்லுக்கிரையாகி மண்ணாய்ப் போக விட்டுவிடுகிற பிறருக்கும் எவ்வளவு அசகசாந்தர தூரம்!

ஸ்ரீ முத்துக்குமாருவை நான் கடைசியாய்க் காணக்கிடைத்தது, இவ்வருஷப்பிறப்புக்கு அடுத்த ஒருநாளில் என்று எண்ணுகிறேன். வருஷப்பிறப்பிற்கு முன் அவர் எனக்கு எழுதி: 'எங்கள் வருஷப்பிறப்பிலே நாங்கள் எங்களுக்கு அருமையானவர்களைக் காணப்போவது வழக்கம். ஆனபடியால் இன்னநாளைக்கு உங்களிடம் வருகிறோம்' என்று அறிவித்துக்கொண்டு சொல்லிய நாளிலே தமது பிந்திய மனைவி பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு திண்ணைவேலிக்கு வந்தார். அந்நாட்களில் அவர் கேட்ட காரியத்தை நான் அவருக்குச் செய்து கொடாமற் போனது துக்கம். அதாவது பூர்வகால ஐரோப்பாவில் தமிழரே குடியேறிஇருந்தார்கள் என்றதற்கு அத்தாட்சியாக அங்கே அநேக ஆற்றுப்பெயர்கள், மலைப்பெயர்கள், ஊர்ப்பெயர்கள் இன்றைக்கும் தமிழ்ச்சொற்களாகவே இருக்கின்றன என்று நான் பல காலம் சொல்லியதை, அவர் கேட்டிருந்து அவ்விஷயமாய் ஏதோ எழுத விரும்பி அப்படிப்பட்ட பெயர்களில் ஒரு முப்பது எடுத்து அனுப்பும்படி கேட்டுஎழுதியிருந்தார். எனது தலைதெரியாத அலுவல்களின் நடுவே அதற்கு வசதி வாய்க்கும் வாய்க்கும் என்றிருந்து அந்தச் சிறு உபகாரத்தைச் செய்யமுடியாமற்போய் விட்டது. சென்ற சனிக்கிழமை மாலை இரண்டு வாலிபர்கள் எனக்கு இழவு சொல்லவந்தபோது திடுக்கிட்டு விட்டேன். மின்னாமல் முழங்காமல் வெள்ளிடிவிழுந்தது போலிருந்தது. ஞாயிற்றுக்கிழமை என் அரிய நண்பருடைய சாவீட்டுக்குப்போக ஆயத்தஞ் செய்தும் முடியாமற் போனமையால் அவர் குடும்பத்துக்கு ஒரு அனுதாபத் தந்தி யனுப்புவதோடு அமையவேண்டியதாயிற்று. இறைவன் அவரது பர அன்புமிக்க ஆன்மாவுக்கு அருள் பாலிப்பாராக!

www.padippakam.com





# உயர் திரு. நா. பொன்னையா அவர்கள்

குரும்பசிட்டி பெற்றெடுத்த தவப்புதல்வர்களுள் ஒருவரான திரு. நா. பொன்னையா அவர்கள் தமிழுக்கும் தமிழ் இலக்கியத்துக்கும் ஆற்றிய பணிகளை மூன்று பகுதிகளாகப் பிரித்து நோக்கலாம். (1) ஈழகேசரி என்ற பத்திரிகையினை ஆரம்பித்து நடத்தியமை (2) நூல் வெளியீட்டுப் பணி (3) குரும்பசிட்டியில் சன்மார்க்க சபையினை அமைத்தமை.

திரு. நா பொன்னையா அவர்கள் ஆரம்பித்த ஈழகேசரியின் 28 வருடகாலச் சேவையினை ஆராய்வது ஒருவகையில் ஈழத்துத் தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தின் ஒரு பகுதியையும் குரும்பசிட்டி இலக்கியப் பாரம்பரியத்தின் ஒரு பிரதான கூறையும் ஆராய்வதாக அமையும். அதனைப் பற்றி ஏற்கனவே பலர் விரிவாக ஆராய்ந்துள்ளமையால் (உ- ம்: கனக. செந்திநாதனின் 'ஈழம் தந்த கேசரி') நான் இங்கு மிகவும் சுருக்கமாக நோக்கலாம் எனக் கருதுகிறேன். 1930இல் ஆரம்பிக்கப்பட்ட ஈழகேசரிப் பத்திரிகையினை திரு. நா. பொன்னையா அவர்களே ஆசிரியராய் அமர்ந்து 1938 வரை கொண்டு நடத்தினார். இவ் வெட்டு வருடங்களிலும் ஓரளவு பழமையைத் தழுவியதும், ஆராய்ச்சித் தன்மை கொண்டதுமான சமய இலக்கியக் கட்டுரைகளோடு அரசியலுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. 1931இல் இலங்கையருக்குச் சர்வசன வாக்குரிமை வளங்கப்பட்டது. அதன் காரணமாக இலங்கையரிடமே அரசியல் விழிப்புணர்ச்சி வளர்ச்சியடைந்தது. ஆதனைச் சரியாக வழிப்படுத்துவதில் ஈழகேசரிக்கு ஒரு பங்கிருந்தது. 1938இல் திரு. சோ. சிவபாதசுந்தரம் இதன் ஆசிரியராகியதோடு இலக்கியம், கலை என்பவற்றுக்கு முக்கியத்துவம் வளங்கப்பட்டது. இக் காலகட்டத்தில் ஈழத்தின் முன்னணி எழுத்தாளர்கள் பலர் இப் பத்திரிகையில் எழுத ஆரம்பித்தனர். 1944இல் திரு. இராஜ. அரியரத்தினம் ஆசிரியராகியதோடு புதிய பல எழுத்தாளர்கள் உருவாக இப்பத்திரிகை உதவியது. இதனால் ஈழத்திலும் குரும்பசிட்டியிலும் தரமான எழுத்தாளர் கூட்டமொன்றினை உருவாக்கியபெருமை ஈழகேசரியையே சாரும். உதாரணமாக அ. ந. கந்தசாமி, மஹாகவி, நாவற்குழியூர் நடராசன், சு. வே., கனக. செந்திநாதன், முருகையன், எஸ். பொன்னுத்துரை, டானியல், நீலாவணன் போன்றோர் இப்பத்திரிகையில் எழுதி வந்தனர்.

திரு. பொன்னையா அவர்களின் பணிகளுள் மிகவும் வியந்து போற்றத் தக்கது அவரது நூல் வெளியீட்டுப் பணியேயாகும். 1926இல் தனலக்குமி புத்தகசாலையையும் 1929இல் திருமகள் அழுத்தகத்தையும் ஆரம்பித்த திரு. பொன்னையா அவர்கள் ஆத்திசூடியில் தொடங்கி தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் (கணேசையர்) உரைக் குறிப்புக்கள் வரை பாடப் புத்தகங்கள், சமய நூல்கள் என்று நூறு புத்தகங்களுக்கு மேலாக வெளியிட்டுப் பணி புரிந்தார். இவற்றுள் தொல்காப்பியத்தினைப் பதிப்பித்தமையையே பலரும் பாராட்டினர். இதனைப் பாராட்டிப் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் பின் வருமாறு குறிப்பிட்டார்.

> "திரு. தாமோதரம்பிள்ளை அவர்கள் எடுத்து ஏந்திய தொல்காப்பியம் மறைகிற சமயத்திலே அதனை நன்றி மறவாமல் எடுத்துத் தாங்கிப் பயன்படுமுறையில் உபகரித்த திரு. நா. பொன்னையா அவர்கள் உத்தர வராகம் ஆயினார்கள்."

இவ்வாறு தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களைக் பிழையின்றி வெளியிடும் பாரம்பரியத்தை திரு. நா. பொன்னையா அவர்கள் முன்னெடுத்துச்சென்றுள்ளமை தெரிகிறது.

திரு. நா. பொன்னையா அவர்களின் அடுத்த முக்கியமான பணி 1934இல் குரும்பசிட்டியில் அவர் ஆரம்பித்த சன்மார்க்க சபையாகும். இதன் பணிகளைப்பற்றிச் சன்மார்க்கசபை வெளியிட்டுள்ள 30ஆவது ஆண்டு மலர் விரிவாக எடுத்துரைக்கின்றது. இச்சபையின் இலக்கியப் பணிகளுள் நூல்களைப் பதிப்பித்து வெளியிடுவதும் வெளியீட்டு விழாக்களை நடாத்துவதுஞ் சிறப்பானதாக அமைந்துள்ளன. திருவாளர்கள் இ. நாகராசன், கனக. செந்திநாதன், சு. வே., குறமகள், எஸ். போ. என்போர் எழுதிய 'மத்தாப்பு' என்னும் குறநாவல் முதலாக கவிஞர். வி. கந்தவனம் அவர்களின் 'இலக்கிய உலகம்' வரையில் பல நூல்களது வெளியீட்டு விழாக்களை நடத்தி அவற்றின் குறைநிறைகளை விமர்சிக்க வைத்ததின்

www.padippakam.com





மூலம் சன்மார்க்கசபை இலக்கியப் பரிமாறல்களை நடத்தும் ஒரு களமாகவும், பல நாடகங்களை மேடையேற்றும் தளமாகவும் சேவை செய்து வந்துள்ளது. மேற்சொன்ன மூன்று பணிகளையும் செய்த திரு. நா. பொன்னையா அவர்களைச் சரியாகப் படம் பிடித்துக் கவிஞர் சோ. தியாகராாசன் அவர்கள் பின்வருமாறு பாடியுள்ளார் :


பாலர்க்கு வேண்டும் பழமொழிப்பாட்டு
பக்குவ மான தமிழிற் கவிதை
சாலச் சிறந்தவர் கட்டுரைக் கோவை
தமிழில் மலர்ந்த சிறுகதைச் செல்வம்
கூலிக்கு மாரடிக் காத முயற்சி
குணம் பல கொண்டு மலர்ந்த அரும்பு
போலிச் சரக்கல்ல: ஆண்மையில் வாழ்ந்த
பொன்னைய வள்ளல் அளித்து மறைந்தான்.

ஆகவே, திரு. பொன்னையா அவர்கள் தேசிய விழிப்புணர்ச்சியை ஊட்டவும் இலக்கிய முயற்சிக்கு ஊக்கமளிக்கவும் ஈழகேசிப் பத்திரிகையை ஆரம்பித்து நடத்தியதோடு, ஈழநாட்டில் தரமான எழுத்தாளர் எழவும் உதவினார். திரு. கு. அம்பலவாணபிள்ளை அவர்கள் குறிக்கிட்டதுபோல,

பிரிட்டிஷ் அரசினரின் எல்லையற்ற வன்மைக்கும் ஒதுங்கியிருந்த காலம்... இத்தறுவாயில் ஒருவர் தனித்துநின்று சுதந்திர முழக்கஞ் செய்து உரிமைகளை வலிந்து கோருவதென்றால் அவரின் அஞ்சாமை எப்படியாக வேண்டும்?

சைவவித்தியாவிருத்திச் சங்கம், மலையாப் புகையிலைக் கூட்டுறவுச் சங்கம், மயிலிட்டிக் கிராம சங்கம், பண்டகசாலை யூனியன், சன்மார்க்க சபை, குரும்பசிட்டி ஐக்கியநாணய சங்கம், ஐக்கிய பண்டகசாலை, திருமகள் அழுத்தகம், தனலக்குமி புத்தகசாலை, வட இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம் என்ற பத்து ஸ்தாபணங்களுக்குமேல் அவர் முக்கிய பதவிகளை வகித்துத் தொண்டுபரிந்துள்ளார்.

சுருக்கமாகக் கூறின் ஆசிரியர். பொன். பரமானந்தர் அவர்கள் குரும்பசிட்டியில் ஓர் இலக்கியப் பரம்பரை உருவாகுவதற்கான சூழ்நிலையை உருவாக்கிவிட அத்தகைய ஒரு பரம்பரையினை நடைமுறையில் உண்மையாக உருவாக்கி விட்டவர் திரு. நா. பொன்னையா அவர்களே. அதனால் தான் அவரைக் குரும்பசிட்டியின் கதாநாயகன் எனக்கொள்ள வேண்டியவர்களாகவுள்ளோம்.



**சன்மார்க்க சபை மண்டபத்தில் - குன்றக்குடி அடிகளாருக்கு வித்துவசிரோமணி சி. கணேசையர் அவர்கள் தாம் எழுதிய உரைவிளக்கக் குறிப்புக்களைக் கொண்ட தொல்காப்பியப் பிரதிகளை உபகரிக்கின்றனர். 11/06/53**

www.padippakam.com





# உயர் திரு. கனக. செந்திநாதன் அவர்கள்

- கவிமணி வி. கந்தவனம்

ஈழத்து இலக்கிய வானில் இணையற்ற பிரகாசத்துடன் விளங்கிக்கொண்டிருந்த ஒரு நட்சத்திர எழுத்தாளர் கனக செந்திநாதன். ஈழநாடு, ஈழத்து எழுத்தாளர்கள், ஈழத்துப் படைப்புக்கள் என்று சிந்தித்துச் செயற்பட்டவர் அவர்.

ஈழகேசரிப் பொன்னையா அவர்கள் பிறந்த குரும்பசிட்டியிலே 5-11-1916ல் பிறந்தவர் செந்திநாதன். தந்தையார் கனகசபை. தாயார் பொன்னம்மா. உடன் பிறந்தவர் ஒருவர். பெயர் மீனாட்சி செந்திநாதனுக்கு 3 வயது முத்தவர்.

செந்திநாதனுக்கு தந்தையார் வைத்த பெயர் திருச்செவ்வேல் என்பது. திருச்செவ்வேல் தனது எழுத்துலகப் பெயரை கனக செந்திநாதன் என்று வைத்துக்கொண்டார். திருச்செவ்வேல் பிறந்து ஆறு மாதத்திலேயே தகப்பனை இழந்தார். அதனால் 'இன்னா இளமை வறுமை' என்பதை முழுக்க அனுபவிக்க நேர்ந்துவிட்டது. ஆனால் தாயின் தளராத முயற்சி மகனின் கல்வியை வளர்த்தது. குறைந்தது தனது மகனை ஒரு தமிழ் ஆசிரியனாகவாவது ஆக்க வேண்டும் என்பது தாயாரின் பெரு விருப்பாக இருந்தது. ஊரில் உள்ள மகாதேவ வித்தியாசாலை யிலும் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலை யிலும் செந்திநாதன் கல்வி கற்றார். 1934ம் ஆண்டு எஸ். எஸ். எல். சி யில் சித்தியெய்தினார். 1936ல் ஆசிரிய தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்திபெற்று 1937, 38ம் ஆண்டுகளில் திருநெல்வேலி சைவ ஆசிரிய கலாசாலையில் பயின்று பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறினார். 1939ம் ஆண்டு தை மாதம் ஆசிரிய உத்தியோகத்திற் சேர்ந்த செந்திநாதன் 32 ஆண்டுகளாகப் 10 பாடசாலைகளில் ஆசிரியப் பணி புரிந்தார்.

1940ம் ஆண்டு ஆனியில் செந்திநாதனுக்குத் திருமணம் நடந்தது. அவருக்கு மனைவியாகப் பேறு பெற்றவர் அவ்வூரைச் சேர்ந்த நாகம்மா என்பவர். இருவருக்கும் நான்கு பெண்களும் ஒரு மகனும் பிறந்தார்கள்.

இது செந்திநாதனின் குடும்ப வாழ்கை. அவரது இலக்கிய வாழ்க்கையை நன்கு விளங்கிக்கொள்ள இந்தப் பின்னணிக் குறிப்பு அவசியமானது. கிராமச் சூழலிற் பிறந்து, இளமையில் தந்தையை இழந்து, வறுமையில் வாடி கடின உழைப்பால் ஆசிரியராக வந்த ஒருவர் தானுண்டு தன் குடும்பம் உண்டு என்று இருப்பாரா அல்லது எவ்வித ஊதியமும் இல்லாத எழுத்துத் துறைக்கு வருவாரா? இந்த இடத்திலேதான் இரசிகமணியை வாசகர்கள் இனம் கண்டுகொள்ள வேண்டும்.

ஆசிரிய கலாசாலையில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் இரசிக மாணவனாக இருந்து, சிந்தனைச் செல்வர் பொ. கைலாசபதி அவர்களிடம் பத்திரிகைத் துறைக்குத் தேவையான வற்றை ஓரளவு படித்து வெளியேறிய இரசிகமணி திரு. சோ. சிவபாதசுந்தரத்தின் வழிகாட்டலோடு எழுத்துத் துறையில் புகுந்தார். எழுத்துலகில் சில காரியங்களைத் தமிழை மட்டும் படித்த தன்னாலும் சாதிக்கமுடியும் என்று துணிந்தார். அதற்காக அவர் தனது சிறிய ஊதியத்தின் பெரும் பங்கை புத்தகங்கள், பத்திரிகைகள், விசேடமலர்கள் என்பவற்றை வாங்குவதில் செலவு செய்தார். பல துறைகளிலும் ஏறத்தாழ 2000 நூல்களை வாங்கிச் சேர்த்தார்.

இரசிகமணி எழுதினார். எழுதுவதில் மட்டும் அவர் இன்பம் காணவில்லை. எழுத்தாளர்களைச் சந்தித்துப் பேசுவதிலும் அவர்களை ஊக்குவிப்பதிலும் மேலும் இன்பம் கண்டார். எழுத்தாளர் சங்கங்கள், புத்தக வெளியீடுகள், இலக்கிய விரிவுரைகள் எல்லாவற்றுக்கும் சென்றார். பல எழுத்தாள நண்பர்களது இன்பதுன்பங்களிற் கலந்துகொண்டார்.

எழுத்தாளர்கள் இரசிகமணியின் உறவினர்கள். ஆம். அவர் உதட்டளவில் இலக்கியம் பேசி உல்லாசபுரியில் வாழவில்லை. இலக்கியத்தை அவர் உள்ளத்தால் நேசித்தார். எழுத்தாளர்களுடன் உள்ளன்புடன் பழகினார்.

www.padippakam.com





இரசிகமணியின் இலக்கியப்படைப்புக்கள் அனைத்தையும் அவரது அறுபதாண்டு நிறைவு விழாவையொட்டி 'பூச்சரம்' என்ற மகுடத்தில் தொகுத்துள்ளேன். யாழ். இலக்கிய வட்டம் வெளியிட்டிருக்கும் இத் தொகுப்பிலிருந்து இரசிகமணியின் பன்முகப்பட்ட எழுத்தாற்றலை அறிந்துகொள்ளலாம்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, ஈழகேசரி நா. பொன்னையா, கலாகேசரி ஆ. தம்பித்துரை, சிற்பக் கலைஞர் ஆறுமுகம் என்போரின் வாழ்கை வரலாற்றை அவர் எழுதியிருக்கின்றார். சோமசுந்தரப் புலவர், அல்வாயூர்க் கவிஞர், அம்பி ஆகியோரின் கவிதைகள் பற்றி விமர்சன நூல்கள் எழுதி வெளியிட்டிருக்கின்றார். பள்ளு, பரணி, கலம்பகம் என்பவை பற்றிய அவரது வானொலிப் பேச்சுக்கள் நூல் வடிவம் பெற்றுள்ளன. மாணவர்களுக்கான நல்ல இலக்கிய இரசனைக் கட்டுரைகளைக் 'கடுக்கனும் மோதிரமும்' என்ற தொகுப்புக் கொண்டுள்ளது.

இவை யாவற்றுக்கும் மேலாக 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி' என்ற நூலை 1964ல் வெளியிட்டு எமது நாட்டின் இலக்கிய வளத்தைத் தமிழ் கூறும் நல்லுலகு முழுவதும் அறியும்படி செய்தார். ஈழத்துக் கவி மலர்கள், ஈழத்துப் பேனா மன்னர்கள், தற்காலக் கவிஞர் பற்றிய 'முற்றத்து முல்லை'க் கட்டுரைகள், ஈழத்துக் குழந்தைப் பாடல்கள் பற்றிய இரசனைக் கட்டுரைகள் போன்றவை மூலம் எங்கள் நாட்டின் எழுத்துக்கு மதிப்பும் மாண்பும் வரத் தொண்டாற்றினார். இவற்றைவிட அவரது ஆக்கப் படைப்புகளாக 'வெண்சங்கு' என்ற சிறுகதைத் தொகுதியும் 'ஒரு பிடி சோறு' என்ற நாடகமும் வெளிவந்துள்ளன. 'விதியின் கை', 'மத்தாப்பு' என்ற இரு நாவலகளும், 'நீதிக்கரங்கள்' எனற கவிதைத்தொகுதியும் நுல்களாக்கப்பட்டுள்ளன. 'செம்மண்' என்ற இவரது சிறுகதை 'ஒப்சேவர்' பத்திரிகையில் ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டது. 'ஒரு பிடி சோறு' என்ற மற்றொரு சிறுகதை ருஷ்சிய மொழியில் வெளிவந்த இலங்கைச் சிறுகதைத் தொகுதியிலும் இடம்பெற்றுள்ளது. இவர் இருபத்தைந்து சிறுகதைகளையும், நான்கு நாவல்களையும், பன்னிரண்டு நாடகங்களையும் எமக்கு வழங்கியுள்ளார்.

இவரது இலக்கிய சேவையாலும், பொதுச்சேவையாலும் வடிவம்பெற்ற பல சங்கங்களைக் குறிப்பிடல் வேண்டும். மறுமலர்ச்சிச் சங்கம், முற்போக்கு எழுத்தாளர் சங்கம் - யாழ்.கிளை, அகில இலங்கை எழுத்தாளர் சங்கம், யாழ். இலக்கிய வட்டம் என்பவற்றின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர் இரசிகமணி. சொந்த ஊராகிய குரும்பசிட்டியில் ஈழகேசரி நா. பொன்னையா அவர்களால் தோற்று விக்கப்பட்ட சன்மார்க்க சபையின் வளர்ச்சியிலும் அவர் ஒன்றிக் கலந்திருக்கின்றார்.

இரசிகமணியின் இலக்கிய சேவையைப் பாராட்ட முன் வந்த சங்கங்கள் பல:

1964ம் ஆண்டு கிழக்கு இலங்கை எழுத்தாளர் சங்கம் 'இரசிகமணி' என்ற பட்டத்தைச் சூட்டிப் பாராட்டியது.

1967ம் ஆண்டு யாழ். இலக்கிய வட்டம் அவரது 50ம் ஆண்டு நிறைவை ஓர் இலக்கியப் பெரு விழா வாகக் கொண்டாடியது.

1969ம் ஆண்டு அம்பனைக் கலைப் பெருமன்றம் 'இலக்கியச் செல்வர்' என்ற பட்டத்தையளித்துக் கௌரவித்தது.

1976ம் ஆண்டு யாழ். இலக்கிய வட்டம் அவருக்கு 'மணிவிழா' எடுத்தது.

ஈழத்து இலக்கியத் துறையிலும், தமிழ் நாட்டு நவீன இலக்கியப் பரப்பிலும் ஆழ்ந்த புலமை மிகுந்த ஒரு பேராசிரியர் இரசிகமணி அவர்கள். எழுத்தாளர், படிப்பாளர், படைப்பாளர், திறனாய்வாளர், பேச்சாளர், இரசனையாளர், அன்பாளர், பண்பாளர், தொழிலாளர் என்போரின் சங்கமந்தான் இரசிகமணி எனப்படும் கனக செந்திநாதன்.

அவர் நோய்வாய்ப்பட்டிருக்கையிலும் 'எப்படிச் சுகம்?' என்று யாராவது பார்க்கப் போனால் 'எப்படி இந்த நாவல்?' என்றுதான் பேச்சைக் கொடுப்பார். அவருக்கு நோயைப் பற்றிக் கவலையில்லை. ஓர் எழுத்தாளனைக் கண்டுவிட்டால் அல்லது ஒரு புதிய நூலைக் கண்டுவிட்டால் அவரது நோய் அகன்றுவிடும். ஆம் இலக்கியமே அவரது உயிரும் உடலும் பேச்சும் மூச்சும் கனவும் நினைவும். இவ்விதம் ஈழத்து இலக்கிய வானில் இணையில்லாவகை பிரகாசித்த இரசிகமணி அவர்கள் 1977 - 11 - 16 ல் மறைந்தும் மறையாத இலக்கியச்சுடர் ஆகிவிட்டார்.

படிப்பகம்

www.padippakam.com



# உயர்திரு. கே. கே. வி. செல்லையா அவர்கள்

"கலையை வாழ்வில் பொழுது போக்காகக் கொண்டவர்கள் மத்தியில், வாழ்வையே கலையாக எண்ணி, கலாபூர்வமான வாழ்வாக வாழ்ந்த கலைஞன், வியத்தகு ஓவியக் கலைஞனாக நாடகக் கலைஞனாக - கலைகளின் பிரதி விம்பமாக வாழ்வைப் பிரதிபலிக்கச்செய்த கலைஞன், காலத்தைக் கலைத்துவ மாக்கிய கலைஞன் தான் கே. கே. வி. செல்லையா அவர்கள்". இப்படிப் புகழாரம் சூட்டினார் 'சிரித்திரன்' ஆசிரியர். "கே. கே. வி. யின் 'வாக்குறுதி' என்ற நாடகம் பார்த்துத் திருப்தியடைந்தேன். நாட்டியக் கலையின் மேம்பாட்டை அடியொற்றிக், கலை வாழ்வை மையமாகக் கொண்ட இந்த நாடகத்தின் தரம் உயர்வானது" எனத் தேவன் - யாழ்ப்பாணம் அவர்களும் விதந்துரைத்துள்ளனர்.

இத்துணை பெருமைக்குரிய கே. கே. வி செல்லையா அவர்கள் கிராமியப் பண்புகள் பெரிதும் செறிந்த தெல்லிப்பழைப் பிரதேசத்துக்குரிய குரும்பசிட்டியையே பிறப்பிடமாகக் கொண்டவர். காவடி, கரகம், கோலாட்டம், கூத்து முதலிய கோயிற் கலைகளாய் மிளிர்ந்த, கிராமியக் கலைகளைப் பேணி வளர்த்த கிராமம். திருவிழாக்கள் இவற்றை உந்தி நின்றன. அண்ணாவிமார் பலர் ஊக்கி நின்றனர். இவற்றில் பங்குபற்றும் நாட்டம் மக்களிடம் வளர்ந்தது. 1900 இல் அந்தக் கிராமத்தை வழிநடத்திய 'பெரிய வாத்தியார்' என அழைக்கப்பட்ட பொன் பரமானந்தர் ஒரு கலைஞர். வருடாவருடம் கதாப்பிரசங்கம், நாடகம் என்பன பாடசாலையில் நடாத்துவித்தார். கலை வளர்ச்சிக்குரிய சூழலை உருவாக்கினார். அதில் தோய்ந்த பலர் கல்வியுடன் கலையிலும் பெரு விருப்புக் காட்டினர். இச்சூழல் கே. கே. வி. யையும் பாதித்தது உண்மை. குரும்பசிட்டி மகாதேவ வித்தியாசாலையிலும் (பொன். பரமானந்தர் மகா வித்தியாலயம்) பின்னர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும்
தொடர்ந்து சென்னை சென்று சித்திரத்துறையிலும் கல்விபயின்றார்.

இயற்கையிலேயே நாடக உணர்வும் துடிப்பும் விஞ்சி நின்றதால், தமிழ் நாட்டு வல்லுநரின் நாடகங்கள் பார்த்தும், அவ்விட நண்பர்களுடன் நடித்தும், நாடகம் பற்றிய பல அம்சங்களை அறிந்தும் 1940 அளவில் ஊர் திரும்பினார். கிராமச் சூழலும், ஆங்கிலப் படிப்பும், சென்னை நகர வாழ்வும் இவரது நாடக ஈடுபாட்டை மேலெடுத்தன.

இவரது நாடகத் தொழிற்பாடு 1941 இல் குரும்பசிட்டி மகாதேவா வித்தியாசாலையில் ஆரம்பித்தது. படு பழமையான முறையில் பவனி வந்த இசை நாடகத்துறையில் புதுமைகளும் புகுத்த வேண்டிய காலமாக, இடைநிலை மாற்றக் காலமாக இவரது காலமிருந்தது. மிகப் பழமையான நாடகத்துறையைப் புரிந்து கொண்ட இவர் பழைய பாணியில் புதிய உத்திகள் போக்குக்களையும் கையாண்டு நாடகத் துறையை முன்னெடுத்துள்ளார்.

முதலில் மாணவர்களுள் சிலரை நடிகர்களாகத் தேர்ந்தெடுக்கும் போது அழகு, கம்பீரம், குரல்வளம் உள்ளவர்களை, பாட வல்லவர்களை, வசனங்களை அட்சர சுத்தியுடன் உச்சரிப்பதில் வல்லவர்களைத் தேர்ந்தெடுத்தார். அழகுக்கு ஒரு அளவான முக்கியத்துவமே கொடுத்தார். அன்றைய நாடகங்களில் நடிகர்களே தாமாகப் பாடி நடிக்க வேண்டும். இன்று போல் பின்னணிப் பாட்டுக்கு நடித்தல், கோரஸ் பாட்டுக்கு நடித்தல், மைக்கின் துணைகொண்டு நடித்தல் என்பன அன்று நாடக உலகில் தலைகாட்டவில்லை. காதல் கட்டங்களில், சம்வாதத்தில், வீரம், சோகம்பீறும் வேளைகளில், இறைவனைப் பக்தியில் தோய்ந்து வேண்டி வணங்கும் கட்டங்களில் எல்லாம் வர முறையான விருத்தம், பல்லவி, அநுபல்லவி, சரணம் என்ற துறையில் பொருத்தமான ராகத்துடன் பாடி, நடிக்க வேண்டும்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி "இசை நாடகத்தில் தொகையறா, மிக முக்கியமானது" என்பார். "ரசிகர்களை ஈர்ப்பது இது" எனப் பல கருத்தரங்குகளில் குறிப்பிடுவார். ஆக பாடவல்ல
குரல் வளம் உள்ளவர்கள்தான் இசை நாடகத்தில்

www.padippakam.com



பங்கு பற்ற வேண்டிய நிலை. கே. கே. வி. இதனைப் பெரிதும் முக்கியத்துவப் படுத்தி நடிகர் தேர்வு செய்தார் ஆயினும் 'ஸ்பெஷல்' நாடகம் போலன்றி அளவாகவே பாடல்களைப் புகுத்தினார். 'இசையில் துணை போகியவனல்ல' என்பதை உணர்ந்த கே. கே. வி திரு. க. பொன்னம்பலம் ஆசாரியாரை இசைப் பயிற்சிக்கு அமர்த்திக்கொண்டார். அண்ணாவி கந்தப்பிள்ளை பழக்கி 1924 இல் குரும்பசிட்டி அம்பாள் ஆலய வீதியில் மேடையிட்ட 'பொற்கொடியாள்' நாடகத்தில் மேனகையாக ஆடிப் பாடிய பொன்னம்பலம் மேடைக்கெனப் பிறந்தவர் எனலாம். ஹார்மோனியம் வாசிக்க வல்லவர். இவர் துணையுடன் 'அல்லியருச்சுனா' நாடகத்தைப் புதுமை புகுத்தி நெறி யாள்வு செய்த கே. கே. வி. 'நாடகம் கூட்டு முயற்சி' என்பதைப் படித்தாரோ என்னவோ, நடைமுறைப்படுத்தி வெற்றி கண்டதில், நாடகத் தயாரிப்பு பற்றிய இவர் நுண்ணறிவை அறிய முடிகிறது. சீன்களைத் தவிர்த்தும் இலகு உத்தியில் களங்களைக் காட்டியும், இனியா-ளர்களை மேடையில் இருந்தாலும் சீரிய முறைகளைக் கையாண்டார். துரித நாடக நகர்த்தலுக்கு முக்கியத்துவம் கொடுத்தார். சென்னையில் கற்ற ஒப்பனைக் கலை, புதிய முறைகள் சிலவற்றைப் புகுத்த - துணை நின்றது. இந்த நாடகத்தில் மாணவனாகப் பங்கு கொன்ட நிலையில் இவரை முதற் குருவாகப் பெற்றேன்.

அடுத்து 1942 ஆம் ஆண்டு 'லவகுச' என்ற இசை் நாடகத்தை சிங்கப்பூர் பென்சனர், கலைஞர். கட்டுவனூர் சி. கந்தையா என்பவரின் வேண்டுதலில் நெறியாழ்கை செய்து மேடையிட்டார். சுத்தமான நல்ல தயாரிப்பாக அது அமைந்தது. கர்நாடக சங்கீதம் ஓரளவு பாடவல்ல கட்டுவன், குரும்பசிட்டி, வறுத்தலைவிளான் இளைஞர்கள் இதில் பங்குகொண்டனர். 'அல்லியருச்சுனா' வில் புகுத்திய புதிய அம்சங்களை இந்த நாடகத்திலும் இணைத்துக் கொண்டார். இருப்பினும் பழம்பெரும் நடிகர்கள் நடித்த 'ஸ்பெஷல்' நாடகங்களில் அவர்கள் பாணியிலும் நடித்தார். பழமையைப் புறக்கணிக்கவில்லை. 'பவளக் கொடி' என்ற ஸ்பெஷல் நாடகம் குப்பிளான் சந்தியடியில் 1943 இல் நடந்த போது கரையூர் ஜெயராசன், இணுவில் ஏ.சுப்பையா போன்ற பிரபல நடிகர்களுடன் இவரும் 'அன்னப்பிடாரன்' என்ற சிறு பாத்திரத்தில் அற்புதமாக நடித்தார். தான் இயற்றிய பாடலைப் பாடித் தானே தனக்குப் புதிய முறை கலந்த ஒப்பனை செய்து பார்வைக்குக் கவர்ச்சியாகப் பொருத்தமான தோற்றத்தில் நடித்தார். பழைய நடிகர்கள் அவரது பாணியை மெச்சுமளவுக்கு நடித்துப் புதுமை புகுத்தலை வரவேற்றல் நற்பயன் தருமெனக் காட்டினார்.

இசை நாடகங்களில் நடித்துச் சிலவற்றை நெறியாள்கை செய்து அவ்வகை நாடகத்தனம் இருந்ததாலும், 1944 க்குப் பின் வசன நாடகத் தயாரிப்புக்களில் கால் பதித்துச் சாதனை புரிந்தார். இசை நாடகங்கள் நடக்கின்ற வேளைகளில் சிறு சமூக நகைச்சுவை நாடகங்களையும் முக்கிய நாடகத்துக்கு முன் நடிக்கும் வழக்கம் அன்று இருந்தது. அவை செப்பனிடப்படாத, ஆபாசப் போக்குடைய, பாலியல் சம்பந்தப்பட்டதாக அமைந்திருந்தன. மாதிரிக்கு 'கள்ளப் புருஷன்' சிறு நாடகத்தைக் குறிப்பிடலாம். இப்படியான பிற்போக்குத் தனத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், 'நாட்டாண்மை நாகமணி' என்ற புரட்சிக் கருத்தடங்கிய சமூக நாடகத்தை யதார்த்த அமைப்பில் தயாரித்தார். இன்றைய நவீன நாடகத் தன்மைகள் பல அந்த நாடகத்தில் இழையோடின.

இசை நாடக காலத்தில் (60 ஆண்டுகளுக்கு முன்) யதார்த்த சமூக நாடகங்களை முறையாகப் பயிற்றி மேடையிட்ட சில கலைஞர்களில் கே. கே. வி. யும் குறிப்பிடத் தக்கவர். பாடல் லயிப்புள்ள இரசிகர்களைத் திசை திருப்பிச், சமூக நாடக நுகர்வுக்குக் கொண்டு வருவதென்பது அன்று ஒரு பாரிய முயற்சியே. முழு நீள சமூக நாடக அரங்கேற்றத்தில் இவரது பங்களிப்புப் புறக்கணிக்க முடியாதது.

கிராமப் புறங்களில் நாடகத் தரத்தை உயர்த்த நடிகராக, இயக்குநராக, ஒப்பனையாளராகப் பணிபுரிந்து வந்த கே. கே. வி. க்கு வலி வடக்குப் பிரதேசத்தில் தனி வரவேற்பு இருந்தது. தலைமை ஆசிரியர்கள், கல்லூரி அதிபர்கள் ஐ. பி. துரைரட்ணம், ரி. ஜெயரட்ணம் போன்றோர் இவரது சேவைக்கு மதிப்புக் கொடுத்து வரவேற்றனர். குட்டி மன்னனாக நாடகத் துறையில் சுடர்விட்ட கே. கே. வி. நகர்ப்புற நாடகக் களத்தை நாடினார். யாழ். நாடக உலகில் கலையரசு. கே. சொர்ணலிங்கமும், கே. சரவணமுத்துவும் புகழ்பூத்து நின்ற நடிகர்கள். கூனி வேடத்தில் கே. சொர்ணலிங்கம் பெயர்பெற, கைகேயியாக நடித்த கே. சரவணமுத்துவும் முக்கிய காரணமென்பர் அன்றைய இரசிகர்கள்.

இத்தகைய பெருமைக்குரிய சரவணமுத்து 'சாந்தி நாடக சபா' என்ற நாடகக் குழுவை உருவாக்கியிருந்தார். சாந்தி நாடக மன்றம் புதிய வார்ப்பாக 'ஜெயக்கொடி' என்ற நாடகத்தைத் தயாரித்து பல மேடைகளில் அரங்கேற்றியது. 1944 முதல் நடிக்கப்பட்ட இக்கலைப் படைப்பு யாழ். சமூக நாடகத்துறையில் தனி முத்திரை பதித்தது. கே. கே. வி. யின் கைவண்ணம் சுவறி இருந்தது.

சித்திரக்காரனாக, அதேவேளை கைப்பணி நுட்பமும் மிக்கவராக மிளிர்ந்தமையால், திரை விலகியதும் மேடை முழுவதும் பரந்து விரிந்து காட்சியளித்த மலைக்குகை அதிசயிக்க வைத்தது. அதிர்ச்சியுடன் நாடக ஆரம்பம் இருப்பது நல்ல உத்தி என்பர் இன்றைய நவீன நாடகக்காரர். அன்று இந்த உத்தியைக் கையாண்டமை இவரது விவேகத்தின் ஒரு அம்சமே.

www.padippakam.com





நாடக அநுபூதிமான் சரவணமுத்துவும் கே. கே. வி. யை ஊக்கியிருக்கிறார். இசை நாடகக் கலை முடிவில், வசன நாடகத்துக்கு மவுசு ஏற்பட்ட கால கட்டத்தில், காலத்தோடு ஒட்டிப் புதுமை புகுத்தி செப்பனிடப்பட்ட நாடக அமைப்பைக் காட்ட முயன்றிருக்கிறார்.

அநுபவம் முதிர்ந்த நிலையில், ஈழத்துச் சிறந்த எழுத்தாளர்களின் படைப்புக்களை மேடையிடல் நற்பயன் நல்கும் பணியெனக் கொண்டார். அக்காலத்தில் புகழீட்டிய எழுத்தாளன் நாடகக் கலைஞன் தேவன் யாழ்ப்பாணம் அவர்களது 'தென்னவன் பிரமராயன்' நாடகத்தை (வசன அமைப்பில் அமைந்தது) மேடையிட்டார். மேற்படி நாடகப் பிரதி, இலங்கைக் கலைக் கழகம் நடாத்திய நாடக எழுத்துப் போட்டியில் பரிசு பெற்றதாகும். தேவன் நல்ல நாடக இயக்குனர் ஆகையால் அவருடனும் சிந்தித்து, நெறியாழ்கை செய்து வெற்றி கண்டார். தான் மட்டும் புகழீட்ட வேண்டும் என்ற சுயம் தலைகாட்ட விடாது நாடகம் நாடகமாய் அமைய வேண்டும் என்ற இலட்சியத்தில் தொழிற்பட்டார். இப்படியான போக்கு அன்று பல வல்லுநரிடம் விஞ்சி நிற்கவில்லை. தொடர்ந்து 'சிங்கப்பூர் சிங்காரம்' போன்ற பல நகைச்சுவை நாடகங்களையும் தயாரித்தார். ஓய்ந்திருக்கவில்லை.

அன்று எழுத்துலகில் தனியிடம் பெற்றுத் திகழ்ந்த இரசிகமணி. கனக. செந்திநாதனைக் கொண்டு 'ஒரு பிடி அரிசி' என்ற நாடகத்தை எழுதுவித்தார். அப்போது இலங்கை வானொலி நிலையம், மன்ற நாடகங்கள் என்ற தொடர் நிகழ்வை நடாத்த முன்வந்தது. மன்றங்களே வானொலி நாடகங்களைத் தயாரித்து ஒலி பரப்புச் செய்யலாம் என்ற இந்தத் திட்டத்தை நழுவ விடாது, 'ஒருபிடி அரிசி' நாடகத்தைத் தயாரித்து அளித்தார். வானொலி நாடகத் தயாரிப்பாளர் எஸ். சண்முகநாதன் (சானா) ஆலோசனை வழங்கியி ருக்கலாம். வானொலி நாடக நுட்பங்களையும் கற்றுத் திருப்தியாகத் தொழிற்பட்டார்.

'ஒரு பிடி அரிசி' வானொலி நாடகமாக வெற்றியீட்டிய நிலையில், அதனை மேடை நாடகமாக்கினார். கே. கே. வி. ஒரு புதுமைப்பிரியனாகவும் வாழ்ந்ததால் நாடக அரங்கேற்றத்தில் ஈடுபட்ட இவர் இறுதிப் படைப்பாக "வாக்குறுதி" என்ற கலைப்படைப்பைச் சுவைஞர்கள் முன் சமர்ப்பித்தார்.

இந்த நாடகத்தின் முக்கிய பாத்திரம் ஒரு நர்த்தகி. நடனம் பயின்று தரமாக ஆடவல்ல தனது புதல்வி ரேலங்கியை (இன்று வானொலி தொலைக் காட்சி நிலையங்களில் அறிவிப்பாளராய்க் கடமை புரிபவர்) கலை நோக்குக் காரணமாய்ப் பங்கு பற்ற வைத்தார். பருவமடைந்த புதல்வியை நடிக்க விடலாமா? என்ற கேள்விக்கே இடமளியாது, நாடகக் கலையில் உள்ள உண்மை வெறி காரணமாய் ரேலங்கியை நடிக்க வைத்தார். "பின் தங்கியிருக்கும் தமிழ் நாடக உலகு முன்னேற மகளிர் இத்துறையில் ஈடுபட வேண்டும்" எனப் பல கலைஞர்கள், பெருமக்கள் மேடையில் முழங்குவர். நடைமுறைப்படுத்தப் பின்னடிக்கும் பிற் போக்குக்காரர்! "சமூகத்தில் பிள்ளை நடமாடுவ தில்லையா? கெட்டபெயரை அநாவசியமாகச் சம்பாதிக்க வேண்டுமா?" என்று கூறிப் பின்னடித்தவர்கள் ஏராளம். தனித்துவப் போக்குடைய - நல்லது செய்யும் நோக்குடைய - கே. கே. வி. மகளை நடிக்க வைத்தார். இவரை விட உண்மைக் கலைஞன், துணிவான கலைஞன் வேறு யார்?

நர்த்தகி பல்லக்கில் இருந்து வரும் காட்சி நாடகத்தில் வருகிறது. சித்திர அமைப்பில் அமைந்த பல்லக்குத் தூக்கப்படுதல், உலாவாக எடுத்து வரப்படுதல் கட்டங்கள் காட்சி இன்பம் தந்து இரசிகர்களை ஈர்த்த இடங்கள். நாடகம் கண்ணுக்குரியதா? செவிக்குரியதா? இரண்டிற்கும் உரியது என்பது போல இந்த நாடக நிகழ்வு அமைந்திருந்தது. அறுபதுகளில் இப்படியான கூடிய அக்கறையுடன் தயாரிக்கப்பட்ட நாடகங்கள் மிகச்சிலவே. தான் ஒரு போலிச்சரக்கல்ல என்பதைக் கே. கே. வி. இந்த நாடக மூலம் இனங்காட்டியுள்ளார்.

அடுத்துப் பிரபல நாடகக் கலைஞர் ஏ. இரகுநாதன் 'ஒரு சலங்கை சதுராடுகிறது' என்ற சினிமாப் படத் தயாரிப்பை முன்னிட்டு, பெண் பாத்திரத்துக்குப் பொருத்தமான ஆள் தேடி அலைந்திருக்கிறார். "ஐயோ நடிப்பா வேண்டாம், எனக்கு விருப்பம். ஆனால் அப்பா அம்மாவுக்கு... என்று பல பேர் பின் வாங்குகிறார்கள்" என இரகுநாதன் எழுதியுள்ளார். கே. கே. வி. யிடம் நாடிய போது "ரகு நீ படம் எடுப்பதாயின் நான் தருகிறேன் நர்த்தகியை", என்று அநுமதித்தாராம் ரேலங்கியை. கலைக்கு மதிப்பளித்த உண்மைக் கலைஞன் கே. கே. வி.!

கலைஞர்கள் மதிப்பாகத் தனி மிடுக்குடன் மக்கள் மன்றில் உலாவ வேண்டும்: ஏதோ நசிந்து இரண்டாம் பட்சப் பேர்வழிபோல் வாழக்கூடாது: குறுக்கு நோக்கில், தன் காரியம் பார்ப்பதற்காக உயர் பதவி யில் இருப்பவர்கள், உத்தியோகஸ்தர்கள், பெரியவர் போல் சமூகத்தில் நடிப்பவர்களுக்குப் பின்னால் பல்லிளித்து நெளியக் கூடாது: வால் பிடிக்கும் போக்கு ஆகாது என்ற கோட்பாடுகளை நடைமுறையில் காட்டிய கலைஞன் கே. கே. வி. கலைஞனுக்குக் கௌரவம் வேண்டும் என்பது இவரது கட்சி.

www.padippakam.com





# உயர் திரு. ஏ. ரி. பொன்னுத்துரை அவர்கள்

எமது கிராமம் பெற்றெடுத்த மற்றொரு பெருமகன் ஆசிரியர் திரு. ஏ. ரி. பொன்னுத்துரை அவர்கள். இவர் பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர். சென்னைப் பல்கலைக் கழகத்துப் பட்டதாரி. ஆசிரியராகவும் அதிபராகவும் நீண்ட காலக் கல்விச் சேவை புரிந்த பொன்னுத்துரை அவர்களின் பேச்சும் மூச்சும் நாடகம்... நாடகம்...நாடகம் அன்றி வேறொன்று இல்லை.

சிறுவயதிலிருந்தே இவருக்கு நாடகத்தில் அதிக ஈடுபாடு. அந்தக் காலத்தில் குரும்பசிட்டியில் கோயில் திருவிழாக்களில் ஆட்டக் கூத்துக்களும் நாடகங்களும் மேடையேற்றப் படுவது வழக்கம். குரும்பசிட்டியைச் சேர்ந்த பிரபல ஓவியரும் நாடகக் கலையருமாகிய திரு. K.K.V. செல்லையா அவர்கள் தயாரித்த 'நாட்டாமை நாகமணி' என்ற சமூக நாடகத்தில் நடிக்கும் வாய்ப்பை இவர் முதன்முதலாகப் பெற்றார். அதனைத் தொடர்ந்து லவகுச, அல்லி அருச்சுனா முதலிய இசை நாடகங்களிலும் சிறு பாத்திரங்களில் நடித்துள்ளார்.

எனினும் இவரது முறையான நாடகத்துறைப் பிரவேசம் - நாடக அரங்கேற்றம் பரமேஸ்வராக் கல்லூரியிலே இடம் பெற்றது. 1950ஆம் ஆண்டு பரமேஸ்வராக் கல்லூரியில் பிரெஞ்சு நாடக ஆசிரியர் மோலியரின் 'உலோபியின் காதல்' என்ற நாடகத்தில் உலோபியாகப் பிராதான பாத்திரத்தை ஏற்று நடித்து ஆசிரியர்கள், பெற்றோர்கள் என எல்லோரதும் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்றார்.

சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியிலும் இவர் நாடகத் துறையில் தமது முத்திரையைப்
பதித்துள்ளார். அங்கு முதலாளி தொழிலாளி, குவேனி, ராகி மை டியர் போன்ற நாடகங்களை இயக்கித் தயாரித்ததோடு அவற்றில் நடித்தும் புகழ் பெற்றார்.

இதுவரை 25 நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றியிருப்பினும் பொன்னுத்துரைக்கு அதிக புகழைக் கொடுத்த நாடகம் 'தாளக் காவடி' ஆகும். இலங்கை வானொலி நடத்திய நாடகப் போட்டியில் முதலாம் பரிசு பெற்ற இந் நாடகம் 1973 நவம்பரில் வானொலியில் ஒலிபரப்பப்பட்டு இவருக்குப் பெரும் புகழை ஈட்டிக் கொடுத்தது. திரு. K.M. வாசகர் தயாரித்தளித்த இந் நாடகத்தில் கணேசபிள்ளை, சந்திரப்பிரபா மாதவன், ராஜகோபால், வித்துவான் சோதிநாதன் போன்ற பிரபல நடிகர்கள் நடித்தனர். தாளக்கட்டுக்களை பொன்னுத்துரை இசைக்க பின்னணிப் பாடல்களை நடிகமணி வைரமுத்து பாடினார்.

பின்னர் 'தாளக் காவடி'யை மாவை ஆதினகர்ததா சிவஸ்ரீ சு. து. சன்முகநாதக் குருக்கள் மேடை நாடகமாக்கிப் பல தடைவைகள் மேடையேற்றினார். தாளக் காவடி முருகப் பெருமானுக்குரிய தலையாய வழிபாட்டு முறையாதலாலும் பக்தியை வளர்க்கும் நாடகம் ஆதலாலும் குருக்கள் ஐயா அவர்கள் இந் நாடகத்தில் அதிக அக்கறை காட்டினார். அதுமட்டுமின்றி இயல்காகவே கலையார்வம் மிகுந்த குருக்கள் அவர்கள் திரு. பொன்னுத்துரையின் முயற்சிகளுக்குப் புரவலராகவும் விளங்கினார். தாளக் காவடி நாடகத்தில் காவடி பழக்கும் முறை, விதம் விதமான தாளக் கட்டுக்கள், காவடி ஆட்ட நுணுக்கங்கள் எனத் தாளக் காவடியின் பலவகையான சிறப்புக்களைத் திரட்டி இளைய தலை முறையினருக்கு வழங்கும் ஒரு சாதனமாகவும் விளங்கியதால் மக்கள் மத்தியில் பெரும் பாராட்டுதலையும் பெற்று பொன்னுத்துரை அவர்களுக்கு அதிக புகழைக் கொடுத்தது.

இவரின் 'வருஷம் பிறந்த முன்னம் முன்னம்', 'நிறைகுடம்', 'இறுதிப் பரிசு' போன்ற நாடகங்களும் அதிக அளவில் மேடையேற்றப்பட்டுள்ளன.

மரபுவழி நாடக முறைகளில் ஈடுபட்டிருந்த போதும் திரு. பொன்னுத்துரை அவர்கள் பிற்காலத்தில் நவீன நாடக உத்திகளிலும் அதிக நாட்டம் காட்டினார். 1978ல் ஆரம்பிக்கப்பட்ட நாடக அரங்கக் கல்லூரியில் சேர்ந்து நவீன நாடகம் பற்றியும் இவர் பயின்றிருக்கின்றார்.
தாசீசியஸ், குழந்தை சண்முகலிங்கம், மௌனகுரு ஆகியோரின் நெறியாள்கையில் பல நவீன

www.padippakam.com





நாடகங்களில் நடித்தும் இருக்கின்றார். சிறுவர் நாடகங்கள் சிலவற்றை குறியீட்டு முறையில் தயாரித்து மேடையேற்றியுமுள்ளார்.

நாடக எழுதாளர், இயக்குநர், தயாரிப்பாளர், நடிகர் என நாடகம் சார்ந்த பல கூறுகளிலும் தன்னை இனம் காட்டிக்கொண்ட திரு. பொன்னுத்துரை அவர்கள் நாடகம்பற்றிப் பல ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அவற்றுள் 'பாடசாலை நாடகம்', 'ஓரங்க நாடகம்', 'நகர்ப்புற நாடகங்கள்' போன்ற கட்டுரைகள் நாடகம் பற்றிய இவரது பரந்த அறிவை எடுத்துக் காட்டுவனவாக உள்ளன.

தமிழ் நாடகம் பற்றி ஆழமான ஆய்வுகளை மேற்கொண்ட பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் திரு. ஏ. ரி. பொண்னுத்துரை பற்றிக் குறிப்பிடும் போது "ஈழத்து நவீன தமிழ் நாடக வரலாற்றின் அண்மைக்கால நெறிப்பாடுகளையும், வளர்ச்சியையும் அறிய முனையும் எவரும் ஏ. ரி. பொன்னுத்துரை என்ற பெயர் பல சான்றாதாரங்களில் நின்று ஒளிர்வதைக்காண்பர். நாடக ஆசிரியனாய், நடிகனாய், நெறியாளனாய் திரு. பொன்னுத்துரை அவர்கள் குறிப்பிடத்தக்க தொண்டாற்றியுள்ளார்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

குரும்பசிட்டி சன்மார்க்க சபை, யாழ். இலக்கிய வட்டம், கலை, இலக்கியக்களம் போன்ற அமைப்புகளின் வளர்ச்சிக்கும் இவர் அயராது உழைத்தவர்.

நாடகத் துறையில் இவரது 25 ஆண்டு காலப் பணியைப் பாராட்டி 1974ஆம் ஆண்டு கலை இலக்கிய நண்பர்கள் இவருக்கு வெள்ளி விழா எடுத்தனர். இங்விழாவில் கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் இவருக்கு 'கலைப்பேரரசு' என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார்.

"வித்தியாசமான கலை ஈடுபாடுடைய பல கலைஞர்களைக் கொண்ட வித்தியாசமான ஊர் குரும்பசிட்டி."

- இரசிகமணி செந்திநாதன்

www.padippakam.com



# உயர்திரு. வி. கந்தவனம் அவர்கள்

- எஸ். பத்மநாதன்

இலக்கியத்தை இதயத்திலே சுமந்து, கவிதைதனை வாழ்வின் முகவரியாகக் கொண்டு, இலக்கிய நண்பர்களை உயிரென நேசித்து, மனித மனோபாவங்களை உணர்ந்து, சிறப்புமிக்க தமிழித்தொண்டராய் வாழும் கவிஞர் கந்தவனம் அவர்களை நினைவு கூர்ந்தால் அமுதம் பொழியும் அவரது கவிதைகளே நம் எண்ணத்திற்கு வரும். பலதுறை ஆற்றல் நிரம்பப் பெற்ற பேரறிஞரான இவர் 'நமக்குத் தொழில் கவிதை' என்பதற்கே மிகவும் உரித்துடையவர்.

கவிஞர் அவர்கள் சாவகச்சேரி, நுணாவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆரம்பக் கல்வியை நுணாவில் மேற்கு கணேசவித்தியசாலையில் கற்று பின்னர் சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் இடைநிலைக்கல்வியைக் கற்றார். 1946 இலிருந்து 1952 வரை இங்கு கல்விகற்ற கவிஞர் அவர்களின் இலக்கியத்துறைப் பிரவேசம் 1948இல் ஈழகேசரி பத்திரிகையில் வெளியான முதற்கட்டுரையுடன் ஆரம்பமானது. றிபேக் கலலூரித் தமிழ் இலக்கிய மன்றக் கையெழுத்துப்பத்திரிகையின் துணை ஆசிரியராகவும் செயலாற்றிய கவிஞர் அவர்கள் "The Adventures of Sam" என்ற ஆங்கில நாவலையும் ஆங்கில இலக்கிய மன்றத்தின் கையெழுத்துப் பத்திரிகைக்காக எழுதியிருந்தார்.

1954இல் கவிஞர் அவர்களது முதலாவது நூல் 'ஒன்றரை ரூபாய்' என்ற குறுநாவல் வெளிவந்தது. தனது பெயரின் முதலெழுத்தோடு தந்தையின் பெயரையும் சேர்த்து 'கவிநாயகன்' என்ற புனைபெயரில் எழுதியிருந்தார். பொலிஸ்காரர்கள் இலஞ்சம் வாங்குவதை மையக்கருத்தாகக் கொண்டிருந்தது இவரது குறுநாவல்.

1954 ஜூனில் இந்தியா சென்ற கவிஞர் அவர்கள் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் தனது உயர் கல்வியைத் தொடர்ந்தார். கிறிஸ்தவக் கல்லூரியின் தமிழ்ப் பேரவையில் துணைச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். சென்னை கிறிஸ்தவக் கல்லூரி, கோவை கலைக் கல்லூரியில் பயின்ற கவிஞர் அவர்கள் பீ. ஏ. பட்டப்படிப்போடு தனது தேடலை நிறுத்திக்கொள்ளாது இலங்கை திரும்பிய பின்னர் கல்வி, நாடகம் கற்பித்தல், உயர்தர ஆங்கிலம் ஆகியவற்றில் 'டிப்ளோமா' பட்டம் பெற்றார்.

கவிஞர் அவர்கள் மாத்தளை சென்தேமஸ் கல்லூரியில் தனது ஆசிரியப் பணியினை ஆரம்பித்தார். பின்னர் அருணோதயாக் கல்லுரியில் அதிபராகக் கடமையாற்றினார். கொழும்புத்துறை ஆசிரியர் கல்லூரியில் பகுதிநேர விரிவுரையாளராகயும் பணியாற்றியிருக்கின்றார். நாடகத்தை ஒரு பாடமாக முதன்முதலில் ஈழத்தில் கற்பிக்க ஆரம்பித்தவர். புவியியல் பாடநூல்களை முதன் முதலில் வர்ணப்படங்களோடு தயாரித்து வெயிட்டவர்.

கவிதை, சிறுகதை, நாடகம், ஆய்வுக்கட்டுரைகள், சமயற்சொற்பொழிவுகள், கவியரங்கங்கள், விவாத அரங்குகள் என ஒவ்வொன்றிலும் தனிமுத்திரை பதித்த கவிஞர் அவர்கள் எண்ணிறந்த கவிதைகளையும், கவியரங்குகளையும் தந்திருக்கின்றார். கவிஞர் அவர்கள் 23 நூல்களை எழுதியுள்ளார். ஒன்றரை ரூபா, சிட்டுக் குருவி, இலக்கிய உலகம், ஏன் இந்தப் பெருமூச்சு, கூனியின் சாதனை, கீரிமலையினிலே, நுணாவிலூர், பரீட்சையில் சித்தியடைவது எப்படி, உய்யும் வழி, பாடுமனமே, கவியரங்கில் கந்தவனம், இலங்கையில் ஆசிரியத்தொழில், வித்தியானந்த மாலை, நல்லுர் நாற்பது, Hail, The Tamil Tigers, விநா யகப் பா, மணிக் கவிகள், இயற்கைத் தமிழ், தங்கம்மா நான் மணி-மாலை, ஆறுமுகம், பத்துப்பாட்டு, Lasting Light, 12 Short Stores.

கவிஞர் அவர்கள் யாழ். இலக்கிய வட்டதின் தலை-வராகப் பணியாற்றிய காலம் ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய காலப்பகுதியாகும். பல இலக்கிய ஆர்வலர்களது ஆக்கங்கள் அச்சுவாகனமேறியுள்ளன. கவிஞர் அவர்கள் குரும்பசிட்டியில் தனது மனையாள்

www.padippakam.com





தவமணியைத் தேர்ந்தெடுத்ததும், ஈழத்து இலக்கியத் துக்குக் காத்திரமான பங்கினை வழங்கிய இரசிகமணி கனக. செந்திநாதன், கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை, வெற்றிமணி ஆசிரியர் மு. க. சுப்பிரமணியம் ஆகியோருடன் இருந்த நட்பும், ஈழகேசரி பத்திரிகையுடன் இருந்த தொடர்பும் கவிஞர் அவர்களின் பங்களிப்பை விசாலப்படுத்தியது.

கவிஞர் அவர்களை முதன்முதலாக கௌரவித்த தாபனம் சென்னை ஐஸ்வரிய ஆச்சிரமம்.
அளவெட்டியில் 'கவிமணி' என்ற பட்டம் அருட்கவி விநாசித்தம்பி அவர்களால் சூட்டப்பட்டது.
கனடாவில் 1993ஆம் ஆண்டு நவம்பரில் நடந்த மணிவி ழாவில் 'கவிநாயகர்' என்ற பட்டமும், மொன்றியாலில் 'மதுரகவி' என்ற பட்டமும் வழங்கப்பட்டது. ஏறத்தாழ ஐம்பதாண்டு காலமாக தொடர்ந்து தமிழில் கவிதை, சிறுகதை எழுதிய இவர் அண்மைக்காலமாக ஆங்கிலத்திலும் கவிதை, சிறுகதைகளை எழுத ஆரம்பித்துள்ளார். பல்துறை வித்தகரான கவிஞர் அவர்களால் குரும்பசிட்டிக் கிராமம் மேலும் பொலிவு பெற்றுள்ளது.

செந்தமிழ்க் கவிஞர், கல்விச்சிந்தனையாளர், தமிழ் ஆங்கிலப் புலமையாளர், மொழிபெயர்ப்பாளர், சொற்பொழிவாளர், நடிகர், தமிழப்பணியாளர் என்ற பல்வேறு துறைகளிலும் தனது முழுமையான ஆற்றல்களை வெளிப்படுத்திய கவிஞர் கந்தவனம் அவர்களது கவிதைகள் அனைத்தும் தமிழ் மொழியின் செழுமையையும், வலிமையையும் கூட்டும் திறன் கொண்டவை.

"செந்தமிழ்ப்பற்றும், சிவநெறிப்பற்றும் ஒருசேரப் பெற்று மனிதநேய ஒருமைப்பாட்டைக் கடைப்பிடித்து வாழ்கின்ற மக்கள் பலரை ஈன்றெடுத்த பெருமை குரும்பசிட்டி கிராமத்திற்குண்டு. அருள் வளமும் பொருள் வளமும் மிகுந்த இக் கிராமத்தின் பெருமை ஈழத்தமிழ் மண்ணிலே என்றும் நின்று நிலவக்கூடியது".

- சிவத்தமிழ்ச் செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி, J.P.

www.padippakam.com



# உயர் திரு. இரா. கனகரத்தினம் அவர்கள்

ஈழத்தமிழர் வரலாறு - சரித்திர (பத்திரிகை)க் குறிப்புக்களைப் பார்க்கும் போது உலகில் எந்த ஒரு தமிழனும் - தமிழ்த் தலைவனும் செய்து வைத்திருக்க முடியாத அற்புதப் பொக்கிஷம் என்று கூறத்தோன்றுகிறது. "நான் பெற்ற செல்வங்களுள் மூத்த பெருஞ் செல்வம் இது" என்று பேணிவருகிறாரா என்றால் பாருங்களேன். ஆண்டுகள் ஓடி மறைகின்றன. மீண்டும் ஒரு நாள் வழக்கமாக "கனகு"வைச் சந்திக்கிறேன். "என்ன வந்தாலும் வரட்டும் நான் ஆரம்பிக்கத்தான் போகிறேன்" என்று ஒற்றைக்காலில் நின்றார். இவரது பரந்த முயற்சிகள், இதனால் ஏற்படப்போகும் தனிப்பட்ட நஷ்டங்கள், கஷ்டங்கள் பற்றி எனக்கு உள்ளூரப் பயமாய் இருந்தாலும். ''இறங்கவேண்டியதுதான். பாராட்டுதல்கள். உங்கள் முயற்சி நிச்சயம் வெல்லும்" என்று கூறி வைத்தேன். இதன்பின் தான் உலகத் தமிழர் பாதுகாப்புக் கழகம், உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம். "உலகத்தமிழர் குரல்" மாத ஏடு உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களின் ஐக்கியத்துக்காகவும், அவர்களின் மொழி, கலை, கலாச்சார மறுமலர்ச்சிக்காகவும் வெளியிடப்பட்ட இந்த ஏடு முதல் "கனகு"வால் தட்டச்சுப் பொறி மூலம் வெளியிடப்பட்டுப் பின்னர் அச்சு வாகனம் ஏறியது. "ஈழத்தில்" தமிழர்களை ஒற்றுமைப்படுத்த முடியவில்லையே.. உலகத்தமிழர்களை.." என்று மூக்கால் அழுபவர்களைப்பார்த்து கனகு என்ன சொல்லுகிறார் தெரியுமா? இலங்கையில் இனத்துக்கும் மொழிக்கும் வரும் துயர் கண்டு குரல் எழுப்பத்தலைவர்கள் உண்டு. ஆனால் வெளிநாடுகளில் தமிழ் இனம் அழிந்து கரைந்து கொண்டு போகிறது. அங்கு வாழும் நம் தமிழர்களின் பெயர் மட்டும் தமிழாக இருக்கிறதே தவிர, அந்தப் பெயரைத் தாங்கியவர்களோ வேறு மொழி பேசி, வேறு கலை, கலாச்சாரங்களால் மூழ்கடிக்கப்பட்டு வருகிறார்கள். இப்படி உலகெங்கும் சிறுபான்மையி-னராகப் பரந்து வாழும் தமிழர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் அவசியம் தேவை. இந்த அமைப்பின் கொள்கைகளைப் பரப்ப 'உலகத் தமிழர் குரல்" என்று விளக்கமளிக்கிறார். நண்பர் இரா. கனகரத்தினம் தமிழ் என்றால் சாவார். உலகத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தை ஆரம்பித்துப் பின்பு பண்பாட்டு இயக்கமாகப் பெயர் மாற்றி இதற்காக யாழ் நகரில் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு வருகை தந்த கடல் கடந்த தமிழப் பிரதிநிதிகளை விரட்டிப் பிடித்து, டாக்டர் சாலை இளந்திரையனை தலைவராக இருக்கும்படி வற்புறுத்தி வெற்றியும் கண்ட கனகுவின் சரித்திரம் இலட்சிய வெறிபித்தது.

இவ்வாறு "ஆவணஞானி" இரா. கனகரத்தினம் அவர்களைப் பற்றி உயர்திரு மு.பு. மகா தேவா அவர்கள் 25.05.1975 சுதந்திரன் வார மலரில் குறிப்பிட்டிருந்திருந்தார்.

இத்தகைய இலட்சியவாதியான இரா. கனகரத்தினம் அவர்கள் குரும்பசிட்டிக் கிராமத்தில், இராமசாமி தம்பதிகளினருக்கு செல்வப்புதல்வனாய் வாய்த்தார். இவர், மிக முற்போக்கான சிந்தனையாளர். சிறந்த எழுத்தாற்றல் உடையவார். இலட்சியவாதி. இவர் தனது பெயருடன் எப்பொழுதும் "குரும்பசிட்டி" என்ற கிராமம் பெயரையும் சேர்த்தே எழுதுபவர். உலகளாவியரீதியில் எமது கிராமத்தின் பெயரை மூலை முடுக்கெங்கும் கேட்கவைத்தவர்.

இவரது, தமிழர் மொழி, கலை, கலாச்சார, வரலாற்று தகவல்கள் ஆவணப்படுத்தும் முயற்சி மூதறிஞர் - தந்தை செல்வா, அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, அமரர் எம், ஜி. ஆர் வணக்கத்திற்குரிய பிதா. தனிநாயகம் அடிகள், பேராசிரியர்கள் சு. வித்தியானந்தன், ஆ. துரைராஜா, எஸ். பத்மநாதன், சாலை. இளந்திரையன் இன்ன பிற தகைசான்ற பெரியோர்களால் மிக உவந்து பாராட்டப்பட்டிருக்கிறது.

சமயச்சூழலும், தொன்றுதொட்டு வரும் வழக்கங்களையே பின்பற்றி வரும் மனோபாவமும் மலிந்த கிராமமக்களிடையே தனது திருமணத்தை சீர்திருத்தத்திருமணமாக நிகழ்த்திக் காட்டியவர். கல்விமானகள் பலர் நிறைந்த எமது கிராமத்தில் துணிந்து மாற்றுக் கருத்துக்களை அறிமுகப்படுத்தியவர். மூதறிஞர் தந்தை செல்வாவை முதன் முதலில் எமது

www.padippakam.com





கிராமத்திற்கு அறிமுகப்படுத்தியவர். அப்பெரியவர் முன்னிலையிலேயே தனது திருமணத்தையும் நடத்தியவர்.

1956.06.05ல் கொழும்புப் பாராளுமன்றத்திற்கு முன்பாக சத்தியாக்கிரகம் செய்த தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களை சிங்களக் காடையர்களைத் தாக்கி கிழித்தெறிந்து அவமானப்படுத்திய செய்திகளைப் பார்த்து இவற்றைச் சேகரிக்கத் தொடங்கியவர் இவர். "தமிழர்களுக்கு தொடர்ச்சியான வரலாறு எதுவுமில்லை." என்று இவரது சரித்திர ஆசிரியர் அடிக்கடி கூறும் கருத்தும் வலிவு சேர்க்கவே, இத்தகவல் சேகரிப்பில் மும்முரமாக ஈடுபடுத் தொடங்கினார்.

இவர் தொழில் நிமித்தம் கண்டி நகருக்கு வந்து சேர்ந்ததால் கண்டியிலுள்ள பழம் பத்திரிகை, போத்தல்கள் விற்கும் நாடார் கடைகள் பலவற்றில் இருந்து பழைய பத்திரிகைகளைப் பெற்றுச் செய்திகளைச் சேகரிக்க ஆரம்பித்தார். 1900 ஆண்டிலிருந்து 1930 வரை வெளிவந்த இந்து சாதனம் என்ற ஏடுகளை(தமிழ், ஆங்கிலம்)அனைத்தும் 1930இலிருந்து 1956 வரை வெளிவந்த ஈழகேசரி ஏடுகள் அனைத்தும் சுதந்திரன் பத்திரிகையின் 1956 வரையான சகலவெளியீடுகளும் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. இச்சேகரிப்புப் பணியில் இவரது துணைவியார் பவளராணியின் பங்களிப்பு மிகவும் காத்திரமானதென பெருமையுடன் குறிப்பிடுவார் இவர்.

இலங்கைத்தமிழர் சுதந்திரப் போராட்ட வரலாறு" என்ற பெயரில் உள்ள பாரிய ஒட்டுப்புத்தகங்களோடு இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, இந்தியா போன்ற நாடுகளில் வெளிவரும் தமிழ்ப்பத்திரிகைகளிலுள்ள பல் துறைக்கட்டுரைகள், ஆய்வுக்கட்டுரைகள் என 6000 கட்டுரைகள் ஒட்டுப்புத்தகங்களாக்கப்பட்டுள்ளன. மொரீஷியஸ், றேயூனியன், மலேஷியா, சிங்கப்பூர் சென்ற போது திரட்டப்பட்ட ஆவணங்கள். பிஜித்தீவில் இருந்து தட்டெழுத்துப் பிரதிகளாக வெளியான 'மித்திரன்' இதழின் பெரும்பகுதி அந்தமான் தீவில் இருந்து வெளியான அந்த மான் முரசு" பர்மா, இந்தோனேஷியா, நாடுகளில் இருந்து வெளியான ஏடுகள் என்பனவும் இவரது ஆவணக்காப்பகத்தில் உள்ளன.

இவர் உலகத்தமிழர் ஆவணக் காப்பகத்தை நிறுவுவதற்கு முன்னால் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் என்ற அமைப்பினை 1974ஜனவரியில் நிறுவி இதன் தலைவராகப் பேராசிரியர் சாலை இளந்திரையன் அவர்களைத் தலைவராக்கிச் செயற்பட வைத்தார். உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் கொள்கைகளைப் பரப்பும் நோக்கோடு "உலகத் தமிழர் குரல்" என்ற மாத ஏட்டினையும் நடாத்தி வந்தார். இத்துடன் நில்லாது "சீசரின் தியாகம்" "அன்ன பூரணி" என இரு தரமான சிறுகதைகளையும் எழுதியதோடு கீழ்க்கண்ட நூல்களையும் தந்துள்ளார்.

1. இருபத்தைந்து இலட்சம் மக்கள் தலைவர். 1960
2. தமிழரசுத்தந்தை 1960
3. அமரர் கு. வன்னியசிங்கம் நினைவுமலர் 1960
4. அலைகடலுக்கு அப்பால் 1973
5. உலகத்தமிழர் ஐக்கியத்தை நோக்கி 1974
6. செல்வாவின் சிந்தனைகள் 1977
7. றியூனியன் தீவில் எங்கள் தமிழர் 1980
8. மொறிஷியஸ் தீவில் எங்கள் தமிழர் 1980
9. உலகத் தமிழர் ஒருமைப்பாடு 1981

--சில நற்கூறகளும், அணுகு முறைகளும்

உலகத்தமிழக் குடும்பத்தின் மீது மிகுந்த அக்கறை செலுத்தி வரும் இவர் தம்மிட முள்ள ஆவணங்களின் ஒருபகுதியை 1996ல் கனடாவிற்கு வருகை தந்திருந்த வேளையில் தம்முடன் எடுத்து வந்திருந்தார்.

1996-11-01, 2ஆம் திகதிகளில் குரும்பசிட்டி நலன் புரிசபை-கனடா இவரது ஆவணக் கண்காட்சியைச் சிறப்பாக நடாத்தியதோடு 1996-11-02ல் ஓர் பாராட்டு விழாவினையும் நிகழ்த்தி, இப் பெரியவருக்கு "ஆவணஞானி" எனப்பட்டம் வழங்கிக் கௌரவித்து நாற்பத்து மூன்று ஆண்டுகளாக ஆவணங்களைப் பாதுகாக்கும் முயற்சியில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வரும் இவரையும், இவருக்கு உறுதுணையாக இருக்கும் திருமதி. பவளராணி அவர்களையும் இதயம் நிறைய வாழ்த்துவதோடு இவர்களது செழுமிய பணியில் குரும்பசிட்டிக் கிராமம் மேலும் சிறப்புப் பெறுகிறது என்பதையும் கூறக் கடமைப் பட்டுள்ளேன்.

www.padippakam.com





# உயர் திரு. ஆ. தம்பித்துரை அவர்கள்

பெருமதிப்பிற்குரிய "கலாகேசரி" ஆ. தம்பித்துரை அவர்கள் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் குரும்பசிட்டியை வாழ்விடமாகவும் கொண்ட தலைசிறந்த சிற்ப, சித்திர, ஓவியக்கலைஞரும், ஆசிரியரும் ஆவார். இலக்கியம் என்பது கவிதை, சிறுகதை, நாடகம் என்ற வரம்பினை அகல்வித்து சித்திரக்கலையையும் உள்ளடங்கச்செய்த தகைமையாளர். கலாகேசரி அவரகள் ஒரு கட்டுரையில் "செய்ய முடிந்தவன் சாதிக்கிறான், செய்ய முடியாதவன் போதிக்கிறான்" என்ற பேரறிஞர் பேர்னாட்ஷாவின் வரிகளைக் கோடிட்டுக்காட்டியிருந்தார்கள். சாதித்தலையும் போதித்தலையும் சமகாலத்திலேயே நிகழ்த்திக்காட்டிய கலாகேசரி அவர்களது போதிக்கும் ஆற்றலை" (கற்பித்தல்) "வெற்றிமணி" ஆசிரியர் மு. க. சு. சிவகுமாரன், "கலை இலக்கியக் களம்" கோகிலா மகேந்திரன் ஆகியோர் மிகவும் வியந்து பாராட்டியுள்ளனர்.

"கலை இலக்கியக் களம்" கோகிலா மகேந்திரன் அவர்கள் கலாகேசரி அவர்களின் ஓவியங்களைப்பற்றி கூறுவதைக் கேளுங்கள். "17-01-1987ல் எமது களத்தின் சார்பில் ஒரு சித்திரக்கண்காட்சி யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடை-பெற்றது. அந்தக் கண்காட்சியில் கலாகேசரி சேர்த்து வைத்த விதம் விதமான ஓவியங்கள். ஒவ்வொன்றும் எம்முடன் நடாத்திய உரையாடல்கள்! மறந்து விடக்கூடியனவா! கலை அன்னை எங்கள் கலாகேசரிக்கு தன் பரிபூரண கிருபையை வருஷித்திருக்கிறாள். அவருடைய ஓவியங்களையும், சிற்பங்களையும் பார்க்கிற போது ஒரு பரவச உணர்வுக்கு உள்ளாகாதவன் ஒரு மனிதனல்ல-மரக்கட்டை"

"வெற்றிமணி" ஆசிரியரும் சித்திர, ஓவியக் கலைஞரும் மு. க. சு. சிவகுமாரன் அவர்கள் "ஓவியக்கலைக்கும் சிற்பக்கலைக்கும் அரும்பெரும் பணியாற்றியவர் கலாகேசரி தம்பித்துரை அவர்கள். என் தந்தையோடு நான் வாழ்ந்த காலத்தை விட இவரது ஓவியங்களுடனும் சிற்பங்களுடனும் வாழ்ந்த காலம் அதிகம்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

கலாகேசரி அவர்களது தேர்ச்சிற்பக்கலை பற்றிய ஆற்றலை இந்து நாகரிகத்துறையில் சிறப்புப்பட்டம் பெற்றவரும், சிற்பக்கலையிற் சிறப்பு ஆய்வுகளை மேற்கொள்பவருமான உயர் திரு வே. அம்பிகை பாகன் அவர்கள் மதிப்பிட்டுள்ளார். தேர்ச்சிற்பக்கலை பற்றிய அறிவு மிக அருகி வருவதாலும், இவரது தேர்ச்சிற்பக்கலை பற்றிய ஆய்வு இனி வருங்காலங்களில் இக்கலையை மேற்கொள்ளும் ஆர்வலர்களுக்கு உதவி யாய் இருக்கும் என்ற எதிர்பார்ப்பினாலும் திரு வே. அம்பிகைபாகன் அவர்களது ஆய்வினை முழுமையாகவே இங்கு தந்துள்ளோம்.

தமிழகத்தைச் சேர்ந்த திருவிடைமருதூர் சி. சுப்பிரமண-ியம், சென்னை எஸ். குமாரசுவாமி, இரா. கோவிந்தராஜு, மாயவரம் ச. ஏகாம்பரம் போன்ற ஸ்தபதிகள் யாழ்ப்பாணத்திற் பணி புரிந்த இருபதாம் நூற்றாண்டின் ஐம்பது, அறுபதுகளில் உருவாகிய யாழ்ப்பாணத்துத் தேர்க்கலைஞர்களிற் பலரும் அவர்களின் செல்வாக்கிற்கு உட்பட்டோராக விளங்கினர். ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பதாம் ஆண்டளவில் தமிழகம்சென்று சிற்பக்கலையிற் பயிற்சி பெற்று வந்து, வண்ணை வீரமாகாளி அம்மனுக்குத் தேர் அமைத்து ஓர் புதிய எழுச்சியை ஏற்படுத்தியவர் மட்டுவில் வி. ஆறுமுகம் ஆச்சாரியர். முழுவதும் தமிழக மயமாகியிருந்த அறுபதுகளின் மத்தியில் 'கலாகேசரி' என்ற ஐந்தெழுத்துச் சுட்டும் ஆற்றல்மிக்க ஆறுமுகம் தம்பித்துரை ஈழத்துத் தேர்க்கலை உலகிற் பிரவேசிக்கிறார். இவர் மேற்குறித்த ஆறுமுகத்தின் தலைமகனும் பிரதம மாணவனுமாவர்.

கலாகேசரியின் உருவாக்கம் பன்முகம் கொண்டது. தேர்க்கலையைப் பொறுத்தளவில் இவர் தன் குருவாகத் தந்தையாரையே குறிப்பிடுகிறார். இருப்பினும் அவரிடமிருந்து பெற்றது மிகவும் குறைந்தளவிலான செய்முறையறிவே. சிற்ப வடிவமைப்பிற்குத் தேவையான ஓவிய வரைதலை நெறிப்படுத்திய பரமேஸ்வராக் கல்லூரி ஓவிய ஆசிரியர் செ. சண்முகநாதனும் 'வின்சர் ஆர்ட்கிளப் நிறுவக நெறியாளர் எஸ். ஆர். கனகசபையும் பரந்ததும் உயிர்த் துடிப்புள்ளதுமான கற்பனையுலகிற் கலாகேசரியை உலாவ வைத்தோராவர்.

சிற்பக் கல்விக்கு இன்றியமையாத வட மொழியை சீதாராம சாஸ்திரியிடம் கற்ற கலாகேசரி தமிழகத்தி லிருந்து வருகை தந்து மாவிட்டபுரத்திற் கருங்கற்பணி யாற்றிய சிற்பி பெரியசாமியிடம் 'மானசார சிற்ப சாஸ்திரம்' பயின்றார். இவர் பெற்ற பெரும்பேறு என்று இதனைக் குறிப்பிடலாம். சிற்ப நூல்களிற் சிறந்த மானசாரத்தின் சில பகுதிகளை நுட்ப திட்பமாக அறிந்து கொண்ட கலாகேசரி, யாழ்ப்பாணத்துக் கலைஞர்களில் மிகவும் தகைமை உடையவராகத் தன்னை வளர்த்துக்

கொண்டவர். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் சித்திர ஆசிரியராக நியமனம் பெற்ற இவர், 1956இல் 'கலை இந்தியா' சுற்றுலாமூலம் இந்தியா முழுவதும் ஒரு மாத காலக் கல்வி, கலாசார சுற்றுப்பயணம் செய்து புராதன கலைச்சிறப்பை அறிந்து கொண்டார். 1968 ஆம் ஆண்டு வடமாநிலச் சித்திரக் கல்வி அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றார் கலாகேசரி.

ஆகம, சிற்ப நூலறிவும், பல கலையறிவும், மூலப் பொருட்களில் சிற்பம் அமைக்கும் ஆற்றலும் உடையவனே ஸ்தபதி என்று இந்து ஆகம மரபு கூறும். கடந்த மூன்று தசாப்தகாலமாக ஈழத்துத் தேர்க் கலையுலகில் பணிபுரிந்த, 'ஆகம மரபு' அங்கிகாரம் பெற்ற ஒரேயொரு ஸ்தபதியாக விளங்கியவர் கலாகேசரி ஆறுமுகம் தம்பித்துரை அவர்களே என்பது குறிப்பிடத்தக்கது.

தந்தையார் ஆறுமுகத்தின் மேற்பார்வையிற் குரும்பசிட்டி அம்மன் தேரை வடிவமைத்த கலாகேசரி தந்தையார் காலமாகியபின் அவர் இயக்கி வந்த சிற்பாலயத்தை நிறுவன மயப்படுத்தினார். தன் இளவல் ஜீவரத்தினத்தை இணை ஸ்தபதியாகக் கொண்டு கொக்குவில் நந்தாவில் மனோன்மணி அம்பாள் தேரை (1966) வடிவமைத்தார். இந்நிகழ்வின் போது தான் அவருக்கே உரிய ஆளுமையைக் குறியீடாகக் காட்டும் 'கலாகேசரி' என்னும் கௌரவப் பட்டம் உயர்திரு ம. ஸ்ரீ காந்தா அவர்களால் வழங்கப் பெற்றது. நந்தாவிலிலே தோற்றம்பெறும் கலாகேசியின் தேர்ப்பணி, யாழ் பாணியில் தன்னை இனங்காட்டும் வளர்ச்சிப் போக்கில் உயர்வதை வண்ணை காமாட்சி அம்பாள் தேரில் அவதானிக்க முடியும். எண்கோண வடிவமுடைய இத்தேர் நான்கு சில்லுகள் உடையது. உபபீட அமைப்பில் ஒரு பெருமாற்றம் தோன்றுகின்றது. சதுரவமைப்பிலிருந்து முன்னைய மரபு மாறிச்சித்தூர் மட்டமும், எண்கோண வடிவுமெடுப்பது ஓர் புதுமைமிகு அம்சமாகும்.

கலாகேசரி அவர்கள் நீண்டகால வதிவிடமாகிய குரும்பசிட்டியில் தன் பெயரால் 'கலாகேசரி கலாலயம்' என்னும் புதிய சிற்பாலயத்தைத் நிறுவுகிறார், ஈழத்துத் தேர்க்கலை வரலாற்றையே மாற்றியமைத்தும், புதியதோர் அத்தியாயத்தை வகுத்தும், தேர் நெறியை ஆளும் புதிய பிரம்மாவாக மேற்கிளம்புகிறார் கலாகேசரி.

கலாகேசரி, தன் புதிய சிற்பாலயம் சார்பில் வடிவமைத்த சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் தேர் 02-06-1974 இல் வெள்ளோட்டங் கண்டது, யாழ் பாணித் தேர்க்கலை உருவமைப்பிலுஞ்சரி, கட்டமைப்பிலுஞ்சரி தன்னிறைவை முறையாகப் பிரதி பலிப்பது சுதுமலை யிற்றான் என்று குறிப்பிடுவதில் எதுவித சந்தேகமும் இல்லை. தனி யாழ் பாணியில்
'சிற்பத்தேர்' எனச் சூட்டத்தகும் முதல் தேராகிய இது சித்தூர் மட்டம், பேரூர் மட்டம் என்னும் முதலாம்' இரண்டாம் தளங்களில் 30, 32 ஆக 62 சிற்பங்கள் கொண்டது. உபபீட கீழ்த் தளமாகிய கபோதகத்து சிறு கோட்டங்களில் துவாரபாலகிகள் இடம் பெறுகின்றனர். இங்கு சுட்டத்தகும் பிறிதோர் முக்கிய அம்சம் ஆதாரசக்தி அமைப்புமுறை ஆகும். ஆதாரத்தில் தேராதார சக்திகளாகிய ஆதிகூர்மம், பூமாதேவி, ஆதிராகம் என்பன தேரைத்தாங்கும் பாவனையில் அமைகின்றன. தலைப்பாகம் முன்புறமும் காற்பாகம் பின்புறமுமாக பொது வழக்கிலமைய, இடம் - வலம் என்னுமிரு புறங்களிலும் கூர்மத்தின் முன்னங்கால்கள் முன்பக்கமும் பின்னங்கால்கள் பின்பக்கமும் அமைவது வேறிடங்களிற் கண்டு கொள்ள முடியாத சிறப்பம்சமாகும். இது தேர் அமைப்பியல் நிறைவினைப் பிரதிபலிக்கும் ஓரம்சமாகும்.

மணிமண்டபத்தில் சிற்பச் செழுமை மிக்க அம்சங்கள் புதிதாகத் தோற்றம் பெறுகின்றன. விமானத்தைத் தாங்கும் பெரிய யாளிகளின் கீழே முன் - கீழ்ப்பார்வையுடன் இடம் பெறும் பெரிய பாயும் சிங்கங்கள், யாளித்தூணின் பாதமாக புதிய வடிவெடுக்கின்றன. பல்லவ கட்டடச் சிற்பப்பாணி இங்கு தேர் அமைப்பிலிடம் பெறுதல் ஒப்புநொக்குதற்குரியது. இவ்வம்சம் பிற்காலத்து யாழ்பாணியிற் செல்வாக்குச் செலுத்துவதைத் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம் (1978), மாத்தளை முத்துமாரி அம்பாள் ஆலயம் (1977) என்னுமிடங்களிற் கண்டு கொள்ளலாம்.

குப்பிளான் கற்பகப்பிள்ளையார் தேர் (1975) ஈழம் அதுகாறும் கண்டிராத வேசரமரபில் அமைந்தது. ஆது வட்டவடிவுடையது. கலாகேசரியின் தற்றிறனை வெளிப்படுத்தும் பெருமுயற்சி இதுவாகும். உபபீடம் பூசாந்தரமாகவும் அமைகிறது. முறையாக 'வட்டவடிவம்' எல்லாத் தளங்களிலும் பேணப்படுதல் நடைமுறையிற் சாத்தியமற்றது என்பதையுணர்ந்த கலாகேசரி, வட்டத்துடன் எண் கோணத்தையும் தக்கவாறு இணைத்தார். அதிஸ்டானம் வட்டமாகவும் பேரூர்மட்டம் எழுதகவடிவில் எண்கோணமாகவும் அமைய, நராசனத்திலிருந்து மிகுதி அடிப்படை வடிவம் முழவதும் வட்டமாகின்றமை குறிப்பிடத்தக்கது. விமானமும் எண்கோணக் கலப்புடையதே.

குப்பிளானில் வளர்ச்சியாகக் கலாகேசரியின் புலோலி புற்றளை விநாயகர் தேர் (1980) அமைகிறது. வடிவநிலையில் எண்கோண அம்சக் குறைகள் நீங்கிய 'வேசரவடிவ முழுமை' யை இங்கு இவர் தோற்றுவித்தமை சிறப்பம்சமாகும்.

தெல்லிப்பழை துர்க்காதேவி தேர் (1978), திராவிட மரபு நிலைப்பட்ட ஈழத்துத் தேர்க்கலை மரபில் மேலும் ஓர் நுட்பத்தைச் சேர்க்கின்றது. கட்டட அணி அமைப்பில் 'முகபத்திர மடக்கை மீட்பு' ஒன்று. முந்திய தேர்கள் உத்தரமட்ட நிலையில் அமைதியாக இருக்கத், திராவிட எண்கோணத் தேரில் முதன் முறையாக முகபத்திர அமைப்பை இங்கே கையாள்கிறார் கலாகேசரி. இம் முயற்சிக்குத் தமிழகக் கலைஞர் திருவிடைமருதூர் இரா. கோவிந்தராஜ"வின் நீர்வேலி வாய்க்காற்றரவைப் பிள்ளையார் தேர் (1963) வடிவமைப்பு, ஓர் முன்மாதிரியும் உந்துசக்தியுமாகும். பிரதமவடிவம் முழவதும் முகபத்திர மடக்கை மீட்க்கப்பட்ட போதிலும் தாமரை வடிவப் பண்டிகையில் இது, குதிரைகளால் உயர்த்திச்செல்லப்படும் குறியீடாக மட்டுமே அமைகிறது. நீர்வேலியில் இவ்வம்சம் தளத்தைப் பொறுத்தளவில் முழுமையாக இருப்பது ஒப்பு நோக்குதற்குரியது.

www.padippakam.com





உபபீட கபோதபத்தில் துவாரபாலகர்கள் அல்லது மூல தெய்வத்தின் முக்கிய வடிவங்கள் இடம்பெறும் முந்திய மரபுமாறி 'அட்டதிக்குப் பெண் காவற்றெய்வங்கள்' இடம் பெறுகின்றனர். இதனை மாத்தளை முத்துமாரி அம்பாள் தேரில் ஏற்கனவே கலாகேசரி அறிமுகப் படுத்தியிருந்தார். திசைக்காவலர் அம்சம் தேவாசனத்தில் அமைய வேண்டும் என்பது, தேர்க்கலை மரபு.

புதிய மரபை அறிமுகப்படுத்தியும் திராவிட எண்கோண மரபைச் செழுமைப்படுத்தியும் வளமூட்டிய கலாகேசரி, 'அந்திரம்' என்று சிற்ப இலக்கணம் கூறும் அறுகோண வடிவைக் கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய தேரில் அறிமுகப்படுத்துகின்றார். கலாகேசரியின் தற்றிறன் அதிகூடிய விவேகத்துடன் வெளிப்பட்டது இங்கேயென்றுதான் சொல்லுதல் வேண்டும். இருதள சிற்பமுடைய இத்தேர் ஆறுசில்லுகளும் திரிதள விமானமும் உடையது. முகபத்திமடகையைப் பிரதமகோணம் முழவதும் கொண்டமையும் சிறப்புடையது. 'அறுகோணத்திலும் தேரா?! அப்படியென்றாற்சுவாமியை எந்தப் பக்கத்தாலை ஏத்துவது?' என்று கேள்வி எழுப்பி, 'பின்பக்கத்தாலை தூக்கி வைக்கட்டும்' என்று தாமே பதில் சொல்லித்திருப்தியடைந்த ஸ்தபதிகளும் உளர். எண்கோணமாயின் ஆறு பவளக்கால்கள் ஒரே சுற்று வட்டமைப்பில் வருமெனச் சிலர் தமது மூளைக்குள்ளேயே புதிய தேர் இலக்கணம் வகுத்திருந்தனர். இவர்கள் எல்லோரும் வெறும் கிளிப்பிள்ளையாகச் செய்ம்முறைப் பயிற்சி மட்டும் பெற்றிருந்தனரே தவிரச், சிற்ப அரிச்சுவடியையேனும் 'நூன்மரபாக' அறிந்திருக்கவில்லை.

முகபத்திர பங்குமானத்தளவு கொண்டு பிரதம வாசல்கள் ஆறாகவும், ஒவ்வோர் கோண இடம் - வலம் என்னும் பகுதிகளை ஒரே தொடர்பில் இணைத்து உபவாசல்கள் ஆறாகவும், வகுத்த கலாகேசரி பலருக்கும் 'நடுநின்ற' பவளக்காலிடத்தே சுவாமி ஏறும் வாசலையே தோற்றுவித்தார். வெறும் செய்ம்முறைப்பயிற்சி பெற்ற ஸ்தபதிகள் சிலருக்கு இவ் வடிவமைப்பு இற்றைவரையிலும் விளங்கவேயில்லை என்பதை அவதானிக்க முடிகின்றது. அவ்வளவிற்கு அதியுயர் திறமை கொண்டு இவ்வமைப்பை உருவாக்கியவர் கலாகேசரி.

ஈழத்துத் தேர்க்கலை வரலாற்றிற் சகல அம்சங்களாலும் ஓர் உயரிய எல்லையைத் தொட்டு நின்ற மாத்தளை முத்துமாரி அம்பாள் தேர் (1977), 1983 ஐத் தொடர்ந்த நெருக்கடியின்போது தீக்கிரையாக்கப்பெற்றமை துரதிஷ்டவசமானது. நாகரம் - திராவிடம் - வேசரம் என்னும் மூன்று மரபுகளையும் பொருத்தமுற இணைத்தும் சக்தி தத்துவத்தை மணிமண்டப மேல்விதானத்தில் புகுத்தியும் ஒரு புதிய மாதிரியை இங்கே கலாகேசரி உருவாக்கியிருந்தார்.

அமைப்பு முறைகளில் மிகவும் முன்னேறிய கோணமாக 'நாகரம்' விளங்குகிறது. கோண்டாவில் அன்னங்கை சிவபூதவராயர் தேரும் (1988) சுன்னாகம் கதிரமலைச்சிவன் தேரும் நாகர வடிவிலமைவன. ஐந்து தள விமானமும் நான்கு சில்லுகளும் உடைய இவை முறையே இரண்டு, மூன்று தள சிற்பங்கள் உடையன. இருப்பினும் பின்னது மூன்றாவது தளம் பூர்த்தியாகவில்லை, 'இரட்டைப் பஞ்சாங்கம்'எனப்படும் அணியமைப்பு, சுன்னாகத்திற் திறமுறப் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. சித்தூர் மட்டச் சிற்ப வரிசை செங்குத்தான முன்னைய மரபிலிருந்து மாறிச் சிறிது சாய்ந்திருப்பது ஓர் சிறப்பம்சமாகும். வட இந்தியத் தேர்களின் உருவினை இது பிரதிபலிப்பதும் குறித்துரைக்கத்தக்கதே. விமானத்தைத் தாங்கும் யாளிகள் உயிரோட்டம் நிறைந்தன. வீறும் வனப்பும் மிக்க நான்கு குதிரைகளும் இத்தேரின் கவர்திறனை மேலும் அதிகரித்து நிற்கின்றன. ஈழத்துத் தேர்களிற் சமகால வட இந்திய நாகர மரபை அறிமுகப்படுத்தி நிற்கும் தலைசிறந்த தேர் இது எனலாம். கலாகேசரி கடும் சுகவீனமுற்ற நிலையிலும் வடிவமைத்துப் பூர்த்தி செய்த இறுதி அமைப்பு, இணுவில் செகராசசேகரப் பிள்ளையார் தேர். அது திராவிட முகபத்திர அமைப்புடையது.

கலாகேசரியின் தேர்களிற் சில பொதுப் பண்புகளை அவதானிக்கலாம். சிற்ப அணிகளாகிய அன்னம், சரபம், மகரம், யாளி, குதிரைகள் என்பன உயிரோட்டம் நிறைந்தன. விக்கிரகங்கள் அபிநயச் சிறப்புடையன. அதே வேளையில் 'செய் நேர்த்தி' சிறிது குறைந்திருக்கும். சுதமலை, கொக்குவில் தவிர்ந்த ஏனைய இடங்களிலுள்ள ஆலயங்களிற் செய்யப்பட்ட தேர்கள் நான்கு சில்லுகள் உடையன. தேர்த்திருவிழா விற்கு ஓடும் தேர்களுக்கு ஆறு சில்லுகள் என்ற ஆகம சிற்ப மரபின் அடிப்படையில் நோக்கும் போது இது குறைபாடு உடையதே.

இன்று ஈழத்திற் பணியாற்றும் தேர்க் கலைஞர்களிற் பலரும் கலாகேசரியின் மாணவர்களாவர். திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலய அதிபர் ஆறுமுகம் ஜீவரத்தினம், கலாகேசரியின் பிரதம மாணவனும் இளவலும் ஆவார். தேர்க்கலையைப் பொறுத்தளவில் துறை சார்ந்த அறிவு 'கலாகேசரியின்' மாணவர்களிடம் காணப்படவில்லை. இக் குறைபாடு, இவர்களுக்கு மாத்திரமன்றி மரபுநிலைப் பட்ட குருகுல முறையில் செய்ம்முறைப்பயிற்சி பெற்று உருவாகும் அனைத்து மாணவர்களுக்கும் பொதுவானதோர் அம்சமே என்பது குறிப்பிடத்தக்கது.

தொகுத்து நோக்கும்போது தேர் வடிவமைப்பிலும் தேர்ச்சிற்ப வடிவமைப்பிலும் மாத்திரமன்றிச் சிற்ப இலக்கணங் கற்றுத் 'துறை சார்ந்த அறிஞர்' என்று உயரிய நிலையிற் செயற்பட்டவர் கலாகேசரி என்பது தெளிவாகின்றது. ஈழத்திற்கு வருகை தந்த இந்தியக் கலைஞருடன் இணை நிற்கும் ஆற்றல் பெற்ற கலாகேசரி யாழ்ப்பாணத்துத் தேர்க்கலையுலகில் 'ஆகம மரபு அங்கீகரித்த ஒரேயொரு தேர் ஸ்தபதி' என்பது விதந்து போற்றுதற்குரியது.

வியத்தகு ஆற்றல்கள் நிறைந்த கலாகேசரி அவர்கள் "சிறுவர் சித்திரம்" "ஓவியக்கலை" "பிற்காலத்துச் சுவர் ஓவியங்கள்" என மூன்று நூல்களை எழுதியுள்ளார். வண்ணங்கள் மூலம் சிறார்களின் எண்ணங்களை அறியும் கண்ணான கலைஞர் கலாகேசரியின் விழுமிய செயல்களினால் எமது கிராமம் மென்மேலும் சிறப்புப் பெறுகின்றது.

www.padippakam.com





# உயர்திரு. அ. செல்வரத்தினம் அவர்கள்

திரு. அ. செல்வரத்தினம் அவர்கள் 23. 07. 1933ல் குரும்பசிட்டியில் பிறந்தவர். குரும்பசிட்டி திரு. பொன் பரமானந்தர் பாடசாலையில் ஆரம்ப கல்வியையும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இடைநிலைக் கல்வியையும் கற்றவர்.

1947ல் யூனியன் கல்லூரியில் நடந்த களியாட்ட (Carnival) விழாவுக்கு இவரால் வரையப்பெற்ற தாஜ்மகால் தோற்றத்தை ஒத்த படம் வாயிலில் முகப்புத் தோற்றமாக வைக்கப்பட்டது. அதே விழாவில் இவர் தமது வீட்டுக் கிணற்றடியில் தற்செயலாகக் கண்டெடுத்த பழைய காசுகள் மூன்றும் ஒரு சங்கும் காட்சிக்கு வைக்கப்பட்டன. அதன்பொருட்டு இவருக்கு வெள்ளிப் பதக்கம் பரிசளிக்கப்பட்டது.

இப் பரிசளிப்பு திரு. செல்வரத்தினம் அவரகளுக்கு தொல்பொருட்கள் மீது நாட்டத்தை ஏற்படுத்தியது. அதனால் அகழ்வாராய்ச்சியில் அவர் ஈடுபட்டார். இதுவரை பல கிராமங்களிலும் காட்டுப் பகுதிகளிலு1ம் 92 அகழ்வுகளை மேற்கொண்டு பலவகையான தொல்பொருட்களைச் சேகரித்தார். அவற்றைப் பல கண்காட்சிகளில் வைத்துப் பலரதும் பாராட்டுதல்களைப் பெற்றார்.

கண்காட்சிகளில் 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டின் ஓர் அம்சமாகச் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் நடத்தப்பெற்ற கண்காட்சி முக்கியமானதொன்றாகும். அதில் திரு. செல்வரத்தினம் சேகரித்த தொல்பொருட்களும் இடம்பெற்றன. அவற்றைப் பார்வையிட்ட சென்னைப் பல்கலைக் கழகத்துப் பேராசிரியர் கொடுமுடி சண்முகன் 'தனிப்பட்டவர்களின் சேமிப்புக்கள் என்றவகையில் இந்தியாவில்கூட இவ்வாறான சேமிப்பை மேற்கொண்டவர்களைக் காணவில்லை' என்று திரு. செல்வரத்தினத்தைப் பாராட்டினார்.

1975ஆம் ஆண்டு குரும்பசிட்டி திரு. பொன். பரமானந்த வித்தியாலய 75ஆம் ஆண்டு நிறைவு விழாவின்போதும் இவரது தொல்பொருள், புகைப்பட ஓவியக் கண்காட்சி இடம்பெற்றது. மற்றும் 1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைப் கழகத்திலும் 1992ல் நாவலர் கலாச்சார மண்டபத்திலும் 1993ல் மங்கையர்க்கரசி வித்தியாலயத்திலும் 1994ல் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் நடைபெற்ற கண்காட்சிகள் குறிப்பிடத்தக்கவை.

ஈழத் தமிழர் வரலாறு பலவழிகளிலும் திரித்து எழுதப்பட்டுள்ளது என்பது இவரது கருத்து. இவர் கண்டெடுத்த பல தொல்பொருட்கள் தமிழர்கள் வரலாற்று ரீதியாக இலங்கையில் வாழ்ந்துள்ளனர் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. உதாரணமாக, ஆதித் திராவிடர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தமையை வலுப்படுத்தும் ஆதித் திராவிடர் இலச்சினையை இவர் கண்டெடுத்திருக்கின்றார். இதற்கு ஆதாரமாக ஆனைக் கோட்டையிலும் சில புதைபொருட்கள் எடுத்துள்ளார். கந்தரோடையில் இவர் கண்டெடுத்த மட்பாண்டம் ஒன்றில் பொறிக்கப்பட்டிருந்த வடிவங்கள் பிராமி எழுத்துக்களே என பென்சில்வேனியப் பல்கலை-கழகத்து அறிஞர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இவ்விதம் திரு. செல்வரத்தினம் அவர்கள் தனியாளாகத் தானே முயன்று அரிதிற் பெற்ற தொல்பொருட் செல்வங்களிற் பெரும் பகுதி போர்ச்சூழல் காரணமாகச் சிதைவு பெற்றதோடு பல பெறுமதி வாய்ந்த பொருட்கள் காணாமலும் போய்விட்டன. எஞ்சியுள்ள வற்றை மீண்டும் ஒன்று சேர்த்துப் பாதுகாத்து வருகின்றார்.

தொல்பொருள் துறையன்றி, புகைப்படக் கலை, ஓவியக் கலை என்பவற்றிலும் தனது கைவண்ணத்தைக் காட்டி தமிழ் இனத்துக்குச் சேவை செய்த இப்பெருமகனுக்கு 1991ஆம் ஆண்டு முத்தமிழ் விழாவில் 'மாமனிதர்' என்ற விருது வழக்கப்பட்டது.

குரும்பசிட்டியும் இம் மாமனிதரின் சேவையால், புகழால் ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கின்றது.

www.padippakam.com

# குரும்பசிட்டி நலன்புரி சபை- கனடா

வழங்கும்

முத்தமிழ்க் கலை நிகழ்வு

# பொன்வயல்

MOTHER TERESSA SECONDARY SCHOOL

**SCARBOROUGH, ONTARIO**

ஆகஸ்ட் 2, 1999

படிப்பகம்

www.padippakam.com

# நிகழ்ச்சி நிரல்

- ♣ மங்கல விளக்கேற்றல்
- ♣ மௌன அஞ்சலி
- ♣ மன்ற கீதம் — *திருமதி ஜசோதா அரவிந்தன்*
- ♣ தமிழ்த்தாய் வாழ்த்து — *திருமதி ஜசோதா அரவிந்தன்*
- ♣ கனடா தேசிய கீதம் — *செல்விகள் திலீபா வைத்தியநாதன், ஆஷ்லி ஜெகதீஸ்வரன், சோபிகா ஜெயகுமார், அஜிதா தவராசா, ஆன்ஷா தவராசா.*
- ♣ பரத நாட்டியம் — **அருணோதயா நாட்டியாலயம்**
  *செல்விகள் கீதா செல்லத்துரை, சசிகலா செல்லத்துரை.*
- ♣ தீப நடனம் — *ஜனிதா பூபதிதாசன், ரஜிதா பூபதிதாசன், குயிலினி சிவராஜா, மாயா பாக்கியம், ஆஷ்ணா ராம்*
- ♣ வரவேற்புரை — *தலைவர். ஐ. ஜெகதீஸ்வரன்*
- ♣ மயில் நடனம் — *செல்விகள் தம்மியா வசந்தகுமார், பிரியங்கா குகமூர்த்தி*
- ♣ கவிக்களம் "பொன்வயல்" — *திரு. ஐ.ஜெகதீஸ்வரன், திரு. சி. கிருஷ்ணகாந்தன் திரு. க. வாரணன், திரு. செ. அசோகமூர்த்தி.*
- ♣ நடனம் — **நாட்டியக் கலாலயம்**
  செல்வி. *அன்பரசி சிவதாசன்*
  செல்வி. *தர்சினி சிவதாசன்.*
- ♣ பேச்சு(பொன் பரமானந்தர்) — *செல்வன் தினேஷ் தில்லைநடராசா*
- ♣ *நடனம்* — **அருணோதயா நாட்டியாலயம்**
  *செல்வி கீதா செல்லத்துரை, சசிகலா செல்லத்துரை, மீனாட்சி கல்யாணக் குருக்கள், காயித்திரி மேகநாதன், யாழினி லோகேந்திரலிங்கம், ஜனனி லோகேந்திரலிங்கம், செல்வன்கள் அருண் செல்லத்துரை, லக்ஷ்மணன் ஈஸ்வரகுமார், நிரோஷன் மகானந்தன், ராகுலன் சபாநாதன்.*

## ♣ *கவிமணி. மதுரகவி வி. கந்தவனம் அவர்களைக் கௌரவித்தல்*

- தலைமையுரை — *திருமதி து. சத்தியபாமா*
- இலக்கிய ஆய்வுரை — *திரு. எஸ். பத்மநாதன் முன்னாள் விரிவுரையாளர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி*
- பட்டம் அளித்தல்.
- பதிலுரை – *கவிமணி கந்தவனம்*

www.padippakam.com

♣ நாட்டியநாடகம் — ❮நாட்டியக் கலாலயம்❯
*(கவிஞர் முகில்வாணனின் தயாரிப்பு)*

**"சீதனப்பித்தர்கள்"**
*செல்விகள் அன்பரசி.சிவதாசன், தர்சினி சிவதாசன், சுரெகா குகநேசன், செல்வி சசிகா குகநேசன், செல்வி றபிகா கமலநாதன்.*

## 7:50-8:05 இடைவேளை

♣ கோலாட்டம் — ❮அருணோதயா நாட்டியாலயம்❯

*செல்விகள் கீதா செல்லத்துரை, சசிகலா செல்லத்துரை, யாழினி லோகேந்திரலிங்கம், ஜனனி லோகேந்திரலிங்கம், லக்ஷ்மணன் ஈஸ்வரகுமார், அருண் செல்லத்துரை, நிரோஷன் மகாநந்தன், சாஜினி இளங்கோவன், ஜனா இளங்கோவன், இவர்களுடன் கீர்த்தணாவும் பாலாவும்.*

♣ பரத நாட்டியம் — ❮நிருத்திய சேத்திரம்❯

நாட்டியக் கலைமணி சிவாஜினி சிறீஸ்கந்தராஜா அவர்களின் மாணவிகள்

செல்விகள் சுரேகா, சசிகா குகநேசன்

♣ நாடகம் — ♥ பெயர் மாற்றம் ♥

*கதை, வசனம், தயாரிப்பு, நெறியாள்கை*
*திரு இ. இராசரத்தினம்*
*திரு. இ. இராசரத்தினம், திருமதி தர்சினி ஸ்ரீ, டாக்டர் க. வைத்தியநாதன், திரு. த. சிவலிங்கம், திருமதி. ஸ்ரீஜினி இரவீந்திரன்*

♣ பரத நாட்டியம் — ❮நிருத்திய சேத்திரம்❯

நாட்டியக் கலைமணி சிவாஜினி சிறீஸ்கந்தராஜா அவர்களின் மாணவிகள்
*செல்விகள். சுரெகா, சசிகா குகநேசன்*

♣ நன்றியுரை — *திரு. த. சிவலிங்கம்*

♣ இசை நிகழ்ச்சி — *திருமதி அருந்தா ஜெயநாதன், திருமதி சிறிஜினி ரவீந்திரன், செல்வன் பிரஷேனா இரஞ்சன், திருமதி கமலினி குகநாதன், அரவிந்த்.*

நிகழ்ச்சித் தொகுப்பு — *திருமதி ஸ்ரீஜினி இரவீந்திரன்*

www.padippakam.com

சன்மார்க்க தேசத்து

உதயதாரகைகள்

மண்பந்து மேனியெங்கும்

வளர்மதிகளாய் .....

அழிக்கப்பட்ட எம் கிராமத்தின்

அந்திமக் காலத்து எச்சங்கள்

விதைக்கப்பட்ட மாற்றுமண்ணிலும்

வீரியத்தோடு ....

கலைவாணிகளாய்

கவி பாரதிகளாய் ......

www.padippakam.com



# எமது கிராமத்தின் வளர்ச்சியில் சீன்மார்க்க சபையின் பங்கு

-பொன். பாலகுமாரன்

சன்மார்க்க சபை 1934ஆம் ஆண்டு விஜய தசமியில் 'ஈழகேசரி' நா. பொன்னையா அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் யாழ் மாவட்டத்தில் மிக மிகப் பின்தங்கிய கிராமமாக விளங்கிய குரும்பசிட்டியை ஒரு மாதிரிக் கிராமமாக மாற்றியமைப்பதே அதன் முக்கிய நோக்கமாக அமைந்தது. மயிலிட்டி தெற்கு கோவிற்பற்று என்ற பெயரில் இருந்த பிரதேசத்தின் தனித்துவமான பண்பாட்டு இயல்புகளைக் கொண்ட குரும்பசிட்டியை வரையறை செய்வதில் முதல்கவனம் செலுத்தி குரும்பசிட்டியின் எல்லைகளை நிர்ணயம் செய்வதில் வெற்றி கண்டது. இதனைத் தொடர்ந்து இக் கிராமத்திற்குத் தேவையான அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக்கொடுப்பதில் முனைந்தது. அன்று சிறிய ஒழுங்கையாக இருந்த ஈழகேசரி பொன்னையா வீதியை அகல்விப்பதன் மூலமே அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் செயற்பட்டது.

கிராம மக்களிடையே சைவ சமயச் சூழலைப் பேணவும், சைவசமயப் பாரம்பரியம் தொடரவும் அரும்பாடுபட்டது. கூட்டுப்பிராத்தனை நடத்தல், சமய தீட்சை ஒழுங்கு செய்தல், தேவார திருப்பதிகங்கள் அச்சிட்டு இலவசமாக விநியோகித்தல், திருத்தல யாத்திரை ஓழுங்கு செய்தல், சைவ சித்தாந்த வகுப்புக்கள் நடத்தல், குருபூசை, சைவப் பிரசங்கங்கள் நடத்தல் என்பவற்றை சிறப்பாகச் செய்தது.

கிராமமக்களிடையே வாசிப்புப் பழக்கத்தினை ஏற்படுத்த வாசகசாலை, மணிவாசக நூல் நிலையம் என்பன செயற்பட்டன. சபை ஸ்தபகர் ஈழகேசரி பொன்னையா அவர்கள் 'ஈழகேசரி' பத்திரிகையை நடத்தியதன் பயனாக இலங்கையின் பலபாகங்களிலும் இருந்து வெயியாகும் சஞ்சிகைகளையும், தமிழ் நாட்டில் இருந்து வெளியாகும் பத்திரிகைகள், சஞ்சிகைகளையும் பெறக்கூடியதாக இருந்தது.

மணிவாசக நூல் நிலையம், சன்மார்க்க நாடக மன்றம், சன்மார்க்க இளைஞர் சங்கம், சன்மார்க் ஐக்கியநாணய சங்கம் போன்ற துனை நிறுவனங்களை ஏற்படுத்தி அதன் மூலம் சாதனைகளை இலகுவாக்கியது.

1990 களின் பின் குரும்பசிட்டி மக்கள் இடம் பெயர்ந்து துன்பங்களை அனுபவித்த வேளை அவர்களுக்கு நிவாரணம், புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ள சர்வதேச நிறுவனங்களின் துணை தேவைப்பட்டது. இம்முயற்சியில் உலகமெங்கும் பரந்துள்ள அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்பைப் பலப்படுத்தி வெற்றி கண்டோம்.

இக்காலத்தில் ஈழம் வாழ் தமிழ் மக்களின் பண்பாடு, கலாச்சாரம், பாரம்பரிய கலைகள் என்பவற்றைப் பேனுவதில் சபையின் பணி வன்மையான ஒரு முயற்சியாக மேற் கிளம்பியது.

அகில இலங்கை கம்பன் கழகம், யாழ். இலக்கிய வட்டம், தெல்லிப்பழைக் கலை இலக்கியக்களம் போன்ற அமைப்புக்கள் யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளையும் சேர்ந்தோரால் ஒன்றினைந்து இயக்கப்பட்ட போதும், ஒரு கிராமத்து அமைப்பு நாடெங்கும் பிரதிநிதித்துவப்பட்டது.

இன்று யாழ்பாணம், வன்னி, கொழும்பு ஆகிய பகுதிகளில் சிறப்புடன் இயங்குகின்றது.

www.padippakam.com





# எமது கிராமத்தின் வளர்ச்சியில் உதயதாரகையின் பங்கு

- க. ஸ்கந்தமூர்த்தி

1958ஆம் ஆண்டு ஆனித்திங்கள் 13ம் நாள் எமது கிராமத்து இளைஞர்களின் உணர்ச்சி கலந்த உல்லாசத்துடனும், பொது நோக்கங் கொண்ட பெரியோர்களின் ஆதரவுடனும் உதயமாகிய ஸ்தாபனம் தான் 'உதயதாரகை' மன்றம்.

விளையாட்டுத்துறையை எமது இளைஞர்களிடையே வளர்த்து, அதன் மூலம் ஒவ்வொரு கிராமங்களிடையேயும் ஒற்றுமையையும் நல்லுறவையும் ஏற்படுத்த வேண்டும் என்ற எமது நோக்கம் ஓரளவு வெற்றி பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்திலேயே முதன்முதலாக விளையாட்டுக் கழகங்களிடையே உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியை நடாத்தியது எமது மன்றமே. 58ஆம் ஆண்டு ஆரம்பித்த இச்சுற்றுப்போட்டி எமது கிராமம் இருக்கும் வரை தொடர்ந்து எத்தனையோ இன்னல்களின் மத்தியிலும் நடாத்தப்பட்டமை நீங்கள் அனைவரும் அறிந்ததே. இதனைத் தவிர துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி, மெய்வல்லுநர் போட்டிகள் போன்றவற்றையும் திறம்பட நடாத்தியுள்ளமை இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்று.

விளையாட்டுத்துறையில் முக்கிய பங்கெடுத்த எமது மன்றம் கல்வி, கலை, கலாச்சாரம் மற்றும் சமூக சேவைகளிலும் எல்லோராலும் பாராட்டக்கூடிய வகையில் தனது பணியைச் செவ்வனே ஆற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

கல்வியைப் பொறுத்தவரை ஒரு நிரந்தர நிதியம் ஏற்படுத்தப்பட்டு வருடாவருடம் மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளது.

கலைக்காக எமது மன்றம் பல வழிகளில் சேவையாற்றியுள்ளது. அவற்றில் சிலவற்றை இங்கு நினைவு கூறலாம். ஈழத்தின் தலைசிறந்த கலைஞர்களை மேடையேற்றிச் சிறப்பித்துள்ளது. சிறந்த நாட்டியச் செல்வி லீலா நாராயணனுக்கு 'நாட்டிய கலாப மயில்' என்றும், தவில் மேதை மறைந்த அமரர் தட்சணாமூர்த்திக்கு 'லயஞான குபேர பூபதி' என்றும், நாதஸ்வர வித்துவான் திரு. வே. மு. பத்மநாதனுக்கு 'எழில் இசை வேந்தர்' என்றும், பிரபல ஹுசரஅ வாத்தியக் கலைஞர் திரு. நேசன் தியாகராஜனுக்கு 'ஹுசரஅ இசைத்திலகம்' என்றும் பட்டமளித்துக் கௌரவித்தது எமது மன்றமே.

சமூக சேவைக்காக எமது கிராமத்தின் ஒவ்வொரு அபிவிருத்தி வேலைகளிலும் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு தோளோடு தோளாக நின்று தமது பங்கை உதயதாரகை மன்றம் வழங்கியுள்ளது. 1980ஆம் ஆண்டின் பின் நாட்டில் ஆங்காங்கே நடைபெறும் வன்முறைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணப்பணிகளை கிராமத்து மக்களின் உதவியோடு செய்துள்ளது.

அரச உதவிகள் ஸதம்பிதப்பட்டு கிராமத்து வீதிகள் எல்லாம் குட்டைகளாக மாற எமது மன்றத்து இளைஞர்கள் தாங்களாகவே மாயெழு வீதியையும், வளர்மதி சனசமூக நிலையத்தோடு சேர்ந்து ஈழகேசரி பொன்னையா வீதியையும் ஒரே நாளில் தாரிட்டுச் செப்பனிட்ட அந்த நிகழ்ச்சி இன்றும் என் நெஞ்சை விட்டு அகலாது இருக்கின்றது. இந்தத் திருத்த வேலைகளின் போது மின்சாரம் தாக்கி மரணித்த உறுப்பினனையும் என்னால் மறக்க முடியவில்லை.

எமது சிறிய கிராமத்தில் எத்தனையோ வளங்கள் இருந்தும், எத்தனை எத்தனையோ திறமைகள் இருந்தும் இன்றைய இனப்பிரச்சினைகளால் அவற்றை ஒன்று கூட்டி கிராமத்ததை வளர்த்துச் செல்ல முடியவில்லை.

www.padippakam.com



# எமது கிராமத்தின் வளர்ச்சியில் வளர்மதியின் பங்கு

- நிர்வாகம்
- வளர்மதி சனசமூக நிலையம்

1967.10.12 ந் திகதி குரும்பசிட்டி மண்ணிலே 'வளர்மதி' என்ற முத்திரை பொறிக்கப்பட்டது. அன்று முதல் என்றுமே வளர்மதியாய் கல்வி, கலை, கலாச்சாரம், சமயம், சமூகசேவை என்ற தன் கதிர்களால் தண்ணொளிபரப்பி நின்றது. கலை பயில ஒரு இடமில்லையே, கருத்துப் பரிமாற ஒரு களமில்லையே, சைவ நெறி வளர்க்க ஒரு அமைப்பில்லையே என்று துடித்தஇளஞ் சந்ததியினர்க்கு கலை, கல்வி, கருத்தமர்வு, பட்டிமன்றம் என்று களம் அமைத்து தொட்டிலாகி நின்றது வளர்மதி.

குரும்பசிட்டி சித்தி வினாயகர் ஆலயத்தின் மேற்குப்புறத்திலே ஒரு தனியார் காணியில் துடிப்பும் உறுதியும் மிக்க இளைஞர்கள் கையில் சாந்தகப்பையுடன் தம் வியர்வையால் கட்டியெழுப்பிய அந்தக் கட்டிடம் ஊர் மக்களின் நெஞ்சங்களைத்தொட்டு நின்றது. அந்தக் கட்டிடத்தில் தான் வளர்மதியின் இலட்சியங்கள், கொள்கைகள், திட்டங்கள் பிரசவமாயின. இந்த இலட்சிய ஒளியும் அக் கட்டிடத்திலேயே இயங்கிய சன்மார்க்க இளைஞர் மன்றம் சங்கமமாகிய போது ஒரு புத்துணர்ச்சி ஊரெங்கும் பரவி நின்றது.

ஆண்டு விழாக்கள், கலை விழாக்களின் போது கிராமத்தின் இளைஞர் உள்ளங்களில் ஊன்றெடுத்த நாடகங்கள், நாட்டியங்கள், நாட்டுக்கூத்துக்கள், கவியரங்குகள், பட்டி மன்றங்கள், அரசியற் கருத்தரங்குகள் எத்தனை. அறுவடைக்காலத்தில் உழவனின் நெஞ்சம் போல இக் கலைகளை அறுவடை செய்து பூரித்து நின்றது இளைஞர் கூட்டம். மண்ணில் விளைந்த இலட்சியப்பற்றுமிக்க நாடகங்கள் பிற கிராமத்தின் மேடைகளில் மணம் வீசியபோது தன் பிள்ளையின் உயர்வில் சிறகடித்துப்பறந்த தாயின் உள்ளத்தைப்போல இளங் கலைஞர்களின் உள்ளங்களில் இனம்புரியாத ஒரு உணர்வு மேவிப் பாய்ந்தது. நாடகப் போட்டிகளின் போது அயற் கிராமங்களில் இருந்து வந்து எம் மண்ணில் மணத்த கலைப்படைபடபுக்கள் எம்மவரின் உள்ளங்களில் கலைத்தாய்க்கோர் கௌரவத்தைக் கொடுத்து நின்றன.

சைவநெறி தளைத்தோங்க சமயப்பற்றுமிக்க செயற்திட்டங்களை வளர்மதி தன் சேவையில் முழுமூச்சாகக் கொண்டியங்கியது. மார்களி மாதத்தில் திருவெம்பா உற்சவ காலங்களில் அதிகாலை வளர்மதியின் ஒலி சங்குடனும் சேமக்கலத்துடனும் கிராம வீதிகள் தோறும் திருப்பள்ளியெழுச்சி பாடிநிற்கும். குரும்பசிட்டி சித்தி விநாயகர் ஆலய உற்சவங்களின் போது சமயத்துறை சார்ந்த பெரியோரின் சைவப்பிரசங்கங்களை ஊர் எல்லைவரை கேட்கவைத்தது வளர்மதி. ஆலய வீதிகளை சிரமதானம் செய்தல், பஜனை வகுப்புக்களையும், பஜனை நிகழ்ச்சிகளையும் நடாத்துதல், ஆலய உற்சவகாலங்களில் தாகசாந்தி நிலையங்களை நடாத்துதல், மகா சிவராத்திரி உற்சவகாலங்களில் அடியார்களை திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு அழைத்துச் செல்லுதல், பூரணை ஒன்றுகூடல் நிகழ்ச்சியினை நடாத்தி கல்வித்திறன், மற்றும் வினா விடை போட்டிகளை நடாத்துதல் போன்ற விடையங்களை வளர்மதி மிகவும் அக்கறையுடன் செயற்படுத்தி வந்தது. இதற்கு வசதியாக 10.07.90 காலப்பகுதியில் இந்து கலாச்சார அமைச்சின் கீழ் வளர்மதி சனசமூக நிலைய சைவ சமய அபிவிருத்திக்குழு என்ற ஒரு பதிவு செய்த அமைப்பை ஏற்படுத்திக்கொண்டது. இந்த அமைப்பு பஜனைகள், மாலை கட்டுதல் பயிற்சிகள், சமய நற்சிந்தனைகள் போன்ற செயற்திட்டங்களை மேலும் முன்னெடுத்துச் செல்ல வழிவகுத்து நின்றது. மக்கள் இடம் பெயர்ந்தபோதும் கிராம மக்களின் சார்பிலும் கிராம ஆலயங்களின் சார்பிலும் வழிபாட்டு நிகழ்ச்சிகளை ஆண்டுதோறும் அயற்கிராமங்களில் உள்ள ஆலயங்களில் நடாத்திச்செல்லும் செயற் திட்டங்களை இன்றும் முன்னெடுத்துச்செல்கின்றது.

கிராமத்தின் மூலை முடக்கிலும் சமூகசேவை நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதிலும் வளர்மதி பின்நிற்கவில்லை. வீதிகள் செப்பனிடல், புனரமைத்தல், ஆலய வீதிகளில் சிரமதானங்கள்,

www.padippakam.com





அமைத்தல், வீதிகளுக்கான மின்சார வசதி ஏற்படுத்தல் போன்ற ஒழுங்குகளை செய்தல் என்பன வளர்மதியின் இணையற்ற சேவைகளாக அமைந்தன.

கிராமத்தின் பொதுச்சொத்தாக அங்கத்தவர்கள் சேர்வதற்கும் விலகுவதற்கும் இருந்த சுதந்திர நிலை எமது சமுதாயம் நெருக்கடிகளை எதிர்நோக்கிய காலங்களில் எல்லாம் நிர்வாகத்திலும் தாக்கங்களும் தளர்வுகளும் ஏற்பட வழியமைத்தமையை மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. முக்கியமாக 1986 இல் ஒருதடவையும் பின்னர் 1990 இல் இருந்து இன்றுவரையும் ஏற்பட்ட இடப்பெயர்வுகள், உடமை இழப்புக்கள், உறவினர் நண்பர்கள் உடன் பிறப்புக்களின் வெளிநாட்டுப் பயணங்கள், உயிர் இழப்புக்கள் இத்தனைக்கு மத்தியிலும் வளர்மதி சில கருமுகில் கூட்டங்களின் ஊடே மங்கியும் தெளிவாகவும் தன்னொளியை பரப்பிக்கொண்டுதான் இருக்கிறது. அந்த ஒளி கிராம மக்களின் மீது பட்டுத்தெறித்ததில் ஒரு நிம்மதியையும் காண்கிறது.

எமது மண்ணில் கலை வளர்த்த, கல்வி அறிவூட்டிய, சைவநெறி வளர்த்த உள்ளங்கள் காலத்தின் கோலத்தினால் வெளிநாடுகளில் தஞ்சமடைந்து வாழந்தாலும்கூட அவர்களின் இலட்சியங்களும, பார்வைகளும், நோக்கங்களும் தொலைபேசி மூலமும் கடிதத்தொடர்பு மூலமும் எமது உள்ளங்களை தொட்டுக்கொண்டுதான் இருக்கிறது. கிராமத்திற்கு விடிவு கிட்டும்வரை வளர்மதியின் ஒளி கருமுகில்களால் மறைக்கப்பட்டு மங்கிக்கொண்டாலும் அவசியமானது என்பதை அவர்களும் உணர்கிறார்கள். நாங்களும் உணர்கிறோம்.

குறிப்பாக 1993 ம் ஆண்டில் 25 வருடநிறைவை அடையும் வளர்மதி இன்று ஒரு இளைஞன். 1990 ம் ஆண்டிலே வெளிநாட்டில் உள்ள எமது உடன் பிறப்புகளினதும், நண்பர்களினதும் நேசக்கரங்கள் அள்ளித்தந்த நிதியிலே தனக்கென ஒரு நிலத்தை வாங்கி தனக்கென ஒரு கட்டிடத்தையும் காணநின்ற வேளையிலே அந்த நிலத்திலே ஒரு முத்திரையை பதிக்குமுன் இடம் பெயர்ந்தமை மிகவும் கவலையைக் கொடுக்கிறது. என்றாலும் கூட வளர்மதி தனது இலட்சியங்கள் கொள்கைகளில் இருந்தும் சிறிதும் மனந்தளரவில்லை.

25 வருட நிறைவை அடைந்துள்ள, இவ்வேளையில் வளர்மதி எமது மக்களுக்கு விடுக்கும் அழைப்பு ஒன்றுதான். எமது கிராமத்தின் பிரிவு உடைமை இழப்புக்கள், எமது இன்பத்திலும் துன்பத்திலும் பங்குகொண்டு எம்முடன் வாழ்ந்து வெளிநாடு சென்றவர்கள் எம்மைவிட்டு பிரிந்தவர்கள் இவையாவும் வளர்மதியின் ஒளியினை மங்கச்செய்யும் கருமுகில்களாக இருந்தாலும் மங்கிய ஒளி என்றாலும் கிராம மக்களை அது பட்டு நிற்கும் ஒளி எட்டாத இடங்களில் நிற்கும் மக்களும் கிட்டவரவேண்டும் என்பது தான் வளர்மதியின் அழைப்பு.

"இருபதுக்கும் மேற்பட்ட எழுத்தாளர் எழுதிக் கொண்டிருக்கும் ஒரே ஊர் குரும்பசிட்டி மாத்திரமே."

- வேல் அமுதன்

www.padippakam.com





# உயர்திரு மு. க. சுப்பிரமணியம் அவர்கள்

குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயத்தில் ஒன்பதாண்டுகள் அதிபராகப் பணியாற்றி அவ் வித்தியாலயத்தை ஒரு உன்னத நிலைக்கு உருவாக்கிய பெருமை திரு. மு. க. சுப்பிரமணியத்தையே சாரும். அவரது அயராத உழைப்பே இன்று இவ்வித்தியாலயம் ஒரு மகாவித்தியாலயமாக மிளிர்வதற்கு ஏதுவாக இருந்தது என்று சொன்னால் மிகையாகாது. இவர் ஒரு சிறந்த சமூக சேவையாளர். "வசதிக்கட்டண ஆசிரியர்களை" நிரந்தரமாக்க வேண்டுமென அரும்பாடு பட்டவர். மயிலிட்டி தெற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி கிளைத் தலைவராகவும் செயலாற்றியவர்.

முன்னை நாள் எதிர்க்கட்சித் தலைவர் உயர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் ஆசிரியர் மு. க. சுப்பிரமணியம் பற்றி தெரிவித்த கருத்துக்கள் இவை. குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் பிரவேச பண்டித பரீட்சையிலும் சி. பா. த. ப. பரீட்சைய சித்தியடைந்து 1941ல் கோப்பாய் அரசினர் பயிற்சிகலாசாலையில் பயிற்சி பெறத் தெரிவானார். இங்கிருந்து பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறி இலங்கையில் பல பாகங்களில் பணியாற்றி பிற்காலத்தில் குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயத்தில் பணிபுரிந்தார். இவரது காலத்திலேயே இப்பாடசாலை மகாவித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டது. பொன் பரமானந்தர் வித்தியாலயத்திற்கும் பொதுமக்களிடமும், அரசாங்கத்திடமும் நிதி பெற்று மேன் மாடிக் கட்டிடம் அமைப்பதற்கு காரணகர்த்தாவாக இருந்தவரும் இவரே.

திரு. மு. க. சுப்பிரமணியம் அவர்கள் சமயவாழ்விற்கு சிவ தீட்சை பெற்றுக்கொள்வது அவசியம் எனக் கருதி பல ஆண்டுகளாக குரும்பசிட்டி சித்திவினாயகர் ஆலயத்திலே ஒவ்வொரு வருடமும் ஐப்பசி மாதத்தில் தீட்சை நடைபெற ஏற்ற ஒழுங்குகளை செய்து, தீட்சை பெற விரும்பும் எல்லோரும் இலவசமாகவே பெற்றுக்கொள்ள வழிசமைத்து இதற்கான முழுச்செலவையும் தாமே ஏற்று நடாத்தி வந்தார். மேலும் திரு முறைகளை முறையாக ஓதுதல் அவசியம் எனக் கருதி ஓதுவன் மூர்த்தி ஏ.து.ஏ. சுப்பிரமணியம் அவர்கள் மூலம் தமது இல்லத்திலேயே சிறார்களை ஒருங்கு சேர்த்து பன்னிசை வகுப்புக்களை நடாத்தி வந்தார்.

ஈழத்தில் ஏனைய சைவ சமைய சபைகளோ, மன்றங்களோ இதுவரை செய்யாத, செய்யமுடியாத சாதனையாக - நான்கு ஓதுவார் மூர்த்திகளை உருவாக்கிய பெருமை திரு மு. க. சுப்பிரமணியம் அவர்களையே சாரும்.

சிறுவர் மாத இதழான வெற்றிமணியை தாமே ஆசிரியராகவிருந்து 1950லிருந்து சிறப்பாக வெளியிட்டு வந்தார். இவரது இப்பணி இடையில் தடைப்பட்டு இருந்தபோதிலும் தற்போது இவரது புதல்வரான திரு. மு. க. சு. சிவகுமாரன் அவர்களால் ஜேர்மனியில் இருந்து தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. இளஞ்சிறார்களுக்கான புத்திமதிக் கதைகளையும் கட்டுரைகளையும் வெற்றிமணி இதழ் மூலமாகவும், பிற ஆக்கங்களாகவும் வெளியிட்டுள்ளார். இவர் தமது சக்தி அச்சகத்தின் மூலமாக, குரும்பசிட்டி அம்பாள் பாடற்தொகுப்பான "சக்திகவசம்" என்ற நூலை அச்சிட்டு இலவசமாக வழங்கியுள்ளார். இவரது இத்தகைய பணிகள் எம்மால் என்றும் நினைவு கூரப்படவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com





# உயர்திரு. மு. திருநாவுக்கரசு அவர்கள்

அறுபதுகளின் இறுதிப்பகுதி எம் கிராமத்து ஆறுவயதுச் சிறுவன் கூட "அலுவலாய்" ஓடித்திரிந்த காலம். ஆம். நாற்பது வயதைத்தாண்டியவர்கள் ஒரு புறம். முப்பது வயதைத் தொட்டவர்கள் இன்னொரு புறம். இதற்கு மேலாய் பத்து வயதே வராதவர்கள் கூட நாடகப் போட்டியும், பேச்சுப் போட்டியும் எனக் "கலக்கிய" காலங்கள் அவை. அன்றைய நாட்களில் இத்தகைய போட்டிகளுக்கு நடுவராச் செயற்பட்ட நினைவுகள் இடையிடையே இப்போதும் வந்து போகும்.

இந்த நாட்களில், ஒரு மாலை ஒலி பெருக்கி அலறுகிறது. "போற்றுவார் போற்றட்டும், "தூற்றுவார் தூற்றட்டும்", "வசந்தம் எப்போதும் வருவதில்லை", "வானவில் எப்போதும் தோன்றுவதில்லை", முற்றிலும் மாறுபட்ட மூன்று மணித்தியால அரச நாடகம் "இலட்சிய வேட்கை". இந்த நாடகத்திற்கான அறிவிப்புத்தான் அது. இந் நாடகத்தை எழுதித் தயாரித்தவர் நண்பர் மு. திருநாவுக்கரசு அவர்கள். எம் கிராமத்து மூலை, முடுக்கு எங்கும் பேசப்பட்ட நாடகம் "இராஜராஜ சோழன்" திரைப்படம் பார்த்த திருப்தியை விட பரம திருப்தியை ஏற்படுத்திய நாடகம் இது. இதனை வெறும் புகழ்ச்சிக்காக கூறவில்லை. இதுவே நிதர்சனம். இவரது முதல் நாடகமான "இதய ஒளி" சமூக நாடகம் உதயதாரகை மன்றத்தினரின் விழா ஒன்றில் மேடையேற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து பல நாடகங்களை எழுதியுள்ள இவர், பல வானொலி நாடகங்களையும் எழுதியிருக்கிறார்.

எண்ணற்ற சிறு கதைகளை எழுதியுள்ள நண்பர் மு. திருநாவுக்கரசுவின் சிறுகதைத் தொகுதியான "இவர்களும் மனிதர்கள்" நூல் சாஹித்திய மண்டலப்பரிசு பெற்றது. மிக மிக யதார்த்தமான மையக் கருக்களை, நறுக்குத் தெறித்தாற் போல வரும் வசனங்கள் மூலம் வாசகர்களின் மனங்களுக்குள் கொண்டு செல்லும் மாயா ஜாலக்காரர். இவரது பல சிறு கதைகளையும், நாடகங்களையும் கொப்பி கொப்பியாக கையெழுத்துப்பிரதி எடுத்தவன் என்ற வகையில் இவரது வசனங்களை நான் ஆழ்ந்து அனுபவித்திருக்கிறேன்.

மாடிவீட்டுக்காரர்கள் மாத்திரமே சமாதான நீதவான்களாக வரமுடியும் என்ற நிலைமை 1970 க்குப்பின் மாறிக் கொண்டிருந்த காலம். சமூகப் பிரக்ஞை உள்ள ஒரு மனிதனாலேயே தான் வாழும் சூழலின் தேவையை தெரிந்து கொள்ளவோ அறிந்து கொள்ள முடியும். இந்த வகையில் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்ட திரு. மு. திருநாவுக்கரசு தனது கிராம மக்களுக்கு மட்டுமல்ல, அனைத்து மக்களுக்குமே பாரபட்ச மற்ற முறையில் உதவி கோருவோரை நாடிச் சென்று தனது உதவியைச் செய்திருக்கிறார். இத்தகைய நல்ல குண இயல்புகள் பல கொண்ட திரு. மு. திருநாவுக்கரசு அவர்கள் "இரு மாவீரர்களை" எம் மண்ணுக்குத்தந்து விட்டு, அண்மையில் இயற்கை எய்தியிருக்கிறார்கள்.

பேராசிரியர் அம்பலவாணர் சிவராஜா அவர்கள் தனது ஆய்வொன்றில் நண்பர் மு. திருநாவுக்கரசு பற்றிக் குறிப்பிடும் போது, எமது இலக்கியப் பாரம் பரியத்தில் ஒரு மாறுதலை ஏற்படுத்த அல்லது ஒரு புதிய பாதையில் எடுத்துச் செல்ல முயன்று அதில் வெற்றி கண்டிருக்கிறார்" எனக் குறிப்பிட்டுள்ளார். அரைத்த மாவையே மீண்டும் அரைக்கும் முயற்சி யினை விடுத்து தன்வழி யில் தேடலை நடத்திய திரு. மு. திருநாவுக்கரசு அவர்களின் பணி யில் எமது கிராமம் மேலும் பெருமையடைகிறது.

படிப்பகம்

www.padippakam.com





# உயர்திரு. வே. அமுதலிங்கம் அவர்கள்

குரும்பசிட்டி பெற்றெடுத்த மற்றொரு எழுத்தாளர் திரு. வேல். அமுதன் அவர்கள். இளமைக் காலத்தில் தெல்லிப்பழை மஹாஜனக் கல்லூரியின் 'வெண்ணிலா' கையெழுத்துப் பத்திரிகையின் ஆசிரியராகவும், சன்மார்க்க சபை வெளியிட்ட 'சன்மார்க்க தீபம்' பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்தவர்.

சிறுகதை, கட்டுரை, நாடகம், விமர்சனம், வானொலி உரைகள் என இவரது எழுத்துப் பன்முகப்பட்டது. தான் எழுதுவதுமட்டுமின்றி ஏனைய எழுதாளர்களையும் ஊக்குவிக்கும் நல்ல மனம் படைத்தவர். 'தமிழ்க் கலைஞர் வட்டம்' என்ற சங்கம் ஒன்றை அமைத்து அதன்மூலம் எழுத்தாளர் சந்திப்புக்களை ஏற்படுத்தினார். கருத்தரங்கள், விமர்சனங்கள் என்பவற்றை நடத்தினார். இலங்கையில் வெளிவரும் சிறுகதைளை தரப்படுத்தி மூன்று மாதத்திற்கொருதரம் அவற்றுள் சிறந்த சிறுகதைகளுக்கு பரிசு வழங்கும் பணியையும் செய்துவந்தார்.

'தகவம்' அமைப்பைத் தொடர்ந்து இலங்கை அறிவு இயக்கம், வள்ளுவர் மாமன்றம் போன்ற அமைப்புக்களை ஆரம்பித்து இலக்கிய சேவையாற்றியுள்ளார். வள்ளுவர் கருத்துக்களை சமூக மாற்றத்திற்கான சாதனங்களாகப் பயன்படுத்தும் நோக்கம் அமுதனின் நிறுவனங்களின் அடிநாதம்.

'அறுவடை', 'வாழும் வழி' என்பன இவரது நாடகத் தொகுதிகள். 'வைகறை', 'மாரீசம்' என்பன சிறுகதைத் தொகுதிகள். 'மாரீசம்' சிறுகதைத் தொகுதிக்கு 1978ஆம் ஆண்டு சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது. 'வைகறை' நூலின் வெளியீட்டு விழாவில் ஆசியுரை வழங்கிய கி. லஷ்மணன் அவர்கள் "இவர் ஈழநாடு செய்த தவப்பயன்" என்று வாழ்த்தியிருக்கின்றார். இவரது படைப்புகள் பற்றிய மதிப்பீட்டு நூல் ஒன்றும் 'அமுதனின் எழுத்துக்கள் - ஓர் கண்ணோட்டம்' என்ற பெயரில் வெளிவந்துள்ளது.

1980களில் இவரது பணி "மதி அக்கடமி" என்ற கல்வி நிறுவனம் மூலம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்தது
வருடம் ஒரு கலைஞரைக் கௌரவித்தல் என்ற வரிசையில் முதன் முதலாக நூல் கட்டமைப்புக் கலையில் பொன்விழாக் கண்ட திரு. ஆறுமுகம் முத்தையா அவர்கள் 1985ஆம் ஆண்டில் கௌரவிக்கப்பட்டார். அதன் பின் குடும்பக் கலையில் வழிகாட்டியான மகாதேவன் பவானி அவர்கள், ஒப்பனைக் கலைக்கு சாமுவேல் பெஞ்சமின் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

நாட்டின் பல்வேறு துறைசார்ந்த அறிஞர்களுடனும் அந்நியோன்னிய தொடர்பினைக் கொண்ட இவர், அவர்களையெல்லாம் தமது சந்திப்பு அரங்கங்களுக்கு அழைத்து, கல்வி நிலைய பிள்ளைகளுக்கு அறிமுகம் செய்வதில் வல்லவர். ஏறத்தாழ இருபத்தியெட்டு சந்திப்பு அரங்கங்களை நடத்தியுள்ளார்.

தற்போது 'மகவம்' (மதி கலைஞர் வட்டம்) என்னும் அமைப்பின்மூலம் தனது பணிகளை கொழுப்பில் தொடர்ந்து வருகின்றார்.

www.padippakam.com





# குரும்பசிட்டியும் அச்சுக்கலையும்

ஈழத்தில் அச்சகக்கலையின் வளர்ச்சிப்படிகளை ஆராய்கின்றபோது குரும்பசிட்டிக்கும் அச்சகக்கலைக் கும் அன்னியப்படுத்தப்பட முடியாத தொடர்புகள் இருப்பதைக் காணலாம்.

அச்சகக்கலையை வளர்த்து, அதனை ஊடகமாகக் கொண்டு மக்களிற்குச் சரியான கருத்தைச் சொல்ல வேண்டும் என்று அவாவுற்ற ஈழகேசரிப் பொன்னையா அவர்கள், ஆசுகவி வேலுப்பிள்ளை அவர்களை ஆசிரியராகக் கொண்டு அக்காலத்தில் வெளியாகிய 'சுதேசநாட்டியம்' என்ற பத்திரிகையை அச்சேற்றிய ஜய சிறீ சாரதா பீடேந்திரசாலையின் அச்சகப்பகுதியிலும், அமெரிக்கன் இலங்கை மிசன் அச்சுயந்திரசாலையிலும் பணியாற்றிப் பெற்ற அனுபவத்தோடு திருமகள் அழுத்தகத்தை முதன் முதலாக சுன்னாகத்தில் நிறுவினார். அச்சகம் சுன்னாகத்தில் அமைக்கபபட்ட தாயினும் திரு. பொன்னையா அவர்களே குரும்பசிட்டி யில் அச்சகக்கலையை அறிமுகம் செய்த பெருமைக் குரியவராகிறார். குரும்பசிட்டியில் அச்சகக்கலை வளர்ச்சி என்ற ஒரு நீண்ட போக்கின் ஆரம்பப் புள்ளியாக திரு. பொன்னையா அவர்களே காணப் படுகின்றார்.

அச்சகக்கலையில் திரு. பொன்னையா அவர்கள் ஈடுபாடு கொள்ளக் காரணம் அவர் வாழ்ந்த காலகட்டத்தில் தமிழ்மொழிக்கல்வியில் பாதிப்புக்கள் பாரியளவினதாக இருந்தது.

ஆங்கிலக்கல்வியில் தமிழ் மக்கள் அதிக நாட்டம் கொண்டவர்களாகக் காணப்பட்டமையால் தமிழ்ப் பொற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு ஆங்கிலக் கல்வியைக் கற்பதிலும், பேச்சு மொழியாக ஆங்கிலமே இருக்க வேண்டுமென்ற நோக்கிலும் செயபட்டனர். தமிழ்ப் பெற்றோர்களின் இந்தச் செயல்கள் திரு. பொன்னையா அவர்களை வேதனைக்குள்ளாக்கியது. இதனால் தமிழ்ப் பிள்ளைகள் தாய்மொழியில் கல்விகற்க வேண்டுமென்றும் தாய்மொழிப்போதனை ஒரு பிள்ளையின் ஆரம்பகாலக் கல்வி வளர்ச்சிக்கு உகந்தவையாகவே அமையும் என்ற எண்ணம் கொண்ட திரு. பொன்னையா அவர்கள் பாடநூல்களை அச்சிட்டு வெளியிட திருமகள் அழுத்தகம் ஒரு நிலைக்களன-ாயிற்று. இதே காலப்பகுதியில் தமிழ்ப்பகுதிகளில் இருந்த ஆரம்பப் பாடசாலைகளில்கூட தென்னிந்திய பாடநூல்களே ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தன. இப்பாட நூல்களை அடிநாதமாகக் கொண்ட தமிழ்க் கல்விப்போதனை என்பது எமது சூழலுக்கு முற்றிலும் புறம்பானதாக மட்டுமின்றி எமது ஈழத்துச் சூழலில் வாழும் தழிழ்ச் சிறுவர்களுக்கு புரியாத மொழி நடை-யைக் கொண்டதாகவும் இருந்தமையால் பல முரண்பாடுகளும் அமையக் காரணமாக இருந்தன. ஆகவே முற்றிலும் பொருந்தாத ஒரு புறநடையான கல்விச்சூழலில், புரியாத மொழிநடையில் அமைந்த பாடநூல்கள் எமது தமிழ்ச்சிறார்களது தனித்துவமான கல்வி வளர்ச்சிக்கான பரிமாணங்களைச் சிதைப்பன வாகவும் காணப்பட்டன. இந்நிலையை அறவே வெறுத்த திரு. பொன்னையா அவர்கள் எமது கலாச்சாரப், பண்பாட்டுப் பாரம்பரியங்களின் தொடர்ச்சி முடிவடையாதவளர்ச்சியைக் கருத்திற் கொண்டும், ஈழத்துத் தமிழர்களது தனித்துவமான சிறப்பியல்புகளை வெளிப்படுத்தக் கூடிய வகையிலும் தழிழ்ப்பாட நூல்களை அச்சிட்டு வெளியிடலானார். கலாசார ரீதியாக அன்னிய ஆதிக்கத்தை இரு வேறுபட்ட முனையில் ஒடுக்க வேண்டிய நிலைமை திரு. பொன்னையா அவர்களை அச்சகம் ஒன்றை நிறுவும் பணியைத் துரிதப்படுத்த உதவியது.

ஆகவே ஈழத்தில் அச்சகக்கலை வளர்ச்சியும் குரும்பசிட்டியும் என்பது வெறுமனே முகத்தோற்ற அளவில் ஒரு பணியாக மட்டுமன்றி எமது பண்பாட்டுக் கருவூலங்களையும், தனித்துவமான விழுமியங்களையும் பேணிப்பாதுகாப்பதற்கான முன்னோடி நிலைக்களனா கவும் குரும்பசிட்டியே அமைந்தது. சன்மார்க்கசபையின் ஊடாக சமூகப்பணியையும், திருமகள் அழுத்தகத்தினூ டாக தமிழப் பணியையும் ஆற்றிய திரு. பொன்னயை அவர்கள் 1930இல் ஈழகேசரிப் பத்திரிகையை ஆரம்பித்து இலக்கியம், சமயம், அரசியல் என மூன்று துறைகளின் வளர்ச்சிக்கும் ஆக்கபூர்வமான பணிகளை

www.padippakam.com



ஆற்றினார். இதனால் பல எழுத்தாளர்கள் ஈழகேசரிப் பத்திரிகையை சுற்றி குவிமையப்படுத்தப்பட்டார்கள். ஈழகேசரிப் பத்திரிகையால் உள்வாங்கப்பட்டவர்கள் தகுதியான எழுத்தாளர்களாக செழுமைப்படுத்தப்பட்டு வளர்க்கப்பட்டார்கள். இதனால் ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் ஈழகேசரி ஒரு அழியாத வார்ப்பாக நின்றுநிலை பெறுகின்றது. தமிழகத்தில் 'மணிக்கொடி' காலம் போன்று ஈழத்தில் 'ஈழகேசரிகாலம்' என ஒரு இலக்கிய உலகின் பொற்காலம் இலக்கிய வரலாற்றில் பதிவு பெறலாயிற்று.

தென்னிந்தியப் பாடநூல்களின் ஆதிக்கத்தினின்றும் ஈழத்தமிழர்களின் பாடவிதானத்திற்கு விடுதலை கொடுக்க விரும்பிய திரு. பொன்னையா அவர்கள் எடுத்த முயற்சியின் விளைவாக பாலபோதினி, இலக்கியமஞ்சரி, தமிழ்மஞ்சரி, உரைநடைச்சிலம்பு போன்ற பாடப்புத்தகங்கள் வெளிவரலாயின. இவரால் மட்டும் அறுபத்துமூன்று பாடநூல்கள் பிரசுரிக்கப் பட்டன.

திரு. பொன்னையா அவர்கள் பாடநூல்களைப் பதிப்பித்தல் மூலம் இளம் சிறார்களை பிஞ்சு மனதில் சுதேசிய உணர்வை ஊட்டினார். ஈழகேசரிப் பத்திரிகையை ஆரம்பித்ததன் மூலம் தமிழ் மக்களை சுதேசிய பிரக்ஞை கொண்ட மக்களாக வாழப்பழகிக் கொள்ளும் திருப்பு முனைக்கு வித்திட்டார் திரு. பொன்னையா அவர்கள். இவற்றோடு பழைய இலக்கண, இலக்கிய நூல்களைப் பதிப்பதன் மூலம் தமிழ் இலக்கணத்தை முறையாகப் பயிலும் வாய்ப்பையும், தமிழ் இலக்கிய பரிச்சயத்தையும் தமிழ் மாணவர்கள் மத்தியில் உருவாக்கினார்.

இந்த வகையில் பார்க்கும் போது அகலவிரிக்கப்பட்ட அந்நிய ஆதிக்கக்கரங்களின் பிடியிலிருந்து கல்வி மறுமலர்ச்சிக்கும் சமூக மாற்றத்துக்கும் ஆதார சுருதியாக அமைந்த புரட்சி விதை திரு. பொன்னையா அவர்களால் தான் நாட்டப்பட்டது. இந்த விதையை அவர் தாம் வெளியிட்ட நூல்கள் பத்திரிகைகள் மூலம் தான் வளர்த்தெடுத்தார்.

ஆகவே திரு. பொன்னையா அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட அச்சகக்கலை வளர்ச்சிப்போக்கு ஒரு கால்வாயில் ஓடும் நீரைப்போல் ஒரு திசை நோக்கிய-தாகவன்று வான் மழை போல் பரந்து பட்டு செழுமைக்கு வழியமைத்தது. ஆகவே அச்சுக்கலை வளர்ச்சி என்பது ஏனைய இடங்களைப் பொறுத்த வரை ஒரு தனிமனிதநலனைக் குறிக்கோளாகக் கொண்டிருந்த காலத்தில் அச்சகக்கலை மேம்பாடு என்பது குரும்பசிட்டியைப் பொறுத்தவரை சமூகநலனைப் பேணுவதாகவும் அதன் மேம்பாட்டினைப் பல்வேறு பரி-மாணங்களிற் கூடாக இனங்கண்டு வளர்த்தெடுப்பது மான ஒரு பரந்துபட்டநெறி முறையை தன்னகத்தே உள்வாங்கியதாகவும் கொண்டிருந்தது. நகர்ப்புறத் தொழிற்றுறை சார்ந்த அச்சுக்கலையானது முற்றிலும் கிராமப்புறச் சூழலில் அமைக்கப்பட்டமையை வலிகாமம் வடக்குப் பகுதியில் தான் அதிகளவில் காணக் கூடியதாகவுள்ளது. இது அன்று குரும்பசிட்டியைச் சேர்ந்த ஈழகேசரிப் பொன்னையா அவர்களால் தொடங்கப்பட்ட அச்சுக்கலை வளர்ச்சியின் தாக்கத்தாலே ஏற்பட்டது மட்டுமல்ல, அதனின்றும் அன்னியப்படுத்தப்பட முடியாத உண்மையாகும். ஆகவே இப் பிரதேசத்தில் அச்சுக்கலை வளர்ச்சிக்கு குரும்பசிட்டி ஒரு மையப்புள்ளியாக ஈழகேசரிப் பொன்னையா அவர்களது காலமுதல் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அத்தோடு குரும்பசிட்டியைச் சேர்ந்த பலர் இத்துறையில் ஈடுபட்டு இன்று தமிழ்ப்பகுதிகளின் பல பகுதிகளிலும் இத்தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். அன்று இளைஞர்களாக இருந்த பலர் இத்துறையில் ஈடுபட திரு. பொன்னையா அவர்கள் முன்னோடியாவர்.

ஈழகேசரி பொன்னையா அவர்கள் 1951ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி மறைந்தார்கள். அவரது மறைவைத் தொடர்ந்து அவருடன் பணியாற்றிய திரு. கோ. அப்பாக்குட்டி, திரு. மு. சபாரத்தினம் ஆகியோர் ஈழகேசரியின் பணியை முன்னெடுத்துச் சென்றார்கள். திரு அப்பாக்குட்டி அவர்கள் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்த காலகட்டத்தில்தான் ஒரே நேரத்தில் 16 பக்கங்கள் அச்சடிக்கக்கூடிய தானியங்கி அச்சுயந்திரம் யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

குரும்பசிட்டியைச் சேர்ந்த திரு. மு. க. சுப்பிரமணியம் அவர்கள் அச்சகக்கலை பற்றிய அனுபவங்களைப் பெற்றுக்கொண்டவாராகச் சக்தி அச்சகத்ததை ஆரம்பித்தார். சிறுவர் இலக்கிய வளர்ச்சியில் ஆர்வங்கொண்டுழைத்த மு. க. சுப்பிரமணியம் அவர்கள் 'வெற்றிமணி' என்ற சிறுவர் மாத இதழின் வெளியீட்டாளராகவும் விளங்கினார். திரு. மு. க. சுப்பிரமணியம் ஆரம்பித்த சக்தி அச்சகத்தில் அச்சுக்கோப்பாளர் பகுதியில் கடமைபுரிந்த திரு. வே. மகேந்திரன் அவர்கள் சக்தி அச்சகத்தில் தாம்பெற்ற தொழில் அநுபவத்ததைக்கொண்டு சாவகச்சேரியில் செந்தில் அச்சகம் என்ற பெயரில் ஒரு அச்சகத்தை நிறுவினார்.

மட்டக்களப்பில் அச்சகம் ஒன்றை ஆரம்பித்துள்ள திரு. அ. சிவதாசன் கிழக்கிலங்கை எழுத்தாளர்களது தரமான படைப்புக்களை மாதம் ஒரு நூல் வடிவில் வெளிக்கொணரும் முயற்சியில் ஈடுபடிருந்தார். கிழக்கிலங்கை எழுத்தாளர்களது படைப்புக்களுக்கு ஊக்கம் கொடுக்கவேண்டும் என்ற நோக்கோடு தரமான நாவல்கள், சிறுகதைகள் பல இவரால் நூல் வடிவம் கொடுக்கப்பட்டுள்ளன. செ. குணரத்தினம் எழுதிய தெய்வ தரிசனம் என்ற நாவல் இவரது முதல் முயற்சியாக வெளிவந்துள்ளது.

அச்சகக்கலை வளர்ச்சி என்பது தனியே பிரசுரங்கள்

www.padippakam.com





அச்சேற்றல் மட்டுமன்றி ஓவியம், புகைப் படம், நூல்வடிவமைப்பு, அச்சுக்கோப்பு முதலான இத்து றைசார்ந்த தொழில் நுட்பத்தையும் உள்ளடக்கிய தாகும்.

இவர்களில் கே. கே. வி. செல்லையா அவர்கள் நூல்கள், பாடநூல்கள் முதலியவற்றிற்கு ஓவியங்கள், முகப்பு அட்டைகள் வரைந்தவர். அம்பிப்பாடல், சைவசமையபோதினி வரிசை, பாலபோதினி வரிசை, இலக்கியமஞ்சரி வரிசை, பாலபோதினி உபபாட நூல் வரிசை போன்றவற்றிற்கு இவரால் வரையப்பட்ட ஓவியங்கள் மெச்சப்பட்டு பாராட்டப்பட்டன. ஈழகேசரி வெள்ளி விழா மலரில் இடம்பெற்ற நிழற்படங்கள் இவரது கைவண்ணமாகும்.

பல நூல்களின் முகப்பு அட்டைகளை வடிவமைப்பதிலும் புளொக் செய்வதிலும் திரு. அ. குகதாசன் சிறந்து விளங்குகின்றார்.

அச்சகக்கலை என்பதின் இன்னொரு அங்கம் நூல்களை பைன்டிங் செய்வதாகும். மலேசியாவில் பைன்டிங் வேலை பழகி வந்த கரணவாய் வேலுப்பிள்ளை என்பவரிடம் பயிற்சி பெற்று படிப்டியாக முன்னேறி புத்தகம் கட்டும் துறையில் திரு. ஆ. முத்தையா அவர்கள் சிறந்து விளங்குகின்றார்.

குரும்பசிட்டியைச் சேர்ந்த இன்னும் பலரும் அச்சகக்கலையில் ஈடுபாடு கொண்டு உழைத்தனர். திருவாளர்கள் வை . ஐயம்பிள்ளை, ஏ. ரி. இராசரத்தினம், பொ. இராசரத்தினம், அ. கண்ணப்பசாமி, வை. பேரம்பலம், து. பொன்னம்பலம், செ. சச்சிதானந்தசிவம், க. வாமதேவன், அ. சிவபாலன் போன்றோர் இக்கலை வளரச் சிறப்புறப்பணியாற்றியுள்ளனர். இன்றும் இலங்கையில் பல பாகங்களிலும் உள்ள பல அச்சகங்களில் குரும்பசிட்டிக் கிராமத்தவர் பலர் அச்சகக்கலையில் ஈடுபட்டு வருகின்றனர். பல தலைமுறைகளாக அச்சகக்கலை வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்துவரும் பலரும் குரும்பசிட்டிக் கிராமத்தவர்களாக இருக்கின்றனர்.

குரும்பசிட்டியைச் சேர்ந்த பலரும் பல இடங்களிலும் அச்சகங்களை நிறுவி அச்சகக்கலை வளர்ச்சிக்கு ஊக்கம் அளித்து வருகினறனர். சுன்னாகம் திருமகள் அழுத்தகம் 1929ஆம் ஆண்டு தொடக்கம் 1977ஆம் ஆண்டு வரை குரும்பசிட்டியைச் சார்ந்தவர்களால் நிர்வகிக்கப்பட்டது. சுன்னாகத்தில் சக்தி அச்சகமும், சாவகச்சேரியில் செந்தில் அச்சகமும், குரும்பசிட்டியில் அம்பிகா அச்சகமும் குரும்பசிட்டியைச் சார்ந்தவர்களால் நிறுவப்பட்டவையாகும்.

முடிவாக அச்சகக் கலைக்கும் குரும்பசிட்டிக்கும் இடையிலான தொடர்புகள் அச்சகக்கலையின் பல்வேறு பரிமாணங்களையும் வெளிக்கொணரும் தனித்துவம் கொண்டவையாக இமைந்துள்ளமையைக்காணலாம்.

அச்சுக்கலையில் ஈடுபட்ட பலர் அத்துறையில் பல்வேறு பிரிவுகளிலும் தமது அனுபவத்திறமைகளை ஆழமாகப் பதித்தே வந்துள்ளார்கள். அழுத்தகம் ஒன்றை நிர்வகிப்பதில் ஈழகேசரி பொன்னையா அவர்கள் ஆற்றிய பணிகளை அவரிடம் இக்கலை பயின்று அவருக்குப்பின் பணியாற்றிய குரும்பசிட்டியைச் சேர்ந்த பெரியார்களும் நிலைநாட்டியே வந்துள்ளார்கள். இதே போல் அச்சகக்கலையின் ஏனைய பகுதிகளான தொழில் நுட்பம், ஓவியம், புகைப்படம், அச்சுக்கோப்பு, ஒப்புநோக்குதல் முதலான பல்வேறு பகுதிகளிலும் பணியாற்றிவரும் குரும்பசிட்டி வாழ் மக்கள் தமது ஆற்றல்களை வெளிக்கொணர்வதிலும் தமது திறமை- களைப் பயன்படுத்துவதிலும் ஓரெ நேர்கோட்டிலேயே காணப்படுகின்றனர்.

சுருக்கமாகச் சொன்னால் அச்சகக்கலையின் பல்வேறு ருபங்களை மேன்மைப்படுத்தி வளர்த்துவரும் குரும்பசிட்டிக்கும், அச்சகக்கலைகும் நீரறுக்கமான தொடர்பு இருப்பதை வெளிப்படையாகவே காணலாம். குரும்பசிட்டியானது அச்சகக்கலையின் வளர்ச்சிக்கு ஒரு மையப்புள்ளியாகவே கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக இருந்துவருகின்றமை பாரரட்டற்குரியது மட்டுமல்ல பெருமைப்பட வேண்டியதுமாகும்.

படிப்பகம்

www.padippakam.com





# எம் மண்ணைத் எப்போது தரிசிப்போம்?

- நிலக்ஷன் சுவர்ணராஜா

"ஸ்கூலா"லை வரயிக்கை "போஸ்ட் ஒஃபிசி"லை பேபி "அன்ரி"யிட்ட ஒரு ரூபா முத்திரை இரண்டு வாங்கிக் கொண்டு வா தம்பி! அம்மா சொல்லுவா. நானும் வெளிக்கிட்டுக்கொண்டு பள்ளிக்கூடத்திற்கு நடக்கத்தொடங்குவேன். போற வழியில் செல்வன், தர்ஷன், ரூபன் என்று வீட்டு வாசலில் காவல் நிற்கும் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து நடப்போம், எங்கள் "ஸ்கூல்" பத்தாம் வகுப்பு வரை இருக்கிற ஸ்கூல் தான் என்றாலும் எத்தனையோ அறிஞர்களும் பெரியவர்களும் "ஆனா" எழுதிப்பழகியது இங்கு தான். இன்றைக்கு அது இருக்குதோ? இல்லையோ எங்கடை ஊருக்குள்ளேயே இப்போ கால் வைக்க முடியாது.

ஆம்! இன்று ஒரு மனிதர்கூட (இரா்ணுவத்தினர் நீங்கலாக) இல்லாத கிராமமாக வெறிச்சோடிக் கிடக்கும் எனது சொந்த ஊரை நினைக்கிறேன். கண்கள் பனிக்கின்றன. வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு மாதிரிக்கிராமமாக அறிமுகப்படுத்தப்பட்டதும் இந்திய - இலங்கை இராணுவத்தினரால் "குட்டிச் சிங்கப்பூர்" என வர்ணிக்கப்பட்டதுமான குரும்பசிட்டிக்கிராமத்தை தான் சொல்கிறேன்.

பெரியவாத்தியார் பொன் பரமானந்தர், பத்திரிகைத் துறையின் முன்னோடி ஈழகேசரி நா.பொன்னையா, இரசிகமணி கனக.செந்திநாதன், பண்டிதர் வ. நடராஜன், கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை, கவி-மணி வி. கந்தவனம், கலாகேசரி ஆ. தம்பித்துரை, ஆவனஞானி இரா. கனகரத்தினம், கலைஞானி அ. செல்வரத்தினம், கிராமசபைத்தலைவர்கள் பூ. சு. நடராசா, வி கிருஷ்னசாமி, சமூகசேவையாளர் சின்னத்துரை நடராசா போன்ற பெரியவர்கள் வளம்படுத்திய பொன்வயல் குரும்பசிட்டி.

இரசிகமணி ஐயா ஒருமுறை எழுதியிருந்ததை வாசித்தேன். அவர் சொல்வார்: "பூகோள ரீதியில் குரும்பசிட்டி ஒரு சபிக்கப்பட்ட கிராமம். வலிகாமம் வடக்குப் பகுதியில் சைவமும் தமிழும் ஒருங்கே தழைத்து வளர்ந்த குரும்பசிட்டி கொடையிலும் பின்நின்றதில்லை. எனினும் எமது ஊரின் வடக்கெல்லையாக இருக்கும் பலாலி விமானத் தளத்தாலும், இராணுவ முகாமாலும் அது நிரந்தரத் தொல்லைகளுக்கு ஆளாகியது".

1984 ம் ஆண்டு முதல் தேசிய விடுதலைப் போராட்டம் வீறடையத் தொடங்கியது. பலாலி இராணுவத்தினர் அடிக்கடி தேடுதல் என்றும் ரோந்து என்றும் வந்து போனார்கள். இதனால் போராளிகள் கவனமும் எமது கிராமத்தின் மீது குவிந்தது.

எனக்கு நல்ல ஞாபகம் இருக்கிறது. அது 1985 எனக்கு 9 வயது. மத்தியாணம் சாப்பிட்டு முடிய அம்மா 2 ரூபா தந்து ஸ்ரார் ரொஃபி வாங்கி வரும்படி பாலன் கடைக்கு அனுப்பியிருந்தா. நான் போய் ரொஃபி வாங்கிக் கொண்டு காசைக்கொடுத்தேன்.

'டோம்' என்று ஒரு பெரிய சத்தம், காது செவிடுபடும் வண்ணம் ஒலித்தது. பனையேறும் அருள், பெடியள் பிளேனுக்கு அடிக்கிறாங்கள் எண்டு கத்திக்கொண்டு ஓடியதைக்கண்டேன். சிறுவனாக இருந்ததால் இயல்பாகவே ஏற்படும் பயம் ஒரு புறம், என்ன நடந்தது என அறியும் ஆவலும் மறுபுறம் இழுக்க இறுதியில் வென்றது எனது பயம் தான். நான் பற்றைகளுக்கால் புகுந்து மிதினேஸ் அக்கா வீட்டடியால் ஓடி இராசரத்தினத்தின் வளவுக்குள்ளால் வீடு போய்ச்சேர்ந்தேன்.

அன்று முழவதும் இராணுவத்தினர் ஒரே ஆர்ப்பாட்டம். இராணுவத்தினர் வீதியில் கண்டவர்களையெல்லாம் பிடித்து விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அன்று தான் முதல் முதலாக இராணுவத்திற்கெதிரான தாக்குதல் எமது ஊரிலிருந்து மேற்கொள்ளப்பட்டது. சித்தப்பா அவருடைய கியர் பூட்டிய சைக்கிளில் பறந்து வந்தார். "தம்பி பிளேன் தப்பி விட்டுது. கொஞ்சம் பிந்தி விட்டாங்களாம்" அம்மா முணுமுணுத்தது கேட்டது. நல்லகாலம் இல்லாட்டி இண்டைக்கு நாங்களெல்லாம் தொலைந்திருப்போம்.

அன்று தொடக்கம் இராணுவத்தினர் அடிக்கடி

www.padippakam.com





குரும்பசிட்டிக்கு ரோந்து வரத் தொடங்கினர். எனினும் 85ன் இறுதிப் பகுதியுடன் அவர்கள் முகாமிற்குள் முடக்கப்பட்டபின் பெடியளின் சென்றியும் எமது ஊரில் பலப்படுத்தப்பட்டது. முடக்கப்பட்ட இராணுவம் வழமை போல் போராளிகளை விரட்டுவதாகக் கூறிக்கொண்டு ஹெலியிலிருந்து சரமாரியாக வேட்டுக்களைத் தீர்க்கத் தொடங்கியது.

ஆனால் விரட்டப்பட்டது போராளிகளல்ல, பெருமளவு பொதுமக்களே. போராளிகள் எமது ஊரில் குவிந்தவண்ணமிருந்தனர். 86 நடுப்பகுதியில், கடைக்காரக் கந்தையரும் மகளும் ஹெலிச் சூட்டுக்கு பலியாகியதோடு, ஊரில் கிலி குடிகொண்டது. பெருமளவு மக்கள் இரவைத் தூர இருந்த உறவினர்கள் வீட்டிலும், பகலில் தமது வீடுகளுக்கு வந்து சமைத்துச் சாப்பிடுவதுமாக நிம்மதியற்ற வாழ்வைத் தொடங்கினார்கள்,

86 இறுதிப் பகுதியில் நாமும் எண்பதுவீதமான மக்களுடன் எமது கிராமத்தை விட்டு முற்றாக வெளியேறி வெவ்வேறு இடங்களில் வசிக்கத் தொடங்கினோம். 87 பங்குனி 26 ம் திகதி எமது கிராமம் பூரணமாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. அன்றிலிருந்து எஞ்சிய அனைத்து மக்களும் வெவ்வேறிடங்களில் தஞ்சம் புகுந்து அல்லல் மிகு வாழ்வு வாழ்ந்தனர். ஒவ்வொரு காசாக உழைத்து மிச்சம் பிடித்துக் கட்டிய வீடு, வாசல், பொருட்களை விட்டு வெளியேறும் போது அந்த நெஞ்சங்கள் பட்ட பாட்டைச் சொல்லிலே வடித்தல் கடினம்.

87 ம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டதுடன் குரும்பசிட்டிக்கு எம்மவர் செல்லும் சாத்தியம் உருவானது. அங்கே எமது சொத்துக்களைப் பார்வையிடச் சென்ற எமக்கு பேரிடி! ஆம்! அங்கே ஒரு சில வீடுகள் தவிர ஏனையவை யாவும் தரைமட்டமாக்கப்பட்டிருந்தன. தோட்டங்கள் காய்ந்து தரிசாகக் காணப்பட்டன. அனைத்திற்கும் மேலாக எம்மூரவர் இதயத்தைப்பிளந்த காட்சி ஒன்று இருந்தது. அது தான் கிராமத்திற்கே இதயமாய் விளங்கிய அன்னை முத்துமாரியம்பாள் குடிகொண்ட திருக்கோவில் இருந்த இடம் தெரியாமல் கற் குவியலாகக் கிடந்ததும், நாற்புறமும் சிதறிக் கிடந்த அம்பாளின் அழகிய சித்திரத் தேரின் சிதறல்களும்தான்.

இவ்வளவு அழிவுகளையும் தாங்கிக்கொண்ட குரும்பசிட்டி மக்கள், தாம் பெற்ற சிறுதொகை நிவாரணப்பணத்துடனும், உழைத்துச் சேர்த்த சிறு பணத்துடனும் தமது வீடுகளைச் சிறுகச் சிறுக கட்டத் தொடங்கினர். இவ்வாறு எமது கிராமம் மீண்டும் ஒரு நிலைக்கு வரத் தொடங்கிய நிலையில் 1990 ஜுன் மாதம் எவ்வித முன் அறிவித்தலுமின்றித் திடீரெனப் போர் மீளத் தொடங்கியது. இதனால் எந்தப் பொருட்களையும் எடுக்காது வெறும் கையுடன் வெளியேறிய எம் மக்கள் மீண்டும் அகதிகளாகவும், உறவினர் வீடுகளிற் தஞ்சமடைந்தும் உள்ளார்கள்.

87 இல் எம்மவர் அகதிகளாயிருந்த போது, வடமராட்சி ஒப்பரேசன் லிபரேசனிற் பாதிக்கப்பட்ட மக்களுக்காகத் தமக்குக் கிடைத்த அகதி நிவாரணமான 30,000 ரூபா பெறுமதியான உணவுப்பொருட்கள் முழுவதையும் அனுப்பி வைத்தனர். முல்லைத்தீவு, நெடுங்கேணிப்பகுதியில் ஆடையின்றி வாடையில் மெலிந்த மக்கள் நிலையறிந்து ஈராயிரம் உடைகள் உடனடியாக அனுப்பி வைத்த மனிதாபிதானம் மிக்க மக்கள் குரும்பசிட்டி மக்கள்.

சன்மார்க்க சபை, உதயதாரகை, வளர்மதி, கலைவாணி, பாரதி போன்ற சனசமூக நிலையங்களூடாக அளப்பரிய சமூக சேவைகள் செய்த எம்மவரைக் கவனிக்க இன்று யாருளர்? எமது மக்களின் துயர் துடைக்கக் கூடியவர் யார்?

எப்போது அமைதி வரும்? மீண்டும் எப்போது நாம் எம் மண்ணைத் தரிசிப்போம்? எப்போது எங்கள் சொந்தக் கிணற்றிலிருந்து ஒரு மிடறு நீர் எடுத்துக் குடிப்போம்? மணிகடைச் சந்திப் படியிலிருந்து எல்லோருமாக எப்போது இனிக்கூடிக் கதைப்போம்? தகர்ந்த அம்பாளின் ஆலயத்தை மீளப் புனரமைப்போமா? காய்ந்து கிடக்கும் நிலங்களைப் பண்படுத்தி மீண்டும் எப்போது தோட்டங்கள் செய்வோம்? அதுவரை போரியன் வைரவரும், அரசடிக் காளியம்மனும் எமது ஊரையும் எஞ்சி நிற்கும் சில சொத்துக்களையும் பாதுகாத்து நிற்பார்களா???

www.padippakam.com





# எந்த நாள் நாங்கள் எம் வீடு திரும்புவோம்?

- இ. இராசரத்தினம்

ஊருக்கு மத்தியில் உயர்ந்த அரசமரம்
யாருக்கும் தெரியா ததன்வயது அதனடியில்
சீருடை தனையுடுத்து சிரித்த முகத்துடனே
ஊருக்குக் காவலாய் வீற்றிருப்பாள் காளியம்மா.

வருடப் பிறப்பன்று வடக்கயிறு கொண்டு
அரசமரக் கொம்புதனில் அன்னஊஞ்சல் கட்டி
சிறுவரொடு பெரியவரும் சீராக நாமாடி
பெருமையொடு வாழ்ந்திருந்த நன்நாளை மறப்போமா

மாரியம்மன் கோவில் மணியடிக்கத் துயிலெழுந்து
மார்கழிக் குளிரிலும் மகிழ்வோடு நீராடித்
தேரோடும் வீதியெலாம் வெம்பாவை நாம்பாடி
சீரோடு நாம்வாழ்ந்த நன்நாளை மறப்போமா

மாரியம்மன் கோவில் மண்மேடாய் மாறிவிட
ஊரிலுள்ள உற்றார் உறவினரும் மற்றோரும்
யாருமற்ற அனாதைகளாய் ஊரை விட்டோடி
சேருமிட மில்லாமல் தெருத்தெருவாய் அலைந்தனரே

உற்றார் உறவினர்கள் ஊர்மக்கள் ஒவ்வோர்
திக்காகப் போய்விட்டார் சேதி தெரியவில்லை
இப்போது நாங்கள் இங்கே வதிகின்றோம்
எப்போது நாங்கள் எம்மவரைச் சந்திப்போம்

சித்தி விநாயகனின் சிறப்பான ஆலயத்தில்
நித்தியம் நடக்கும் நிறைவான பூசைகளை
பக்தி பரவசமாய்ப் பார்த்து மகிழ்ந்திருந்த
அத்தனை மக்களும் அங்கில்லை இப்போது

எல்லா மிழந்து ஏதிலியாய் நாமோடப்
பொல்லா நரியும் நாய்கழுகு பேய்களும்
செல்லா லடித்துக் குண்டுகளும் போட்டுக்
கல்லாலை கட்டிய வீடெல்லாம் உடைத்தனரே

பாடுபட்டு உழைத்துப் பக்குவமாய் சேமித்து
வீடுகட்டி வாழ்ந்த வாழ்வோடு நாம்வளர்த்த
ஆடுமாடு கோழிகள் அத்தனையும் விட்டுவிட்டு
ஓடிவந்தோம் ஓடி உருக்குலைந்து நிற்கின்றோம்

வாழையும் வெண்டியும் வளமான கத்தரியும்
தோடை எலுமிச்சை சுவையான மாங்கனியும்
பாவல் புடலங்காய் பனங்கள்ளும் தனைவிட்டு
ஓடிவந்தோம் ஓடி உருக்குலைந்து நிற்கின்றோம்

செம்மண் பூமிதனில் செழிப்பாக நாம் வளர்த்த
தென்னையும் பலாவும் தெவிட்டாத மாதுளையும்
வெங்காயம் மிளகாய் இவைபோன்ற அத்தனையும்
விட்டு விட்டு ஓடிவந்தோம் ஓடி உருக்குலைந்தோம்

வற்றாத கிணற்றுத் துலாமிதித்து நீரிறைத்த
முற்றத்து முல்லையும் மல்லிகையும் றோசாவும்
செத்து மடியவிட்டுத் திசைதெரியா தோடிவந்தோம்
எப்ப இனிநாங்கள் எம்வீடு திரும்பிடுவோம?

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவிக்
குந்தியிருந்த குடி மனைகள் அத்தனையும்
சிந்தையெனும் வெண்திரையில் திரைப்படமாய்
ஓடிறதே
எந்தநாள் நாங்கள் எம்வீடு திருப்பிடுவோம்?

www.padippakam.com





# மீண்டும் நினைக்கையிலே....

- த. ஐங்கரன்

நாடு நடுத்தெருவில் நிற்கின்றது
நாம் எதை நாடுவது
எங்கே நாடுவது
நாட்டுக்குள் சுடுகாட்டை
சுட்டிக்காட்டும் காலம் போய்
சுடுகாட்டுக்குள் நாட்டைத்
தேடும் காலம் வந்திருக்கின்றது

ஜனநாயகங்கள் நடுத்தெருவில்
கோவணத் துண்டைப்போல்
கட்சிக் கொடிகள்
கொடிகளில் தொங்குகின்றது

எம் நாட்டில்
எமக்கு உத்தரவாதமில்லை
வீதியில் செல்கின்றோம்
வீடு திரும்புவோம் என்பது கேள்விக்குறி

வீசுகின்ற தென்றல்கள்
வீதியிலே 'பாஸ்' காட்டத்தேவையில்லை
பறக்கின்ற பறவைகள் யாருக்கும்
பயப்படத் தேவையில்லை
நாம் மட்டும். . . .
ஏன் இப்படியொரு வாழ்க்கை

குரும்பசிட்டி மண்ணில்
கால் பதித்த நேரங்கள்
தேடிக் கிடைக்குமா?
குட்டிச் சிங்கப்பூர் என்று
மார்பு தட்டி நின்றோம் - இன்று
காட்டுக் குரும்பசிட்டி

பாட்டும் கூத்தும் பல்கலையும்
கூட்டாய் வளர்த்த குரும்பசிட்டி

நாலாம் வகுப்பு படிக்கையிலே
நைசாப் போய் விசுவர் வீட்டு
கொய்யாவில் ஏறி நின்று
கொய்யாப்பழம் பிடுங்கையிலே
ஐயோ! கள்ளன் என்றவர் கத்த
காற்சட்டை கழன்று விழ
ஓடிய நாளை நினைக்கையிலே
இப்போ போல் இருக்குதையா

ஒடியற்கூழ் செய்து வந்து
நிலாவெளியில் நாம் அமர்ந்து
ஆச்சியின் கதைகேட்டு
அப்படியே கண்ணயர்ந்து
கூட்டாய் வாழ்ந்த அந்த
தொலைந்த வாழ்கை கிடைத்திடுமா?

பேருக்கு பெருமையாக ஊரிலே
இரு ஆலயங்கள்
அதிகாலை நாம் எழுந்து
எதிர் விட்டுப் பூக்களெல்லாம் பிடுங்கி
விடிவேளை அழகை இரசித்தவண்ணம்
அம்பிகையின் அருள் பெற்று வருகையிலே
அப்பப்பா
எத்தனை ஒழுக்கமுள்ள மனிதனாக
வாழ்ந்து வந்தோம்

எம்மூர் பெண்கள் என்றால்
எவருக்கும் ஆசை உண்டு
அழகு அன்படக்கம்
அத்தனையும் கொண்டவர்கள்

திருவெம்பா வேளையிலே
துயில் எழுந்து பெண்களெல்லாம்
கோயிலுக்குச் செல்கையிலே
மாரியம்மன் நேரினிலே
வருவது போல் உணர்ந்தேன்

பின்னேர வேளையிலே
பிள்ளையார் பேணி முதல்
என்னென்ன விளையாட்டு

www.padippakam.com





ஆண் என்றும் பெண் என்றும்
எங்களுக்குள் பேதமில்லை
ஏனென்றால் எல்லோரும்
சகோதரங்கள்

பக்கத்து ஊரே பார்த்து வியக்கும்படி
எத்தனை கலைநிகழ்ச்சி
சன்மார்க்க சபை போன்ற
நன்மார்க்க நிலையங்கள்
ஈழகேசரி, கலாகேசரி
கலைப்பேரரசு வாழ்ந்த மண்

பச்சைப் பயிரில் வேலிபோட்டு
பசியமரங்கள் பந்தல் போட்டு
மெச்சும்படி வாழ்ந்து வந்தோம்

அரசடியின் கீழ் அமர்ந்து
வயது வந்த பெடிகளெல்லாம்
வைக்கிள்ற சமாக்களெல்லாம்
எத்தனை இன்பம்

கொடுக்கின்ற பண்பு
எம்மூருக்கோர் கொடை
என்று யாருக்கும் தெரியும்
பாரிகளும் கம்பர்களும் வாழ்ந்த
தேசம் என்றால்
சத்தியமாய் ஏற்றுக்கொள்ளலாம்
யார் செய்த பாவமோ இன்று
பேர் கூட இல்லை

குருவிக் கூடும் எனது வீடும்
குரும்பசிட்டியில் தான் - ஆனால்
குருவி மட்டும் போகலாம்
நான் போக முடியாது
இது என்ன நியாயம்
ஆண்டவா எனக்கு வரம்
அளிக்கும் எண்ணம் இருந்தால்
மாண்ட என்னூர்
மீண்டும் மீள வழி செய்.

# பொன்விளையும் பூமி


பொன் விளையும் பூமி எங்கள் குரும்பை நகர்
பொன் னையா வள்ளலால் உயர்ந்த நகர்
பண்பினில் உயர்ந்தோர் பாதம் நனைத்த நகர்
பாவலர் கூடி கானம் பொழிந்த நகர்
நல்லவரும் வல்லவரும் நிறைந்த நகர்
நானிலம் போற்றிடும் வீர நகர்
கானமழை கேட்டிடும் நல்ல நகர்
கற்றவரும் மற்றவரும் மலிந்த நகர்
சன்மார்க்க நெறி நின்ற அன்பு நகர்
சங்கங்கள் பல கொண்ட சிறிய நகர்
சித்திரத் தேர் கொண்ட சிறிய நகர்
சிந்தனையைத் தட்டி விடும் குரும்பை நகர்

- செ. அசோகமூர்த்தி

www.padippakam.com








படிப்பகம்

www.padippakam.com





படிப்பகம்

www.padippakam.com




டாக்டர் (திருமதி)

# சுகந்தி சுதாகர்

குடும்ப பல்வைத்தியர்



# DR. SUGANTHY SUTHAGAR

FAMILY DENTIST

**3410 Sheppard Ave. East**
**Suite 311,**
**Scarborough, On**
**M1T 3K4**
**Tel: (416) 299 7466**

**APPOINMENTS ALSO AT**
**1078 Wilson Ave.**
**Downsview Plaza**
**Tel: (416) 633 6443**

★ NEW OFFICE WITH STATE-OF-THE-ART EQUIPMENT
முற்றிலும் நவீன மயமாக்கப்பட்ட புதிய வைத்தியவசதிகள்

★ LATEST STERILIZATION TECHNIQUES USED
நவீன தொழில் நுட்பக்கருவிகளின் பாவனையுடன் சேவைகள்

★ COSMETIC & GENERAL DENTISTRY, INCLUDING:
பற்களை சீராக்குதல், அழகுபடுத்தல் அத்துடன்
எமது பல் வைத்தியசேவைகளாவன:

★ PREVENTATIVE, BLEACHING, MERCURY FREE (WHITE) FILLINGS, ROOT CANALS, CROWNS, BRIDGES & DENTURES
முரசு தொடர்பான நோய்களுக்கான சிகிச்சை,
பற்களை வெண்மையுடன் பிரகாசித்தல், மேற்குறி முலாம்
தவிர்க்கப்பட்ட வெள்ளைநிற அடைப்பு, பற்களின் வேர்
அடைத்தல், பல் கட்டுதல்

★ SEDATION AVAILABLE FOR NERVOUS PATIENTS
பதட்டசுபாவமுள்ள நோயாளிகளுக்கு மயக்கியநிலையில்
சிகிச்சை அளிக்கப்படும்

★ ORTHODONTICTS (BRACES) FOR ADULTS & CHILDREN
வயது வந்தவர்க்கும் சிறுவர்களுக்கும் பல் கிளிப் போடுதல்

★ FREE INITIAL CONSULATION
இலவச ஆலோசனை வழங்குதல்

★ FREE DENTAL KITS FOR ALL NEA PATIENTS
புதிய நோயாளிகளுக்கு பல் ஆரோக்கியம் சம்பந்தமான
சிறுபொருட்கள் இலவசமாக வழங்கப்படும்

www.padippakam.com




# வாழ்த்துகள்!

# BEAUTY INTERNATIONAL

Quality Gifts, Silk Flowers, Silk Pants,
Trees, Wedding Bouquet

3160 Eglinton Ave. EastUnit 9
Scarborough, ON.
M1J 2H4

**Tel: 416 265 5230**

www.padippakam.com






# K.M. ENTERPRISE

Tel: (416) 289 1730 Fax: (416) 289 6425

**DRY CLEANING SERVICE**

குறைந்த செலவில் ஒரு நாளில்
பெற்றுக் கொள்ளலாம்
(416) 289 1730



**Service**
Fax, Photocopy
Video Transfer
PAL - SECAM - NTSC
Greeting Cards
Stamps& Gift Items



**42 Tuxedo Crt, Scarborough, ON. M1G 3S3**
**Markham/ Ellesmere**

புதிய நிர்வாகத்தின் கீழ்

# TUXEDO GROCERIES

## Tel: (416) 438 1299

Sri Lankan, East - West Indian Groceries
Fresh and Frozen

**இலங்கை, இந்திய, மேற்கிந்திய, கிழக்காசிய,**
**கனடிய உணவுப் பொருட்கள், மளிகைச் சாமான்கள் மரக்கறிகள் யாவும்**
**மிகக் குறைந்த விலையில்**
**இலங்கை, இந்திய பத்திரிகைகள், சஞ்சிகைகள்**
**வீடியோ, ஓடியோ, CD**
**வீடியோ பிரதி மாற்றம் PAL to NTSC to PAL**
**அனைத்தையும் மலிவான விலையில் தரமான**
**பொருட்களை பெற்றுக் கொள்ளலாம்.**


படிப்பகம்

www.padippakam.com




# HOPPER HUT

**A TASTE OF SRILANKAN & INDIAN FOOD**
**Dine - in Take Out & Catering**

**Uniformed Catering Services Available for Weddings, Birthdays & Other Special Occasions**

**TEL: (416) 299 - 4311**

**880 Ellesmere Road (At Kennedy) Unit 215, Scarborough, Ontario**

அப்பம் - Hoppers
முட்டை அப்பம்
பால் அப்பம்
வெள்ளை அப்பம்

வாழையிலையில் கட்டிய பொதி சோறு
Lamprice,
மரக்கறி, மீன், நண்டு, இறால்,
கணவாய், ஆட்டிறைச்சி,
கோழியிறைச்சி, மரக்கறி சோறு கறி

ரொட்ட வகைகள்
வீச்சு ரொட்டி
முட்டை ரொட்டி
மட்டின் ரொட்டி
மரக்கறி ரொட்டி
கொத்து ரொட்டி

தோசை
மசாலா தோசை
நெய் தோசை
பேப்பர் தோசை

பரோட்டா பிட்டு
இடியப்பம் இட்டலி

Rolls - ரோல்ஸ்
மட்டன், மரக்கறி

Cutlets - கட்லட்ஸ்
மீன், மட்டன், மரக்கறி

Patties - பற்றிஸ்
மீன், மட்டன், மரக்கறி

வடை
உழுந்து, கடலை, கீரை, சூசியம்
போண்டா

Buns - பணிஸ்
சீனி சம்பல், மீன், மட்டன்

Desserts
இனிப்பு ஆகராங்கள்
பல்வேறு வகையான புடிங்
Puddings

சகல தமிழ் பலகாரவகைகள்
அனைத்தும் ஓடருக்குச் செய்து
கொடுக்கப்படும்

Special - இடியப்பம்,
சொதி, சம்பலுடன்
அதி விசேட விலையில்

வெள்ளி ஸ்பெஷல்
மெட்ராஸ் தாளி - Thali
5 மரக்கறிகளுடன் பாயாசம், அப்பளம், ரசம்,
மிளகாய்ப் பொரியல்

**திருமணம், பிறந்தநாள், மற்றும் வைபவங்களுக்கும் சிறந்த முறையில் சீருடையுடன் உணவு பரிமாறப்படும்.**


படிப்பகம்

www.padippakam.com




# LAW OFFICES

## யசோ சின்னத்துரை

பரிஸ்டர், சொலிசிற்றர் & நொத்தாரிஸ்

- வீடு கொள்முதல், விற்பனை – உறுதி எழுதுதல்.
- வர்த்தக ஸ்தாபனங்கள் கொள்முதல், விற்பனை, பதிவு சிவில் வழக்குகள், முக்கியமாக சமரச வழியில் பிணக்குகளைத் தீர்த்தல்.
- குடிவரவு அகதி விசாரணை குடும்ப விவகார சட்ட உதவி, பிரதிநிதித்துவம்.
- உயில் தத்துவப் பத்திரங்கள் தயாரித்து அத்தாட்சிப் படுத்துதல்.
- சத்தியப் பத்திரம் தயாரித்து அத்தாட்சிப் படுத்துதல்
- மற்றும் பொதுத் தேவைகளுக்கான சட்ட ஆலோசனைகளும் வழங்கப்படும்

**2555 Eglinton Ave. E., Suite 204,**
**(at Midland)**
**Scarborough ON M1K 5J1**

**Tel: (416) 265–3456**
**Fax: (416) 265–2770**

வீடு உறுதி எழுதுவதற்கு எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

## Yaso Sinnadurai

Barrister & Solicitor, Notary Public

- Real Estate - Home Purchase, Sales and Mortgage.
- Commercial Law, Commercial and Residential Lease.
- Civil Litigation, with focus on Alternate Dispute Resolution (ADR).
- Immigration and Refugee Law.
- Family Law (uncontested).
  Last Will
- Power of Attorney and Statutory Declarations.

• Consultations by appointments only.

★ அலுவலகங்களில் நேரடியாகச் சந்திப்பதற்கு தயவுசெய்து முன்கூட்டியே நேரம் ஒழுங்கு செய்து கொள்ளவும்.

**Mississauga Branch Office:**
**3038 Hurontario St., Suite 203,**
**(Just North of Dundas Street)**

**Tel: (905) 306–1100**

மிசிசாகா, ஓக்வில், பிறாம்ரன், எற்றபிக்கோ ஆகிய நகரங்களில் இருந்து எமது சேவையை நாடுபவர்கள் எமது மிசிசாகா அலுவலகத்தின் ஊடாகவும் பெற்றுக்கொள்ளமுடியும்.


படிப்பகம்

www.padippakam.com



# Sunflowers FURNITURE



**Tel: (416) 609-8556**







எங்கும்
இல்லாத
மலிவு விலையில்
அனைத்துத்
தளபாடங்களையும்
வாங்கிட

**ஒருமுறை வாருங்கள் உண்மைதானா பாருங்கள்!**

**3024 Kennedy Road (Kennedy & Finch), Scarborough, ON.**

www.padippakam.com






# DR. RAJ SIVENDRA & ASSOCIATES

## FAMILY DENTISTRY

WE ARE EXPANDING AGAIN !
At Parkway we will be in a new facility twice our
Present capacity.

We will be located across from Shoppers Drug Mart and beside McDonalds Expected opening will be September 1999
Thank you for your support

**GENERAL DENTISTRY**

Dr. Raj Sivendra
Dr. Joseph Bencak
Dr. Vince Fava
Dr. Alan Fernandes
Dr. Andrew Penuvchev
Dr. Kim Le
Dr. Joyce Lun
Dr. Rob Pacione

**SPECIALTY SERVICES**

Dr. Owen Symington
- Oral Surgeon
Dr. David Gainey
- Periodontist
Dr. Rob Pasch
- Orthodontist / GP
Dr. David Shearer
Dr. Nancy Lee
- Orthodontists
Dr. Deborah Lin
- Pediatric Dentistry
Dr. Joseph Rubner
Endodontist

**DENTURE THERAPISTS**

Sam Spataro
Sal Spataro



**PARKWAY MALL DENTAL OFFICE**

PARKWAY MALL, 85 Ellesmere Road
Scarborough, Ontario

OPEN MALL HOURS

**(416) 441 2565**

**PICKERING TOWN CENTRE DENTAL OFFICE**

Upper Level
South Zellers Corridor
Near Info Centre
Pickering, Ontario

OPEN MALL HOURS

**(905) 837 2322**

www.padippakam.com




# SAMY & SONS

Wholesalers & Retailers



புத்தம் புதிய டிசைன்களில் வெளியூர்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவநாகரிக மங்கையர், ஆடவர், சிறுவர் சிறுமியருக்கான சகலவிதமான உடுப்பு வகைகள்

தரமான 22 கரட் தங்க நகைகள்

தரமான CD மற்றும் ஓடியோ, வீடியோ கசற்றுக்களை விற்பனைக்கும் வாடகைக்கும் பெற்றுக் கொள்ளலாம்

இலங்கை, இந்தியா, சிங்கப்பூர் மற்றும் ஓரோப்பிய நாடுகளுக்கான துரித பணமாற்று சேவை

கதிரைகள், தலைப்பாகை, சோடனை நகைகள் வாடகைக்கு எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

சிற்றுண்டி வகைகள் உண்டு

Fax Service உண்டு

வீடியோ பிரதிமாற்றம் Any System to Any System

Textiles, Jewellery, Craft Items. Gift Items, Money Transfer, Audio, Video CD Sales & Rental

பியானோ சங்கீத வகுப்புகள் நடத்தப்படுகின்றன

# சாமி அன் சன்ஸ்

தொடர்புகளுக்கு: நடா or சுந்தர்

**Tel: (416) 298 1598 Fax: (416) 298 2849**

1884B Kennedy Rd at Ellesmere, Scarborough

(Highland Farm, AJB Travelsக்கு அருகில்)

www.padippakam.com






# ELLESMERE

## Físh and Meat Market

**Direct Importers of Fresh fish From Florida,**

**Trinidad & Sri Lanka**

★ Fish ★ Meat ★ Frozen Foods

உங்களுக்குத் தேவையான
அனைத்து கடலுணவு மற்றும்
ஆடு, மாடு, காட்டுப் பன்றி,
மரை, மான், விறாத்துக் குஞ்சு,
கோழி அனைத்து உடன்
இறைச்சி வகைகளுக்கும்
நீங்கள் நாடுங்கள்





## எல்ஸ்மெயர்

### பி(f)ஸ் & மீட் மார்க்கட்

1243 Ellesmere Road, Scarborough, Ont. M1P 2X8

**Tel/Fax: (416) 285-8558**

www.padippakam.com






படிப்பகம்

www.padippakam.com






# PARIMALA Variety & Gift

இலங்கை இந்திய மளிகைப்பொருட்கள் மரக்கறி வகைகள்,
பால் வகைகள், போட்டோ கொப்பி Loto 6/49

அன்பளிப்புப் பொருட்கள்

1890 Kennedy Road, Scarborough, ON
(Kennedy & Ellesmere)

**(416) 412 626**

துரித பணமாற்றுச் சேவை
கொழும்பு, யாழ்ப்பாணம், சிங்கப்பூர், இந்தியா
ஐரோப்பிய நாடுகள்

தொடர்பு: Peler 412 6261

# S.K. MARKET INC

உங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய, கனடிய உணவுப் பொருட்கள்

உடன் இறைச்சி, மரக்கறி பழங்கள், மீன், நண்டு, இறால் மற்றும் கடலுணவுகள்
வாரத்தில் 7 நாட்களும் உடன் இறைச்சி பங்கு கிடைக்கும்

SriLankan, Indian & Canadian Groceries, Fresh sea food,
Special goat meat, Fresh Fruits & more....

தரமான பொருட்கள் - சிறந்த சேவை

880 Ellesmere Road Unit #8, Scarborough, ON

**Tel: (416) 292 0514, (416) 332 8511**


படிப்பகம்

www.padippakam.com




# HOMELIFE

Power of sale tPLfs; 5% முதலுடன் சட்ட நுணுக்கத்துடன் வாங்கிக்கொடுக்கப்படும்.

மாதாமாதம் நீங்கள் செலுத்தும் வாடகையை உங்கள் சொந்த வீட்டின் கட்டுப்பணமாய்ச் செலுத்தி ஸ்திரமான முதலீட்டை உருவாக்குங்கள்.

வீட்டின் விலையில் 95மூ வங்கிக் கடனாய்ப் பெற்றுக் கொடுக்கப்படும்.

வங்கியில் பிரசுரிக்கப்பட்ட வட்டி வீதத்திலும் (1/4 -1/2) குறைவாக அடமானவட்டி ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (சில விதி விலக்குண்டு)

வங்கி வட்டி வீதத்தை விட 1% குறைவாக தகுதி உடையவர்களுக்கு கடன் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

## STEVE S. PRADEEPAN

**Homelife/Champions**
**Realty Inc:- Realtor Member**
**8130 Sheppard Ave. E, Suite 206**
**Scarborough, Ont, M1B3W3.**

**Sales Associate**
**Bus:- (416) 281-8090**
**Res:- (416) 724-5663**
**Fax:- (416) 281-2753.**
**24 Hours Pager.**

www.padippakam.com






With Best Compliments

# MANO WEDDING ARRANGEMENTS AND PARTY SUPPLY

திருமணம், பிறந்தநாள், பூப்புனித நீராட்டுவிழா
ஒன்றுகூடல்

3 மண்டபங்கள் ஒரே இடத்தில் இருக்கின்றன
(50 இலிருந்து 700 ஆட்கள்வரை)

**Phone - 264 0550, 420 8683**

# MAJOR FAHIM A. MIRZA

B.Sc., Engg; MASCE
Sales Representative

Satisfied client is my
"GOAL"
Street to Street I shall
"ROAM"
To buy you a comfy
"HOME"
Before you know it is
"SOLD"

Because Strategies others are missing
Doing the little things that make a difference
Giving you the peace of mind

HomeLife/ Superstars
23 Westmore Drive, Unit 102
Rexdale, Ontario M9V 3Y7

**Bus: (416) 740 4000**
**Res: (416) 423 5186**
**Fax: (416) 740 8314**
E-Mail: fmirza@sprint.ca

Not intended to solicit properties currenly listed for sale.


படிப்பகம்

www.padippakam.com




# வாழ்த்துகள்!

# DRIVING SCHOOL

Malton - Mississauga

STOP RAMP SPEED50 km/h

Excellent Rates
Car Available For Govt. Road Test
Insurance Saving upto 41 %
Free Pick up

7 நாட்களிலும் விரும்பிய நேரத்தில் பயிற்சி வகுப்புக்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் பயிற்சி வகுப்புக்கள். அரச அனுமதி பெற்ற சிறந்த சாரதிப் பயிற்சியாளர்

# Raja Sellathurai

(Licenced Instructor)


# Tel: (416) 672 - 6987

www.padippakam.com







# வாழ்த்துகள்!





# QUALITY BREAD BAKERY

Different Kinds of Bread, Buns, Cakes, Muffins & Much More.....

For your parties you can order short eats

1221 Markham Road, Unit #13, Scarborough, Ont.
(Markham & Ellesmere)

**Tel: (416) 431 9829**

www.padippakam.com



With Best Compliments
from

# GREENLANDS GROCERIES

for

All Your Grocery Needs!!

SriLankan, East & West Indian grocery needs!

5633, Finch Ave. East at Tapscott, Unit 7&8

Tel: (416) 609 3333

Fax: (416) 609 3911

படிப்பகம்

www.padippakam.com





# பொன்வயலில் விளைந்த அரும் கலைஞர்கள்

இயல் :

சிறுகதை :

இரசிகமணி கனக. செந்திநாதன்
கவிஞர் வி. கந்தவனம்
மு. க. சுப்பிரமணியம்
வேல். அமுதன்
மு. திருநாவுக்கரசு
வீ. எஸ். சுப்பிரமணியம்
மு. க. சு. சிவகுமாரன்
ஐ. ஜெகதீஸ்வரன்
அ. பார்த்திபன்
உஷா கனகரத்தினம்
கவிதா விக்கினேஸ்வரன்

பாடநூல்கள் :

பண்டிதர் வ. நடராசா
கனக. செந்திநாதன்
வி. கந்தவனம்

கவிதை :

பொன் பரமானந்தர்
கவிஞர் வி. கந்தவனம்
வ. இளையதம்பி
ஆ. மகாதேவன்
ஐ. ஜெகதீஸ்வரன்
த. ஐங்கரன்
கு. குகனேசன் (குகதாசன்)
மு. கிருஷ்ணகாந்தன்

ஆய்வுக்கட்டுரைகள் :

கனக செந்திநாதன்
பேராசிரியர் அ. சிவராசா
இரா. கனகரத்தினம்
வி. கந்தவனம்
ஏ. ரி. பொன்னுத்துரை
க. சிவசுப்பிரமணயம் (ஆண்டி)
கலாகேசரி ஆ. தம்பித்துரை

இசை :

வாய்பாட்டு :

சின்னையா மகேஸ்வரி
இரசரத்தினம் செல்வலட்சுமி
சாரதா நடராசா (மனோரஞ்சிதம்)
பாரதா சொர்ணகுலசிங்கம்
(மனோரஞ்சிதம்)

நாடகம் :

கூத்து :

'உக்கிரசேனன்' வைத்தியலிங்கம்
'அனுமார்' கந்தையா
'கோமாளி' கந்தையா
முத்துக்குட்டி கந்தையா
ஆறுமுகம் சின்னததுரை
தம்பிநாதர்
செல்லத்துரை
'மேனகை' பொன்னம்பலம்

நாடகம் :

கே. கே. வி. செல்லையா
ஏ. ரி. பொன்னுத்துரை
அ. சிவதாசன்
க. சிவதாசன்
கோபிநாத்
க. கந்தசாமி
சி. நடராசா

பரதக்கலை :

தயாநிதி மோகன்
கவிதா சிவகனேசன்
கீதா செல்லத்துரை
சசிகலா செல்லத்துரை
அன்பரசி சிவதாசன்
ராதிகா சிவபாதசுந்தரம்

காவடி :

வையாபுரி
இந்துதாசன்
தம்பிராசா

www.padippakam.com



கரகம் :

குலத்துங்கர்
வையாபுரி

பிறதுறைகள் :

ஈழகேசரி பொன்னையா
மு. க. சுப்பிரமணியம்
இரா. கனகரத்தினம்
அ. சிவதாசன்
மு. க. சு. சிவகுமாரன்
கவிதா விக்கினேஸ்வரன்
நிருபா தங்கவேற்பிள்ளை

வானொலி :

துளசி பிரபாகரன்
(இசைத்துறை துனைத்தயாரிப்பாளர்)

தொலைக்காட்சி :

ரேலங்கி செல்வராஜா

சினிமா :

அ. சிவதாசன்

சிற்பம், சித்திரம் :

கலாகேசரி ஆ. தம்பித்துரை
கலைஞானி அ. செல்வரத்தினம்
மு. க. சு. சிவகுமாரன்

புகைப்படக்கலை :

கே. கே. வி. செல்லையா
அ. செல்வரத்தினம்

அ. அருள்தாசன்
நா. சிதம்பரநாதன்
எஸ். திருலோகச்சந்திரன்
எஸ். சிறீஸ்கந்தராஜா
எஸ் சிவராஜா

அச்சகக்கலை :

ஈழகேசரி பொன்னையா
கோ. அப்பாக்குட்டி
மு. க. சுப்பிரமணியம்
மு. சபாரத்தினம்
வே. மகேந்திரன்

நூல்வடிவமைப்பு :

ஆ. முத்தையா
அ. குகதாசன்
வை. ஐயம்பிள்ளை
ஏ. ரி. இராசரத்தினம்

அச்சுக்கோப்பு :

பொ. இராசரத்தினம்
அ. கண்ணப்பன்
வை. பேரம்பலம்
து. பொன்னம்பலம்
சே. சச்சிதானந்தசிவம்
க. வாமதேவன்
அ. சிவபாலன்

அச்சுருவ ஆக்கம் :

அ. குகதாசன்

www.padippakam.com



Century 21.
PERCY FULTON LTD.





AWARD WINNER 1997,1998

* வீடு வாங்க அல்லது விற்க அல்லது ஆலோசனை பெற
தொடர்பு கொள்ளுங்கள்
* Mortgage வசதி செய்து தரப்படும்
Special Rate for our clients from Royal Bank

உங்கள் Real Estate தேவைகளுக்கு நம்பிக்கையுடன்
அழையுங்கள்

# ரவி கனா

Call: Ravi Kana
Your Trusted Efficient and Friendly Sales Rep.

Buy or Sell with Ravi and Collect Free Air Miles

**Bus: (416) 298 8200**
**Res: (416) 609 3519**
**Pager: (416) 714 0733**
**Cel: (416) 725 7284**

www.padippakam.com





வெற்றிமணி ஆசிரியர் திரு. மு. க. சு. சிவகுமாரன் அவர்களின் பாராட்டுக் கூட்டத்தில் திரு. சிவகுமாரன் அவர்கள் உரையாற்றிக் கொண்டிருக்கிறார்கள்



திரு. இரா. கனகரத்தினம் அவர்கள்
"ஆவணஞானி" பட்டம் வழங்கி கௌரவிக்கப்படுகிறார்

www.padippakam.com





# குழு உறுப்பினர்

ஆகஸ்ட் 7, 1993 லிருந்து ஆகஸ்ட் 1, 1994 வரை

தலைவர்: திரு. வி. கந்தவனம்.
உபதலைவர்: திரு. அ. செல்லத்துரை.
செயலாளர்: திரு. து. ஈஸ்வரகுமார்.
உப செயலாளர்: திரு. திரு. இ. சுகுமார்.
பொருளாளர்: திரு. ஆர். சத்தியமூர்த்தி.
உப பொருளாளர்: திரு. பொ. தங்கவேற்பிள்ளை.
உறுப்பினர்கள்: திருமதி. பு. குமாரகுலசிங்கம்.
திருமதி. ஜெஸ்ரீ கருணாகரன்.
திரு. செ. நந்தகுமார்.

ஆகஸ்ட் 1, 1994 லிருந்து ஆகஸ்ட் 7, 1995 வரை

தலைவர்: திரு. வி. கந்தவனம்.
உபதலைவர்: திரு. அ. செல்லத்துரை.
செயலாளர்: திரு. து. ஈஸ்வரகுமார்.
உப செயலாளர்: திரு. திரு. இ. சுகுமார்.
பொருளாளர்: திரு. ஆர். சத்தியமூர்த்தி.
உப பொருளாளர்: திரு. செ. அசோகமூர்த்தி
உறுப்பினர்கள்: திருமதி. புஷ்பராணி. குமாரகுலசிங்கம்.
திருமதி. நிருபா. தங்கவேற்பிள்ளை.
திரு. செ. நந்தகுமார்.
திரு. இ. ரஞ்சன்.

ஆகஸ்ட் 7, 1995 லிருந்து ஆகஸ்ட் 5, 1996 வரை

தலைவர்: திருமதி. து. சத்தியபாமா.
உபதலைவர்: திரு. க. வைத்தியநாதன்.
செயலாளர்: திரு. செ. அசோகமூர்த்தி.
உப செயலாளர்: திருமதி. நிருபா. தங்கவேற்பிள்ளை.
பொருளாளர்: திரு. இ. றஞ்சன்.
உறுப்பினர்கள்: திரு. இ. சத்தியமூர்த்தி.
செல்வி. வாணி. கந்தவனம்
செல்வி. கௌசல்யா. குமாரகுலசிங்கம்.
திரு. இ. இராசரட்ணம்.

ஆகஸ்ட் 5, 1996 லிருந்து ஆகஸ்ட் 4, 1997 வரை

தலைவர்: திருமதி. து. சத்தியபாமா.
உபதலைவர்: திரு. க. வைத்தியநாதன்.
செயலாளர்: திரு. செ. அசோகமூர்த்தி.
உப செயலாளர்: திரு. செ. வசந்தகுமார்.
பொருளாளர்: திரு. இ. றஞ்சன்.
உறுப்பினர்கள்: திரு. இ. சத்தியமூர்த்தி.
திருமதி. நிருபா. தங்கவேற்பிள்ளை.
திரு. க. குகநேசன்.
திருமதி. மீரா. ஜெயக்குமார்

ஆகஸ்ட் 4, 1997 லிருந்து ஆகஸ்ட் 3, 1998 வரை

தலைவர்: திரு. ஐ. ஜெகதீஸ்வரன்.
உபதலைவர்: திரு. இ. சுகுமார்.
செயலாளர்: திரு. த. சிவலிங்கம்.
உப செயலாளர்: திரு. க. வாரணன்.
பொருளாளர்: திரு. க. குகநேசன்.
உறுப்பினர்கள்: திரு. செ. வசந்தகுமார்.
திருமதி. சிவாஜினி. மகாநந்தன்.
திரு. இ. இராஜரட்னம்
திரு. செ. அருட்செல்வம்.
திரு. த. அரவிந்தன்.

ஆகஸ்ட் 3. 1998 லிருந்து ஆகஸ்ட் 15, 1999 வரை

தலைவர்: திரு. ஐ. ஜெகதீஸ்வரன்.
உபதலைவர்: டாக்டர். க. வைத்தியநாதன்.
செயலாளர்: திரு. த. சிவலிங்கம்.
உப செயலாளர்: திரு. க. வாரணன்.
பொருளாளர்: திரு. க. குகநேசன்.
உபபொருளாளர்: செல்வி. கீதா. செல்லத்துரை.
உறுப்பினர்கள் து. ஈஸ்வரகுமார்.
செல்வி. சுரேகா. குகநேசன்.
திரு. த. அரவிந்தன்.
திரு. இ. ரஞ்சன்.
திருமதி. மீரா. ஜெயக்குமார்.
திருமதி. தர்சினி. ஸ்ரீ.
திரு. வே. இராசதுரை.

படிப்பகம்

www.padippakam.com



அன்று ஆகஸ்ட் 7ஆம் திகதி 1993ஆம் ஆண்டு, கிறீன் கபின் உணவுச்சாலையில் திரு. வி. கந்தவனம் அவர்கள் தலைமையில் இச் சபை அங்குரார்பனம் செய்யப்பட்ட பொழுது ஏகோபித்த வரவேற்புக் கிடைத்தது. ஈழத்தில் அல்லற் படும் நம்மவர்களின் புனர்வாழ்வுக்காக, அவர்களுடன் பல தடவைகள் தொடர்பு கொண்டு, நிதி சேகரித்து அங்குள்ள நற்பணி மன்றங்களுக்கு அனுப்பப்பட்டது. அவர்களின் இரண்டாண்டு நிர்வாகத்தின் பின் அடுத்த ஈராண்டுகள் திருமதி. ரி. சத்தியபாமா தலைமையில் புதிய அங்கத்தவர்களுடன், ஆகஸ்ட் 4, 1997 வரை நிர்வகிக்கப்பட்டது. 1996ஆம் ஆண்டு நவம்பர் 2ஆம், 3ஆம் திகதி ஆகிய இரண்டு நாட்கள், குரும்பசிட்டி இரா. கனகரத்தினதும், திருமதி பவளராணியினதும் 40 வருடகால உழைப்பின் வரலாற்றுச் சேகரிப்புக்களை, கௌரவிக்கும் பொருட்டு, இலவசமாக மாபெரும் உலகத்தமிழரின் ஆவணக்கண்காட்சியும் பாராட்டு விழாவும் வோபன் கல்லூரியில் கோலாகலமாக நடத்தியதுடன் அவர்களுக்கு 'ஆவணஞானி' எனும் பட்டம் வழங்கியும் கௌரவித்தது. அவர்களால், தமிழீழ மீடபுப்போராட்டத்தில் தமது இன்னுயிர்களை அர்ப்பணித்த எமது கிராமத்துப் போராளிகளை நினைவுகூருமுகமாக செஞ்சோலை நிறுவனத்திற்கு நிதி உதவி செய்யப்பட்டது. புதிய நிர்வாக சபை 1997அம் ஆண்டு 3ஆம் திததி ஐ. ஜெகதீஸ்வரன் தலைமையில் ஆரம்பித்து இன்று வரை இயங்கி வருகிறது. இக்காலப் பகுதியில் எங்கள் சபைக்குரிய இலச்சனை ஒன்றும் தயாரிக்கப்பட்டது. ஒக்டோபர் 11, 1998ல் நடத்திய நிதியுதவிக்காட்சி மூலம் பணம் சேகரிக்கப்பட்டு குரும்பசிட்டி மக்களின் புனர் வாழ்வுக்காக அனுப்பப்பட்டது. ஜேர்மனியிலிருந்து வருகை புரிந்த வெற்றிமணி ஆசிரியரும் பிரபல சிற்ப, ஓவியக் கலைஞருமான திரு. மு. க. சு. சிவகுமாரன் அவர்களைக் கௌரவிப்பதற்காக பெப்பிரவரி 14, 1999ல் பாராட்டக் கூட்டமும் இராப்போசன விருந்தும் நடாத்தியது. எமது சங்கம் ஒரு இலாப நோக்கற்ற கலாசசார நிறுவனமாக ஜூன் 4, 1999ல் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அத்துடன் எமது சங்கத்திற்கான அமைப்புவிதி ஒன்று நிர்வாக சபையின் பூரண ஒத்துழைப்போடு தயாரிக்கப்பட்டு பொதுச்சபையின் அங்கிகாரத்திற்கென முன்வைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது கலை விழா நடத்துவதுடன் நின்றுவிடாது ஓர் மலரும் வெளியிடப்படுகின்றது. மேலும் 1993ஆம் ஆண்டு தொடக்கம், ஆண்டுதோறும் குரும்பசிட்டி மக்களின் ஒன்று கூடல் ஓழுங்குசெய்யப்பட்டு சிறார்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்தி, பரிசில்களும் வழங்கி ஊக்குவித்து வருகிறது.

படிப்பகம்

www.padippakam.com





# நன்றிகள்!

இம் மலர் தொடர்பாக

ஆக்கங்களை கணனி மயப்படுத்த உதவிய செல்வன் வாரணன் கந்தவனம், திருமதி ராகினி தவராஜா, திரு. த. சிவலிங்கம் ஆகியோர்க்கும்,
ஆக்கங்களை சரிபார்த்து ஆலோசனை வழங்கிய கவிஞர் வி. கந்தவனம் அவர்களுக்கும்,
தகவல்கள் தந்துதவிய திரு. பொன். பாலகுமார், செல்வன் நிலக்ஷன் சுவர்ணராஜா, தமிழர்தகவல் எஸ். திருச்செல்வம், திரு. மு. க. சு. சிவகுமாரன் அவர்களுக்கும்
வெளியிடுவதற்கான செலவினை ஏற்றுக்கொண்ட அனைத்து விளம்பரதாரருக்கும்
எழிலுற வடிவமைத்துத் தந்த தமிழ் கிறியேற்றேஸ் விஜய் ஆனந்த் அவர்களுக்கும்
முகப்பு அட்டையை சிறப்புற வடிவமைத்துத் தந்த வெற்றிமணி ஆசிரியர் மு. க. சு. சிவகுமாரன் அவர்களுக்கும்
குறுகிய கால அவகாசத்தில் சிறப்புற அச்சிட்டு உதவிய விவேகா அச்சகத்தினருக்கும்
இன்னும் இங்கு பெயர் குறிப்பிடத் தவறிய அனைத்துப் பங்காளர்களுக்கும்
எமது இதயம் கனிந்த நன்றி.

கலை நிகழ்வு தொடர்பாக
அனைத்துவித நிகழ்ச்சிகளிலும் அக்கறையோடு பங்குபற்றி சிறப்பித்த சகல கலைஞர்களுக்கும், நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களுக்கும்
விழா மண்டபத்தினை தந்துதவிய ரொறன்ரோ கத்தோலிக்க கல்விச்சபையினருக்கும்
விழா சிறப்புறவமைய ஒத்துழைத்த அனைத்து அங்கத்தினருக்கும்
விழாவிற்குச் சமூகம் தந்து சிறப்பித்த அனைவர்க்கும்
இன்னும் இங்கு பெயர் குறிப்பிடத் தவறிய அனைத்துப் பங்காளர்களுக்கும்
எமது மனமுவந்த நன்றி.

www.padippakam.com


வாழ்த்துகிறோம்!



YARLTON FOOD STORE

இலங்கை இந்திய, கனடிய உணவுப் பொருட்கள்,
உடன் கடலுணவுகள், இறைச்சி வகைகள்
என்பனவற்றை தரமாகவும், மலிவாகவும்,
உயர்வாகவும் பெற்றுக் கொள்ளலாம்

2104 BRIDLETOWN CR., SCARBOROUGH, ON

Tel: (416) 494 9494

Fax: (416) 502 0322


படிப்பகம்

www.padippakam.com

அழிக்கப்பட்ட
எம் கிராமத்தின்
அந்திமக் காலத்து
எச்சங்கள்
விதைக்கப்பட்ட
மாற்று மண்ணிலும்
வீரியத்தோடு....

கலைவாணிகளாய்...
கவி பாரதிகளாய்...

குரும்பசிட்டி நலன்புரி சபை - கனடா
வெளியீடு - ஆகஸ்ட் 1999.

Thamil Creators : Viveka

படிப்பகம்